கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை


# 144

புரட்டாதி 2020

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்





பேராசிரியர் சபா.ஜெயராசா
சி.ரமேஷ்
கி.நடராசா
இ.சு.முரளிதரன்
க.பரணீதரன்
எம்.கே.முருகானந்தன்
பா.இரகுவரன்
குந்தவை
கிருபானந்தகுமாரன்
முல்லைஅமுதன்
தேவகாந்தன்
ரோகிலன்
நாச்சியாதீவு பர்வீன்
வேதா.இலங்காதிலகம்
த.கதுர்ஜன்
இராஜகிருபன்
பனைமீன் நாடன்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்
உடப்பூர் வீரசொக்கன்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2020 - புரட்டாதி

# பொருளடக்கம்






கட்டுரைகள்

**வடமராட்சியைக் களமாகக் கொண்டு வெளிவந்த சஞ்சிகைகள் - ஓர் அறிமுகம்**
க.பரணீதரன் - 03

**தமிழ் இலக்கிய வரலாற்றில் குழந்தைக் கவிதையின் செல்நெறிப் பாங்கு**
கி.நடராசா

**பூக்கோ - அதிகாரம் - கலைகள் - சடங்குகள்**
பேராசிரியர் சபா.ஜெயராசா - 24

**இப்ராஹிம் அல்காஷி நவீன இந்திய அரங்கின் அடையாளம் விடைபெற்றுக் கொண்டது அவ்வடையாளம்**
கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்

**கோடையாய்த் தகிக்கும் மணல் மேட்டில் கொட்டித் தீர்க்கும் மணல்**
சி.ரமேஷ்

**இசைஞானியும் வயலினும்**
ஜெயபாரதி கௌசிகன்

**தொண்டைமானாறு முதல் கெருடாவில் பருத்தித்துறை தும்பளை வரை...**
பா.இரகுவரன் - 42

**டாக்குத்தரின் தொணதொணப்பு - 4 நோயாளியைத் திட்டாதீர்கள் காரணியை விரட்டுங்கள்**
எம்.கே.முருகானந்தன் - 47

சிறுகதைகள்

குந்தவை - 09
தேவகாந்தன் - 19
எஸ்.கிருபானந்தகுமாரன் - 26
ரோகில் அன்னம்மா - 32

கவிதைகள்

மீரா சிவகாமி - 07
த.கதுர்ஜன் - 08
வானதி வேதா. இலங்கா திலகம் - 08
நா.நவராஜ் - 08
நாச்சியாதீவு பர்வீன் - 11
யாழவன் - 34
இராஜகிருபன் - 39






நூல் விமர்சனம்

உடப்பூர் வீரசொக்கன் - 45

அட்டைப்படம்

நன்றி இணையம்

# ஜீவநதி

**2020 புரட்டாதி இதழ் - 144**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


## திறனாய்வின் பொருத்தப்பாடு

மதிப்பீடு என்பது ஒரு விடயத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதாகும். எண் சார்ந்த அளவீட்டுக் கணியம்(quantity) பற்றிய மதிப்பீட்டை அளவிடு கருவி ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்யும்போது அளவிடு கருவி சம்பந்தமாக இரு முக்கிய அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. ஒன்று நம்பகம்; மற்றொன்று தகுதி. அளவிடு கருவியொன்று எதனை அளவிடுகின்றதோ அதனை எவ்வயவு தூரம் திருத்தமாக அளவிடுகின்றது என்பதைக் குறிப்பது "நம்பகம்" ஆகும். நம்பகமான அளவீட்டுக் கருவியொன்று ஒரே விடயத்தை எத்தனை முறை அளந்தாலும் அல்லது அதே அளவீட்டுக் கருவியைப் பலர் பயன்படுத்தினும் ஒரே பெறுமானத்தைத் தர வேண்டும். இதேவேளை, தகுதி என்பது அளவிட வேண்டியது எதுவோ அதனை எவ்வளவு தூரம் திருத்தமாக அளவிடுகின்றது என்பதைக் குறிக்கும். இங்கு ஓர் அளவீட்டுக் கருவி நம்பகத் தன்மை வாய்ந்ததாக இருப்பதோடு குறித்த விடயத்தை அளவீடு செய்வதற்குரிய பொருத்தப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

இதே போலத்தாதன் கலை இலக்கியப் படைப்புகள் குறித்த திறனாய்வுகளும் அமைய வேண்டும். நவீன சிந்தனை வளர்ச்சியிலே "ரசனை" என்பதற்கும் அப்பால் பல்வேறு திறனாய்வுக் கோட்பாடுகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.. ஆயினும், குறித்த நவீன திறனாய்வுக் கோட்பாடு, ஒரு படைப்பை மதிப்பீடு செய்வதற்கு எத்துணைப் பொருத்தமானது என்பதை நோக்க வேண்டியதும் அவசியமாகும். நவீன திறனாய்வாளர்கள் நவீன திறனாய்வுக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அக்கோட்பாட்டின் பொருத்தப்பாடு பற்றிய தெளிவு திறனாய்வாளர்களுக்கு வேண்டியதாகும்.

-க.பரணீதரன்

### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ் - பூபாலசிங்கம் புத்தகசாலை,
புக்லப் - திருநெல்வேலி,
செட்டித்தெரு - பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி
ஸ்ரீலங்கா புத்தகசாலை - நல்லூர்




# வடமராட்சியை களமாகக் கொண்டு வெளிவந்த சஞ்சிகைகள் - ஓர் அறிமுகம்

க.பரணீதரன்

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி அமைந்துள்ளது. கல்வியியலாளர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள், கலாநிதிகள், சஞ்சிகையாளர்கள், பதிப்பாளர்கள், நாடககாரர்கள் என பல்துறை சார்ந்த விற்பன்னர்களையும் கொண்ட பிரதேசமாக வடமராட்சி விளங்குகின்றது. ஈழத்து கல்வி, இலக்கிய வளர்ச்சிக்கு வடமராட்சி மண் பெற்றெடுத்த புதல்வர்கள் பலர் ஆற்றிய சேவை அளப்பரியது. இலக்கிய விழாக்கள், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், நாடக நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என இப்பிரதேச விழாக்கள் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன. இந்த பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேலான எழுத்தாளர்கள் தோன்றியுள்ளார்கள். பல நூல்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர ஈழத்து தமிழர்களுக்கு வளம் சேர்க்கும் சஞ்சிகைகளும் இந்த பிரதேசத்தில் இருந்து வெளியாகியுள்ளன. அவற்றைப் பற்றியதாகவே இச்சிறுகட்டுரை அமைகின்றது. இங்கு குறிப்பிடப்படும் சஞ்சிகைகள் தவிர வேறு சிலவும் இங்கிருந்து வெளிவந்திருக்க கூடும், நீண்ட ஆய்வுத் தேடலின் பின் கிடைத்த இதழ்களைக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆய்வும் - தேடலும் இன்னும் விரிவு பெறும் போது மேலும் சில சஞ்சிகைகளை பெறலாம் என்ற நம்பிக்கையுடனும், வாசகர்கள் மேலதிக சஞ்சிகைகள் இருப்பின் அவற்றை அறியத் தருவார்கள் என்ற நல்லெண்ணத்துடனும் இக்கட்டுரை இங்கு எழுதப்பட்டுள்ளது. வடமராட்சியில் இருந்து வெளியான அனைத்து இதழ்களும் கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவை பற்றிய விரிவான விமர்சன கண்ணோட்டத்திலான கட்டுரையை எதிர்காலத்தில் ஆய்வு செய்து எழுதலாம் என்ற நம்பிக்கையுடன் இந்த அறிமுக கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழில் இதழைக் குறிக்க இதழ், ஏடு, சஞ்சிகை, தாளிகை, பத்திரிகை ஆகிய சொற்களை நீண்ட காலமாக பயன்படுத்தி வருகின்றோம். ஈழத்தை பொறுத்த வரையில் சஞ்சிகை, ஏடு என்பன அதிகம் பயன்பாட்டில் உள்ள சொற்களாக காணப்படுகின்றன. இந்த இதழ்கள் ஒரு காலத்தின் பதிவாகவும், மக்களிடையே விழிப்புணர்வை, ஒழுக்கத்தை, இலக்கியத்தை, ஆன்மீகத்தை, கல்வியை கட்டி எழுப்புவனவாகவும் மக்களின் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வையும் அளிக்கின்றன.

இதழ்கள் பொதுவாக மாதாந்த இதழ், இரு திங்கள் இதழ், காலாண்டு இதழ், அரையாண்டு இதழ், ஆண்டிதழ் என வெளியாகி வருகின்றன. இதழுக்கு பொறுப்பாக பிரதம ஆசிரியரும் அவருக்கு ஒத்தாசையாக துணை ஆசிரியர், நிர்வாக ஆசிரியர், ஆலோசனை குழு, வளஅறிஞர் குழு, பதிப்பாசிரியர்கள் போன்றோர் இருப்பார்கள்.

இதழ்களின் உட்கூறுகளாக, ஆசிரியர் தலையங்கம், சிறுகதை, கவிதை, கட்டுரை, நேர்காணல், நாடகம், துணுக்குகள், கருத்துப்படம், கேள்வி பதில், தொடர்கதை/நாவல், வாசகர் கடிதம், விளையாட்டு, விளம்பரங்கள், நகைச்சுவைத் துணுக்குகள், பத்தி, கலை இலக்கிய உரையாடல்கள், நிகழ்வுப் பதிவுகள், மொழி பெயர்ப்புகள், பயணக் கட்டுரைகள், போட்டிகள் என பல்வேறு அம்சங்கள் வெளியாகின்றன.

காலத்தால் முந்திய இதழாக வல்வெட்டித் துறையில் இருந்து 1883-1884 வரை பொ.ஞானசபா பதிப்பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியான "சைவாபிமானி" யை குறிப்பிட முடிகின்றது. சமய சமூக பணிகளை முதன்மைப்படுத்தியும் இலக்கிய இலக்கண விடயங்களையும் இணைத்தும் இந்த இதழ் வெளியானது. இந்த இதழ் இயற்றமிழ் போதகாசிரியர்

வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களால் வல்வை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகாமையில் ஸ்தாபிக்கப்பட்ட "பாரதி நிலைய முத்திராஷ்சர சாலை" என்ற பெயருள்ள அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1908 இல் வதிரியில் இருந்து வெளியான "ஞானசித்தி" என்னும் சஞ்சிகை வித்துவான் சி.நாகலிங்கம்பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளியாகியுள்ளது. "சைவபோதினி" பருத்தித்துறை சைவப் பிரகாச சபையினரால் சைவ சமயிகளின் முன்னேற்றம் கருதி வெளியிடப்பட்ட மாதப் பத்திரிகையாக குறிப்பிடப்படுகின்றது. 1961 இல் "வெண்தாமரை" என்ற இதழ் கே.ரி.ராஜசிங்கம் அவர்களால் பருத்தித்துறையில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது. 1961 இல் பருத்தித்துறையில் இருந்து "மலர்" என்ற இலக்கிய மாத இதழும் வெளியாகியுள்ளது. "கண்கள்" என்ற இதழ் 1962 இல் அல்வையூர் ஆசிரியர் சு.கணபதிப்பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. தி.மு.க. பாணியில் வெளிவந்த சஞ்சிகையாக இதனை குறிப்பிடுகின்றனர். சு. கணபதிப்பிள்ளை அவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பித்த காலத்தில் இந்த இதழை வெளியீடு செய்தார். 4 இதழ்கள் வெளியாகி இந்த இதழ் தனது வருகையை நிறுத்திக் கொண்டது. பொங்கல் சிறப்பிதழ் ஒன்றும் வெளியாகியுள்ளது. இந்த இதழில் சிறந்த கட்டுரைகள், இனிய கவிதைகள், கேள்வி-பதில், குழந்தை இலக்கியம், சிறுகதை, மொழிபெயர்ப்புகள் வெளியாகியுள்ளதோடு மாணவர்களுக்கு பயன்தர வல்ல பல ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. 1972 இல் வல்வெட்டித்துறையை சேர்ந்த ஈழத்தீபனால் "வாணி" என்ற குடும்ப இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இந்த இதழ் ஒரேயொரு இதழை பிரசுரித்து தன் வருகையை நிறுத்திக் கொண்டது. "மெய்கண்டான்" 1982 இல் பருத்தித்துறை மெய்கண்டார் ஆதீனம் பருத்தித் துறையில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது.

1965 இல் இருந்து கரவெட்டியை சேர்ந்த சி.சிவஞானசுந்தரத்தை ஆசிரியராகக் கொண்டு நகைச்சுவை இதழாக சிரித்திரன் வெளி வந்துள்ளது. நகைச்சுவையுடன் கவிதை, சிறுகதை, நாவல், புதுக்கவிதை, கேள்வி பதில் என பல அம்சங்களையும் தாங்கி வெளிவந்து பலரது கவனத்தையும் பெற்ற இதழாக இது விளங்கியது.

வடமராட்சியில் இருந்து வெளியான சஞ்சிகைகளை பின்வரும் வகைப்பிரிப்பின் மூலம் பகுத்துப் பார்க்கலாம்.

1. ஆன்மீக இதழ்கள்
2. இலக்கிய இதழ்கள்
3. சிறுவர் இதழ்கள்
4. அறிவியல் இதழ்கள்
5. உளவியல் இதழ்கள்
6. கல்வி இதழ்கள்
7. பல்சுவை இதழ்கள்
8. பிரதேச சபைகளால் வெளியிடப்படும் இதழ்கள்
9. பாடசாலையால் வெளியிடப்படும் இதழ்கள்
10. ஏனைய இதழ்கள்

**ஆன்மீக இதழ்கள்**

மனித சமூகத்திடையே நல்லொழுக்க கருத்துக்களை விதைப்பதற்கும், தெய்வ சிந்தனையை மனித மனதில் தூண்டுவதற்கும், எமது பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களை பேணுவதற்கும், எமது சமயத்தின் வரலாற்றை பேணுவதற்கும், கடவுளின் பெருமை, சமய போதனைகளை வழங்குவதற்கும், பூசை முறைகள், சைவப் பெரியார்கள் - நாயன்மார்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் ஆன்மீக சஞ்சிகைகள் உதவுகின்றன.

"ஞானச்சுடர்" சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் வெளியீடாக 1998 முதல் மாதந்தோறும் வெளியாகி வருகின்றது. சமூகத்தின் அனைத்து மட்டங்களையும் சென்றடைய வேண்டும் என்னும் நோக்குடன் இவ்விதழ் வெளியாகி வருகின்றது. ஆன்மீக சிந்தனைகள், புராணக்கதைகள், சமயப் பெரியார்கள் வாழ்க்கைக்குறிப்புகள், நற்சிந்தனைகள், இறை துதிப்பாக்கள், ஆச்சிரமத்தினால் முன்னெடுக்கப்படும் விழாக்கள், கோயிலின் மாதாந்த நிகழ்வுகள் என பல்துறை சார் ஆன்மீக விடயங்களையும் கொண்டு இந்த இதழ் வெளியாகி வருகின்றது.

வியாபாரிமூலையை சேர்ந்த நா.சொக்கநாத பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு "மதி-கெதி-விதி-வழி" என்னும் ஆன்மீகம் சார்ந்த இதழ் 80 களின் பிற்பகுதியல் வெளியாகியுள்ளது. இந்த இதழ் எத்தனை வெளி வந்தது என சரியாக அறிய முடியவில்லை.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் வெளியீடாக 2011 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக "சக்கரம்" என்னும் சஞ்சிகை வெளிவர ஆரம்பித்தது. இதன் இதழாசிரியராக வை.நவதரன் விளங்குகிறார். வைஷ்ணவ கட்டுரைகள், கண்ணன் பெருமை, பகவத்கீதை பற்றிய விளக்கத் தொடர், நற்சிந்தனைகள், சமூகம் பற்றிய கட்டுரைகள், இலக்கிய இரசனை, கண்ணன் பாடல்கள், நகைச்சுவை துணுக்குகள், சமய விழாக்கள் - விரதங்கள் என பல விடயங்களை தாங்கி வெளி வருகின்றது. கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு இதழான "சக்கரம்" 2019 வரை 11 இதழ்களை பிரசவித்துள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை தற்போது வெளிவந்து கொண்டிருக்கிறது.

நெல்லியடியில் இருந்து "சைவன்" என்னும் இதழ் 2004 இல் வெளிவந்துள்ளது. இராசையா நாகேந்திரன் இதன் ஆசிரியராக இருந்துள்ளார். "அகில இலங்கை நற்பணி மன்றம்" இந்த இதழை வெளியிட்டுள்ளது. பெரும்பாலான கட்டுரைகளை நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களே இந்த இதழில் எழுதியுள்ளார்கள். இந்த இதழும் 2 பிரசவத்துடன் தன் வருகையை நிறுத்தியுள்ளது.

இலங்கை ஸ்ரீ சத்தியசாயி நிலையங்களின் காலாண்டு இதழாக "சாயிமார்க்கம் 1994(ஐப்பசி - மார்கழி) வெளி வர ஆரம்பித்து தற்போது வரை வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஆரம்ப கால ஆசிரியராக டொக்டர் எம்.கே.முருகானந்தன் செயற்பட்டுள்ளார். சாயிபாபாவின் அற்புதங்கள், அருள் மொழிகள், மனிதனது ஒழுக்க கோவை, நற் பழக்க வழக்கங்கள், ஆன்மீக சிந்தனை, சைவ வழிபாடு போன்ற விடயங்களை தாங்கி இந்த இதழ் வெளியாகி வருகின்றது.

**கலை இலக்கிய, சமூக அறிவியல் இதழ்கள்**

1961 இல் பருத்தித்துறையில் இருந்து "மலர்" என்ற இலக்கிய மாத இதழ் வெளியாகியுள்ளது.

நெல்லை நடேஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1979 அக்டோபரில் கலை இலக்கிய அறிவியல் இதழான "தேன்கூடு" வெளியானது. சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், வாசகர் கருத்து, காய்தலும் உவத்தலும் போன்ற விடயங்களை உள்ளடக்கி இந்த இதழ் வெளியானது.

1990 ஆம் ஆண்டு மாசி மாதம் அரையாண்டு இதழாக "விழி" என்னும் சஞ்சிகை கரவை சனசமூக நிலையத்தால் கரவெட்டியில் இருந்து வெளியானது. இதன் ஆசிரியராக சு.செல்வராசா விளங்கினார் கவிதை, கட்டுரைகள் தாங்கி வெளியான இந்த இதழ் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒரு இதழுடன் தன் வருகையை நிறுத்திக் கொண்டது.

தொண்டைமனாறு கலை இலக்கிய சாகரத்தின் வெளியீடாக 2000 ஆம் ஆண்டு "சக்தி" என்னும் இதழ் க.குணேஸ்வரன், கி.நவநீதன், வெ.பிறேமச்சந்திரன் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளியானது. சிறுகதை, கவிதை, கட்டுரை, விவாத அரங்கு, உருவகக் கதை போன்ற உள்ளடக்கங் களை கொண்டு வெளியாகிய இந்த இதழும் ஒரு இதழை பிரசித்து நின்று போனது.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வெளியீடாக 2000-2003 க்கு இடைப்பட்ட காலப்பகுதி யில் "ஏகலைவன்" சஞ்சிகை சமூக கலை -இலக்கிய - கல்வி- அறிவியல் ஏடாக வெளிவந்தது. இதன் ஆசிரியராக நாடறிந்த பிரபல எழுத்தாளர் இ.சு.முரளிதரன் அவர்கள் செயற்பட்டுள்ளார். பாடசாலை மட்ட வெளியீடு என்பதைத் தாண்டி மாணவர்களதும், துறை சார் வல்லுனர்களதும் ஆக்க இலக்கியப்படைப்பு களான கலை இலக்கியம் சார்ந்த படைப்புகளோடு, கல்வி, சிறு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், பொது அறிவு, துரோணர் கேள்வி பதில், சினிமா, மாணவர்களுக்கான போட்டி, விளையாட்டு என்ப வற்றை உள்ளடக்கமாகக் கொண்டு வெளியானது. 8 இதழ்களுடன் இந்த இதழ் தனது வருகையை நிறுத்திக் கொண்டது.

த.அஜந்தகுமார் அவர்களால் 2003 யூலையில் கலை இலக்கிய சமூக அறிவியல் இதழாக "புதிய தரிசனம்" என்னும் இதழ் வெளிக்கொணரப்பட்டது. கவிதைகள், சிறுகதைகள், நேர்காணல்கள், பொது அறிவு, அறிவியல் கட்டுரைகள், நகைச்சுவை துணுக்கு கள், உரைச்சித்திரம், குட்டிக்கதைகள், நூல் விமர்சனங் கள், திரை விமர்சனங்கள், குறுக்கெழுத்துப் போட்டி போன்றவற்றை உள்ளடக்கமாக கொண்டு வெளியாகிய இந்த இதழ் முதலாவது ஆண்டு மலரை பிரசவித்து 5 இதழ்களுடன் நின்று போனது.

கு.அஜித்குமார் ஆசிரியராகக் கொண்டு "புதிய நிலா" என்னும் கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகை வெளியானது. 2008 இல் வெளிவர ஆரம்பித்த இந்த இதழ் மாணவர்களை மையப்படுத்திய ஆக்கங் களுடன் வெளியாகி 5 இதழ்களை வெளியிட்டு நின்று போனது.

கவிதைக்கான இருதிங்கள் ஏடாக 2005 தை-மாசியில் இருந்து "தவிர" என்னும் இதழ் தானா.விஷ்ணு அவர்களை ஆசிரியராக கொண்டு வெளி வர ஆரம்பித்தது. கவிதைகள், கவிதை பற்றிய கட்டுரைகள், கவிஞர்களுடனான நேர்காணல்கள், நூல்கள் அறிமுகம், நூல் விமர்சனம் போன்றவற்றை உள்ளடக்க மாக கொண்டு இடையிடையே வெளியாகி வருகின்றது.

க.பரணீதரனை ஆசிரியராகக் கொண்டு "ஜீவநதி" கலை இலக்கிய மாத சஞ்சிகை 2007 ஆவணி மாதம் முதல் தொடர்ச்சியாக வெளி வருகின்றது. இதுவரை 144 இதழ்கள் வெளியாகியுள்ளன. கவிதை, கட்டுரை, சிறுகதை, நேர்காணல், நூல் விமர்சனம், நூல் அறிமுகம், பக்தி, எதிர்வினைகள், கலை இலக்கிய நிகழ்வுகள், குறுநாவல்கள், அனுபவக்கட்டுரைகள், வாசகர் கடிதங்கள், குறுங்கதைகள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு வெளி வருகின்றது. ஈழத்தில் அதிக சிறப்பிதழ்களை வெளியிட்ட பெருமை யும் ஜீவநதியை சாரும்.

பொலிகையூர் சு.க.சிந்துதாசன், ஆ.முல்லைத் திவ்யன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வல்வெட்டித்துறையில் இருந்து "காலவெளி" என்னும் இலக்கிய சஞ்சிகை வெளியானது. கவிதை, கட்டுரை, சிறுகதை, நேர்காணல், நூல் விமர்சனம் போன்ற அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்த இந்த இதழ் ஒரு இதழுடன் நின்று போனது.

**அறிவியல் இதழ்கள்**

"மின்னல்" இதழ் சமூக அறிவியல் மாத சஞ்சிகையாக 2001 வைகாசியில் விஞ்ஞான ஆசிரியர் சி.பத்மராஜன் அவர்களால் அல்வாயில் இருந்து வெளியிடப்பட்டது. பொதுஅறிவு வினா-விடை, விஞ்ஞான வினா-விடை, உயிரியல் வினா-விடை, புதிர் போட்டிகள், விஞ்ஞான செய்திகள், விஞ்ஞான விளக்கங்கள் என சிந்தனைக்கும் மூளைக்கும் அதிக தகவல்கள் வழங்கக்கூடிய இதழாக இந்த இதழ் வெளியாகி 8 இதழ்களை பிரசவித்து தனது வரவினை இந்த இதழும் நிறுத்திக் கொண்டது.

2005 பங்குனியில் "அதாவது" என்னும் அறிவியல் இதழ் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாட சாலையால் வெளியிடப்பட்டது. மூன்று இதழ்கள் வெளியாகி இந்த இதழும் தனது வருகையை நிறுத்திக் கொண்டது. பல்துறைசார் அறிவியல் சார் விடயங்களை உள்ளடக்கி இந்த இதழ் வெளியானது.

வதிரி தமிழ் மன்ற வெளியீடக 2008(ஐப்பசி-மார்கழி) இல் "மன்றம்" என்னும் சஞ்சிகை வெளியானது. இணையாசிரியர்களாக இ.இராஜேஸ்கண்ணன், சி.பத்ம ராஜன் ஆகியோர் செயற்பட்டார்கள். கவிதை, சிறுகதை, கட்டுரை, வாழ்த்து செய்திகள், நிகழ்வுகளின் பதிவு போன்ற விடயங்களை உள்ளடக்கி வெளி வந்த இந்த இதழும் ஒரு இதழுடன் தன ஆயுளை முடித்துக் கொண்டது.

2010 மார்ச்-ஏப்ரல் முதல் சி.சத்தியபாமா அவர் களை ஆசிரியராகக் கொண்டு வல்வெட்டியில் இருந்து "திசை" என்னும் இதழ் வெளியானது. கல்வி, கலை, அறிவியல், தொழில் நுட்ப இதழாக வெளியாகிய இந்த இதழ் நல்லதொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் வெளிப்பட்டு 2 இதழ்களுடன் தனது வருகையை நிறுத்திக் கொண்டது.

சமூக அறிவியல் இதழாக "விடியல்" என்னும் இதழ் தாளையடியில் இருந்து 2018 ஆனி மாதத்தில் இருந்து வெளி வர ஆரம்பித்து 4 இதழ்களை பிரசவித்துள்ளது. இதன் ஆசிரியராக அ.சசி அவர்கள் விளங்குகிறார். அரசியல், இலக்கியம், சமூகம், அறிவியல், கவிதை சார்ந்த விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டாலும் அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சஞ்சிகையாக காணப்படுகின்றது.

"கலைக்கலசம்" என்னும் இதழ் கரவெட்டியில் இருந்து 2010 இல் வெளியானது. இலக்கியம் உளவியல், ஆற்றுப்படுத்தல் சார்ந்த விடயங்களை தன்னகத்தே கொண்டு வந்த இந்த இதழும் ஒரு இதழுடன் தன் வருகையை நிறுத்திக் கொண்டது.

**கல்வி இதழ்கள்**

க.பரணீதரனை ஆசிரியராகக் கொண்டு 2012 ஆனி-ஆவணியில் இருந்து காலாண்டு இதழாக "கடல்" சஞ்சிகை வெளியாகி வருகின்றது. கல்வியியல், உளவியல், சமூகவியல் சார்ந்த கட்டுரைகளை தாங்கி கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களது அறிவுப் பசிக்கு ஏற்றவகையில் கடல் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதுவரையில் 25 இதழ்கள் வெளியாகி உள்ளன. விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அதிபர்கள், உளவளத்துணையாளர்கள், உளவள நாடுநர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், சிறுவர் இல்ல பொறுப்பாளர்கள் போன்றவர்களுக்கு மிக்க பலனை அளிக்ககூடியதாக வெளி வருகின்றது.

வடமராட்சி வலய ஆசிரியர் மத்திய நிலையத்தினரால் "தேன்கூடு" என்னும் கல்வி சஞ்சிகை 2006 இல் இருந்து ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றது. ஆசிரியம், கல்வி என கல்வியியல் சார்ந்த கட்டுரைகளை தாங்கி இந்த இதழ் வெளியாகின்றது. இந்த இதழ் தற்போது "கூடு" என மாற்றம் கண்டு வெளியாகி வருகின்றது. இந்த இதழை கல்வி சார் துறைவல்லுநர்களின் ஆக்கங்கள் அலங்கரிக்கின்றன. 3 இதழ் கள் இதுவரை வெளியாகியுள்ளன.

ஏடு பதிப்பகத்தின் இலவச வெளியீடாக வல்வெட்டித்துறையில் இருந்து "வழிகாட்டி" என்னும் சஞ்சிகை 2011 இல் வெளியீடு செய்யப்பட்டது. இதன் ஆசிரியராக சீவரட்ணம் சாரூபன் விளங்கினார். உயர் கல்வி, தொழில் வழிகாட்டல் மாத இதழாக மலர்ந்த இந்த இதழ், ஒரேயொரு இதழை வெளியிட்டு தன் வருகையை நிறுத்திக் கொண்டது. தொழில் வழிகாட்டல் சார்ந்த தகவல்கள், கட்டுரைகள் தாங்கி வெளியானது.

பொய்யாமொழிக்குழுமத்தால் கல்வி கலை இலக்கிய சமூக இதழாக வல்வெட்டித்துறையில் இருந்து "பொய்யாமொழி" இதழ் 2018 இல் இருந்து வெளியிடப்படுகிறது. கட்டுரைகள், கல்வி சார்ந்த விடயங்கள், கவிதை, பொது அறிவு, 5 ம் வகுப்பு மாணவர்களுக்கான வினாத்தாள் என மாணவர்களை மையப்படுத்தி இந்த இதழ் வெளியாகிறது. இது வரை 3 இதழ்கள் வெளியாகியுள்ளன.

**பல்சுவை இதழ்கள்**

வளர் கலைஞர் மன்ற வெளியீடாக 1992 இல் "பாவை" இதழ் வல்வெட்டித்துறையில் இருந்து வெளிவர ஆரம்பித்தது. முத்திங்கள் ஏடான பாவையின் ஆசிரியராக ஈழத்தீபன் விளங்கினார். சிறுகதைகள், சிறு செய்திகள், வைத்தியம், சோதிடம், பொது அறிவு, கவிதை, அறிவியல் என பல்சுவை அம்சங்களுடன் வெளியான இந்த இதழும் 2 இதழ்களை பிரசவித்து தன் வருகையை நிறுத்திக் கொண்டது.

தும்பளை கிழக்கு பருத்தித்துறையை சேர்ந்த வே. தவச்செல்வம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "யாழ் முழக்கம்" என்னும் பல்சுவை மாத இதழ் வெளியானது. இது அரசியல், சிறுகதை, பெண்ணியம், கவிதை, நகைச்சுவை, சினிமா, வைத்தியம் எனப் பல்சுவை சார்ந்த அம்சங்களையும் உள்ளடக்கி வெளியானது.

**சிறுவர் இதழ்கள்**

விநாயகர் தருமநிதிய இலவச வெளியீடாக 14.7.1992 இல் "அறம் வளர் இளந்தமிழ்" என்னும் சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகை வெளியாகியது. சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகையாக இது வெளியாகியதோடு சிறுவர் மனதில் அறநெறிக் கருத்துக்களை விதைக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு வெளியாகியது. இதழின் ஆசிரியராக வ.ச.செல்வராசா விளங்கினார். சிறுவர்களை நல்வழிப் படுத்தும் வகையிலான அறம் பற்றிய சிந்தனைகள், அறிவியல் துணுக்குகள், அறிஞர்களது வரலாறு, சமயம், மொழி பற்றி கட்டுரைகள், சிறுகதைகள், பாடல்கள் என் சிறுவர்களுக்கான விடய தானங்களை கொண்டு வெளியானது. அறநெறி காவலர் உயர்திரு ஆ.சி.முருகுப் பிள்ளை ஐயா அவர்கள் இந்த நூலை வெளியிட்டு வைத்தார். இந்த இதழும் 10 இற்கு மேற்பட்ட இதழ்களை வெளியிட்டு தனது வருகையை நிறுத்திக் கொண்டது.

"இளவரசன்" சிறுவர் கலை இலக்கிய அறிவியல் இதழ் 2007 இல் இருந்து வெளியானது. இணை ஆசிரியர்காளக வேல்.நந்தன், மாவண்ணா, கருணை ரவி ஆகியோர் செயற்பட்டார்கள். சிறுவர்கதைகள், சிறுவர்களுக்கான அறிவியல் தகவல், சாதனை மாணவர்கள் அறிமுகம், பாடசாலை அறிமுகம், குறுக்கெழுத்துப் போட்டி, விளையாட்டு, மாணவர் பொழுது போக்கு அம்சங்கள் என சிறுவர்களுக்கு அறிவியல் தகவல்களை வழங்க வல்ல விடயங்களை தாங்கி வெளியானது. இந்த இதழும் 9 இதழ்களை வெளியிட்டு தனது வருகையை நிறுத்திக் கொண்டது.

**உளவியல் இதழ்**

"அஞ்சலி" என்னும் உள சமூக ஆன்மீக சஞ்சிகை 15 வருடங்களுக்கு மேலாக பருத்தித்துறை அஞ்சலி உள ஆற்றுப்படுத்தல் நிலையத்தால் வெளியிடப்பட்டது. அருட்தந்தை எஸ்.டேமியன் அடிகளார் இந்த இதழின் ஆசிரியராகச் செயற்பட்டார். உளவியல் சார் விடயங்களுடன் இந்த இதழ் வெளியானது.

**பிரதேச சபையால் வெளியிடப்படும் இதழ்கள்**

பிரதேசம் சார் தகவல்களுக்கும், பிரதேச கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இந்த இதழ்கள் வெளியாகி வருகின்றன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையும் கலாசாரப் பேரவையும் இணைந்து 2010 முதல் ஆண்டு தோறும் "திருவுடையாள்" என்னும் மலரினை வெளியிட்டு வருகின்றார்கள். பருத்தித்துறை பிரதேச செயலகம் "செம்பருத்தி" என்னும் இதழை வெளியிட்டு வருகின்றது. வடமராட்சி கிழக்கு(மருதங்கேணி) பிரதேச செயலகம் "மருதசாகரம்", "பார்வை" ஆகிய மலர்களை வெளியிட்டு வருகின்றது. பருத்தித்துறை பிரதேச சபை "சென்னி" என்னும் இதழை வெளியீடு செய்கின்றது. பருத்தித்துறை நகர சபை "பருத்தி" என்னும் இதழை வெளியிட்டுள்ளது.

பாடசாலை இதழ்கள்

கையெழுத்துப்பிரதியாக ஆரம்ப காலத்தில் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் பின்னர் அச்சு இதழாக வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் விக்னேஸ்வரக் கல்லூரியால் "ஏணி" சஞ்சிகையும், மெதடிஸ் பெண்கள் பாடசாலையால் "ஒளியை நோக்கி", "கலை நிதியம்" ஆகிய சஞ்சிகைகளும், ஹாட்லிக்கல்லூரியால் "வழி" சஞ்சிகையும், நெல்லியடி மத்திய கல்லூரியால் "சிந்தனை", "வசந்தம்" ஆகிய சஞ்சிகைகளும், தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் "கலை ஊற்று" என்னும் சஞ்சிகையும் உடுப்பிட்டி அமெரிக்க மிடின் பாடசாலையால் "குவாக்" என்னும் அறிவியல் இதழும் வேலாயுதம் மகா வித்தியாலத்தால் "வேல் ஒளி", "மதி" ஆகிய சஞ்சிகைகளும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியால் "இந்து விழிகள்" என்னும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றன. பல பாடசாலைகள் மலர்களை வெளியிட்ட போதிலும் மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் தொடர்ச்சித் தன்மையை பேணாது விட்டாலும் குறித்த சஞ்சிகைகளை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஏனைய இதழ்கள்

"ஈழமணி" என்னும் இதழ் தென்புலோலியூர் க.க.முருகேசப்பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1948 இல் வெளியாகியது.

விநாயகர் தருமநிதியத்தின் இலவச வெளியீடாக "அறத்தமிழ்ஞானம்" ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை 1992 தையில் இருந்து வெளியாகியுள்ளது. 20 இற்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன.

"ஒளி" என்னும் சஞ்சிகை பருத்தித்துறை போரூட் நிறுவனத்தினரால் 1994 இல் இருந்து அரையாண்டு இதழாக வெளியிடப்பட்டது. சமத்துவம், சகோதரத்துவம், நல்லொழுக்கம் சமாதானம், அமைதி பேணும் இதழாக வெளியான இந்த இதழ் சமூக விழிப்புணர்வு சஞ்சிகையாக வெளியானது. 10 இற்கு மேற்பட்ட இதழ்கள் வெளியாகின.

குடத்தனை Christ Mission centre "கடுகு" என்னும் இதழை வெளிக் கொண்டு வருகின்றது. பல்துறை சார் ஆக்கங்களையும் தாங்கி இந்த வெளி வருகின்றது.

"கீற்று" என்னும் இதழ் 2010 மார்கழியில் வெளியானது. அந்த இதழ் சக்கோட்டை பங்கினால் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியராக கே.ஆர்.திருத்துவராசா விளங்கினார். இந்த இதழும் யேசுவின் புகழ், மற்றும் பல்துறை சார் அம்சங்களுடன் வெளியானது.

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் வெளியீடான "நெய்தல்" என்னும் இதழ் வல்வை மைந்தனை ஆசிரியராகக் கொண்டு 2011 புரட்டாதியில் இருந்து ஆண்டுக்கொரு முறை வெளிவருகின்றது. சிறுகதை, கவிதை, கட்டுரை, ஆய்வு என பல்வேறு இலக்கியம் சார் விடயங்களை தாங்கி பிரதேச எழுத்தாளர்கள், பிரதேசம் சார் விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இந்த இதழ் வெளியாகி வருகின்றது. ஆண்டுக்கொரு முறை வெளிவரும் இந்த இதழ் இதுவரை 4 இதழ்களை பிரசவித்துள்ளது.

"புதிய விடியல்" என்னும் இதழ் குடத்தனையில் உள்ள புதிய விடியல் தனியார் கல்வி நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. இந்த இதழ் மாணவர்களது ஆக்கங்களை தாங்கி வெளியாகிய ஒரு இதழை பிரசவித்து நின்று போனது.

முடிவாக.

இவ்வாறாக வடமராட்சியில் இருந்து பல்வேறு இதழ்கள் வெளியாகியுள்ளதை நாம் காண்கின்றோம். தொடர்ச்சியாக வெளி வந்து கொண்டிருக்கும் இதழ்களாக ஜீவநதி, கடல், ஞானச்சுடர், சக்கரம், சாயிமார்க்கம் போன்ற இதழ்களை குறிப்பிடலாம். பாடசாலை, பிரதேசசெயலகம் சார்ந்த இதழ்களும் ஆண்டுக்கு ஒருமுறை வெளியாகின்றன.

புத்தி ஜீவிகளும் கல்வியாளர்களும் அதிகம் காணப்படும் வடமராட்சி பிரதேசத்தில் இருந்து மேலும் பல சஞ்சிகைகள் வெளிவர வேண்டும். பாடசாலைகள், பெற்றோர்கள், நூலகங்கள் இதற்கான ஊக்குவிப்புகளை செய்ய வேண்டும். ●

## மீரா சிவகாமியின் துளிப்பாக்கள்

1

வெளிநாட்டு வெள்ளைக்

கொக்குகள் – இங்கு

காலில் பாவமுட்டை கொரோனா

2

வார்த்தைகளுக்கு முதல்நாள்

யுகங்கள் கடந்து பேசலாம்

உன்னுடன் மட்டும்

3

அண்ணாந்து பார்க்கிறாள்

சாவா வாழ்வா?

பெறுபேறு ஒட்டப்பட்ட பலகை தீர்வுகூறக் காத்திருக்கிறது.

4.

போனுடன் ஆசிரியர் கற்றபிக்கிறார்

வீட்டில் மாணவன் படிக்கிறான் – வீதியில்

கொரோனா குதித்து விளையாடுகிறது

5.

சந்ததியைத் தொலைத்துவிட்டுத்


பரம்பரை புகழ்தேடும் கிழட்டு நாக்குகள்


புலம் பெயர்ந்த பூச்சிகளும் இவையே!

## மயானப் புறா

மாலைப் பொழுதொன்றில்
மயானத்தில்
காத்திருந்தேன்
என் காதலியைத் தேட...
அங்கு எத்தனை ஏக்கங்கள்
உணர்ந்தேன்...
பல விம்மல்கள் கேட்டேன்...
பேராசைகள்...
ஆணவங்கள்...
பாவங்கள்
மனிதனுக்குள் பல விலங்குகள்
மலத்திலுள்ள கிருமிகளைப் போல்
மறைந்திருப்பதை அறிந்தேன்...
அப்போது
ஒரு வெண்புறா
சிலுவை அடையாளம் தரித்த
கல்லறை ஒன்றின் மேல் அமர்ந்தது
காதலை வெளிப்படுத்த கறுப்பு
ரோஜாவுடன்
அதை நெருங்கினேன்...
என் காதலை அறிய விரும்பாமல்
எனக்காக
ஒரு சிறகை மட்டும் உதிர்த்துவிட்டு
அந்தப் புறா பறந்தது...
வானத்தின் மேல்
புறா கொண்ட காதல்
உண்மையெனில்
என் காதலும் மெய்தான்...
காதலுடன் நெருங்கினேன்
முற்செடியாக கண்டறியப்பட்டேன்
மழைக்காக காத்திருப்பேன்
மயானத்தில்...

**- த.கதுர்ஜன் -**





## புகழ்...

புகழ் தேடலொரு பக்கம்
புகழ் அழிப்பு மறுபக்கம்.
திகழ்ந்திடுமிது பாலைவனச் சோலை
பகட்டான ஒளி !... மாந்தர்
திகட்டாது நாடுவார் தேடுவார்

கைதட்டலுக்கு ஏங்கும் ஒரு
வெல்வெட் புல்வெளி!...வதனம்
வண்ணமடித்து ஒளிரும்!...புகழ்
வல்லமை வினைகளின் எதிரொலி!
செல்லப் புகழ்மண்டபப் பிரவேசம்.

மனிதன் மனிதனா என்று
மதிப்பிடும் சோதனைக் கருவி.
தானாக வரும் புகழ்
நீயாக சம்பாதிக்கும் புகழ்
தேய்ந்தும் தேயாத சுவையுடைத்து

செல்வம், அழகின் புகழ்
செல்வோம் என்று போகும்
ஞானம் மேன்மையறிவுப் புகழ்
சூனியம் ஆகாத நிரந்தரம்!
நானிலத்தின் அதிசய மந்திரநாண்.

என் புகழென் கவிதை
மென் சிறகு விரித்து
தன் பயணம் தொடரும்
பணிவு கடலாக, ஒழுக்கம்
சிகரமாக, மொழி நித்தியமாகட்டும்!

முயற்சி, தேடல் விவேக
ஆன்மாவின் தணியாத தாகம்
பரபரப்பானது புகழ் வீடு
சக்தி, பெயர் புகழால் முக்தியல்ல
ஒற்றுமை அன்பே சொர்க்கத்தில்
நந்தவனம்.

- பா வானதி வேதா. இலங்காதிலகம்

## சின்னத்தனங்களின் சிறுமுளைகள்

தோற்றுப் போன இவனுக்கு
நேற்றுத்தான் பிறந்தநாள்
ஆற்றையோ முற்றத்தில்
அமர்ந்திருந்து அழுகின்றான்.
தேற்றத்தான் ஆளில்லை
கூற்றுக்கிரையான கூட்டத்தில்
ஈற்றுமுளையாக
எஞ்சியவன் இவன் தான்
சின்னதம்பி...
சிரிப்பை இழந்த
இவன் முகம்
இன்று தேர்த்தல் சின்னத்தில்
அழுதுவற்றிய
கண்ணின் இரத்தத்துளிகள்
கூப்பியகரத்தின் முகத்தில்
தெறிக்கையில்
சுற்றி நின்றவர்
வீரத்திலகம் எனக்
கைகளை உயர்த்திக் கோஷம்
எழுப்பினர்.
நடிகர்திலகங்கள்...
என இவன் மனம் வெம்பியது
எனினும் ஆளில்லாக் குறையில்
சின்னத்தனமில்லா
சீரியநெஞ்சொடும்
பின்னே நடந்தான்
சின்னமாய்...
சின்னா பின்னமாய் கிடந்த
இவன் வாழ்வை நாற்றுமேடையாக்கி
கட்சிக்கள் பல உதித்தன பாரில்
தோற்றுப் போன இவனுக்காய்...

**- நா.நவராஜ் -**



# தாய்மை

குந்தவை

வறுத்த மாவை இரும்புச்சட்டியோடு தூக்கி சுளகில் கொட்டி விட்டு நிமிர்ந்தாள் கனகவள்ளி.

நாரிப்பக்கம் விண் விண் என்று வலித்தது எப்ப போய் படுக்கையில் விழுவேன் என்றிருந்தது. அடுப்பங் கரையை சாற்றிவிட்டு வீட்டுக்குள்ளே வந்தாள். உட்புற கதவு பூட்டி இருக்கா? என்று ஒரு முறை பார்த்துவிட்டு படுக்கைக்குப் போனாள்.

கட்டிலில் இருந்த பஞ்சுமெத்தையை உதறிப் போட்டாள். குத்திக் கட்டிய கட்டுக்கள் தளர்ந்த நிலையில் மெத்தையின் அடிப்பாகத்தில் திரண்டு கொண்டன. இதுக்கென்றே வைத்திருந்த தடியால் அந்த பஞ்சுகளை அடித்து சமப்படுத்தினாள். பின்னர் படுத்துக் கொண்டாள்.

முதுகு வலிக்கு பஞ்சு மெத்தை இதமாகத்தான் இருந்தது. வலிகள் இழுபட்டு இழுபட்டு குறைந்து போயின. அந்தக் காலத்து மெத்தை இது. அவளின் கல்யாணத்தின் போது ஐயா வாங்கிப்போட்ட மிக விசாலமான கட்டிலும் மெத்தையும் இது. முப்பத்தைந்து வருடங்கள் ஆகின்றன. கணவனோடு எட்டு வருடங்கள் பகிர்ந்து கொண்ட மெத்தை. அவர்களின் ஊடல், கூடல், சண்டை, சிணுங்கல், கோபம் எல்லா வற்றையும் பார்த்த மெத்தையும் கட்டிலும் இது. இப் பொழுது அவன் போய் முப்பத்தைந்து வருடங்களா யிற்று.

தலை வேறு கால்வேறு கூழமாய்ப் போன அவன் உடலை சவப்பெட்டியில் வைத்துக்கொண்டு வந்தார்கள். பெட்டியைத் திறந்து பார்த்ததும் அவள் மூர்ச்சையாகி விழுந்து போனாள். என்ன கொடூர சம்பவம் அது. இன்று நினைத்தாலும் அந்த கொடூர காட்சி மனதை பதற வைக்கிறது.

ரோந்து சென்ற இராணுவத்தின் ஒருவனை சுவரின் அப்பால் நின்று வீசப்பட்ட ஒரு கைக்குண்டு பலி கொண்டு விட்டதாம். அதனையடுத்து வெறி கொண்டு திரிந்த இராணுவத்தினரிடம் சிக்குண்ட இருபத்தெட்டு இளைஞர்கள் வாசிகசாலை கட்டிடத்தினுள் வைத்து பூட்டப்பட்டு பின் வெடி மருந்துகள் கொண்டு அந்த வாசிகசாலை தகர்த்தப்பட்டது. அப்படி இறந்தவர்களில் ஒருவன் தான் அவளது கணவன் பக்கத்து ஊருக்கு தொழில் நிமித்தம் போனவன் தான் அவன். இப்படி யொரு கொடூர சம்பவத்துக்குள்ளானான்.

முதுகுவலி குறைந்தாலும் கை, கால்களின் உழைவு பெரிதாகத் தெரிந்தது. மெத்தையில் புரண்டாலும் வலி அதிகரிக்கவே செய்தது. கணவன் போன பின்பு பெற்றோரும் ஒருவர் பின் ஒருவராக மறைந்து போக இந்த முப்பத்தைந்து வருடங்கள் அவள் தனிமையோடு தான் உறவாடுகின்றாள்.

இந்த இடியப்பத்தை அவித்து கடைகளுக்கு கொண்டு போய் கொடுப்பதைவிட வேறு ஒரு மார்க்கமும் தென்படவில்லை. இந்த தொழிலுக்கு வேறு யாராவது உதவியிருந்தால் எவ்வளவு இலகுவாய் இருந் திருக்கும். குறிப்பாக ஒரு மகள் இருந்தால் ஓடியாடி எல்லா வேலையும் செய்து தந்திருப்பாள் என்று அவள் நினைப்பதுண்டு. சில சமயங்களில் மகளை இப்படி இடியப்பம் அவிக்கும் தொழிலில் ஈடுபடுத்த மாட்டேன். எந்த கஷ்ரமும் படாமல் இடியப்பம் விற்கும் அளவில் அவளை வைத்துவிடமாட்டேன். குறைந்தது ஒரு வாத்தியாராக்கியாவது விட்டிருப்பேன் என்று நினைப்ப துண்டு. அவளின் கணவனும் வேலைக்குப் போன பிறகு பேரப்பிள்ளைகளை கவனித்துக்கொண்டு வீட்டி



லிருப்பது எவ்வளவு சுகமான கற்பனை. ஆனால் அவை யொன்றும் அவளுக்கு கிடைக்காமல் போய்விட்டன. எல்லாம் கற்பனை தான்.

எட்டு வருடங்கள் கணவனோடு இருந்த நாட்களில் ஒரு பிள்ளைக்காக ஏங்கியிருப்பாள். மணம் முடித்து மூன்றாவது மாதத்தில் உருவான கரு என்ன காரணத்தினாலோ என்னவோ தங்கவில்லை. அதன் பிறகு வருகிற ஒவ்வொரு மாத விலக்கும் ஏமாற்றத்தையே கொண்டு வந்தது. சில நாட்களில் மாதவிலக்கு இரண்டு மூன்று நாட்கள் தள்ளிப்போவதுமுண்டு. அந்த ரெண்டு மூன்று நாட்களில் அவள் எத்தனை கோட்டைகள் கட்டியிருப்பாள். குழந்தை பிறக்கபோகிறது. தான் அதை எப்படி தாலாட்டி பாலூட்டி சீராட்டி வளர்ப்பது என்றெல்லாம் மனக்கோட்டை கிடுகிடு என வளரும். ஆனால் அவற்றையெல்லாம் பொடியாக்கி கொண்டு மாதவிலக்கு வந்துவிடும்.

கணவனோடு இது பற்றி சிணுங்கும் போதெல் லாம் அவன் அலட்டிக்கொள்ளாதது போல் தோன்றும். ஆனால் உள்ளுக்குள் அவனும் ஏங்கிக்கொண்டிருப்பது அவளுக்குத் தெரிய வந்த போது அதிகம் அவனோடு இது பற்றி அலட்டிக்கொள்வதில்லை. என்னை விவாகரத்து எடுத்துவிட்டு வேறு ஒருவனை கல்யாணம் முடி பிள்ளை பிறக்கும் என்று அவன் ஒரு நாள் சொன்ன போது அவள் வாய்மூடி விட்டாள். எவ்வளவு தூரம் அவனும் குழந்தைக்காக ஏங்கியிருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

கனகவள்ளி புரண்டு புரண்டு படுத்தாள். கை, கால்கள் உழைந்து கொண்டே இருந்தன. இவ்வளவு நேரம் அடுப்புக்கு முன்னால் இருந்ததால் கண்கள் வெண்மை யுற்றிருந்தன. கண்களில் லேசான எரிவு இருந்தது. நித்திரை இப்போதைக்கு வருவதாக தெரியவில்லை. எழுந்து போய் சாற்றியிருந்த யன்னல் கதவை திறந்து விட்டாள். லேசான குளிர்காற்று முகத்தில் படிந்தது. இனி நித்திரை வரும் என நினைத்துக் கொண்டு மீண்டும் போய் கட்டிலில் படுத்துக்கொண்டாள். கண்கள் மூடுவ தாக தெரியவில்லை. கண் இமைகளை நித்திரை அமுத்தவில்லை.

இந்த நேரத்தில் எழும்பி வேறு ஏதாவது வேலை செய்யலாமோ, என நினைத்தாள். இரவு 12 மணிக்கு அவித்த இடியப்பத்தை விடிய 7 மணிக்கு யார் தொடுவார்கள். கரடுமுரடாய் மரப்பட்டை மாதிரி வந்து விடும்.

பாட்டு கேட்டுக்கொண்டிருந்தாலாவது நித்திரை வருமோ என்று கட்டிலின் அடியிலிருந்து ரேடியோவை கைவிட்டு துலாவி எடுத்தாள். அவளுக்கு இருக்கும் ஒரே ஒரு பொழுதுபோக்கு இது தான். இந்த நேரத்தில் FM அலை வரிசைதான் அலறிக் கொண்டிருக்கும் என்ற கேள்வி தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது.

இளமைக்காலத்தில் சினிமாப்பாட்டு என்றால் சதா கேட்டுக்கொண்டே இருப்பாள். வர்த்தக ஒலி பரப்பில் நிகழ்ச்சியின் தலைப்புக்கள் வசீகரமாய் இருந் தாலும் போடுவது என்னமோ சினிமா பாட்டுத்தான். அதில் ஒன்று நீங்கள் கேட்டவை என்ற நிகழ்ச்சி. ஒரு தபால் அட்டையில் படத்தோடு விரும்பிய பாடலின் தலைப்பையும் எழுதி கேட்பவரின் பெயர், ஊரையும் எழுதி அனுப்பினால் ஒரிரு அல்லது இரண்டு பெயரும் சேர்ந்து வரும். அப்படி எழுதி அனுப்பியிருக் கிறாள் வானொலியில் தன் பெயர் வரும் பொழுது கேட்க ஒரு திகிலாக இருக்கும். நண்பிமார்களிடம் எல்லாம் இதைச்சொல்லி சொல்லி மகிழ்வாள். என்ர பெயர் வந்தது ரேடியோவில. அதோடு அன்றி வேறு யாரின் பெயர் வந்தாலும் யார் அந்தப்பிள்ளை என்று நண்பிகளோடு ஆலோசிப்பாள் அது ஒரு காலம்.

ரேடியோவில் எல்லா சனலிலும் ஒரே கத்தலாக இருந்தது. காட்டு கத்தல் இந்த பதத்தை அவன்தான் அடிக்கடி சொல்வான். அவனுக்கும் சினிமாப்பாட்டு பிடிக்காதென்றில்லை. ஆனாலும் அவற்றுள் ஏதோ நுட்பத்தை கண்டுபிடித்து அந்த வரிகளை அடிக்கடி முணுமுணுப்பான்.

“மின்னலாய் வகுடு எடுத்து மேகமாய் முடி வளர்த்து” அவளுக்கு இப்படி ஒன்றும் ரசிக்கத் தெரியாது சும்மா சினிமாப்பாட்டுத்தான். அவனுக்கு இருக்கும் இந்த சங்கீதஞானத்தில் சங்கீதம் பயில விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்திருப் பாள் அதை யார் கவனித்திருப்பார்கள்.

ரேடியோவில் விரும்பி கேட்பவரின் பெயர் களை அறிவிப்பாளர் மூச்சு விடாமல் வாசித்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் 10 சத தபால் அட்டை செய்யும் வேலையை இன்று Facebook உம் Whatsapp உம் செய்கின்றன என்று நினைத்த போது இவற்றிற்காக பரிதாபப்படலாம் போலிருந்தது.

ஒவ்வொரு சனலாக கம்பியை நகர்த்திக் கொண்டிருந்தாள். நித்திரை தான் வரவில்லை. ஒரு பாட்டிலும் மனம் லயிக்கவில்லை. எப்படியும் நித்திரை கொண்டேயாக வேண்டும். நாளைக்கு காலையில் 4.30 மணிக்காவது எழும்பி இடியப்பம் அவிக்க வேண்டும். இப்ப நித்திரை கொள்ளாவிட்டால் நாளை விடிய சரிவர வேலை செய்ய முடியாது. தலை அம்மலாகவும் கண்கள் சோர்வாகவும் இருக்கும். அடுத்த நாள் ஓடியாடி வேலை செய்யமுடியாது. நித்திரை கண்ணுக்க இருக்கும். நேரம் பிந்தி இடியப்பம் கொண்டு போனால் கடை முதலாளி யிடம் பேச்சு கேட்க வேண்டியிருக்கும். வாடிக்கை யாளர்கள் காத்திருந்து பார்த்துவிட்டுபோய் விட்டார் கள் என்று அவளைத் திட்டுவார். ஆக ஏதேதோ நினைத்துக்கொண்டிருக்கும் மனதை ஒரு நிலைப்படுத்தி தூங்க வேண்டும்.

பனடோல் போட்டு பார்த்தால் என்ன என்று நினைத்துக்கொண்டு எழுந்து போய் மேசை இழுப் பறையை இழுத்து பனடோல் எடுத்து போட்டு போத்த லில் இருந்த தண்ணீரையும் குடித்தாள். பின்னராக படுத்துக்கொண்டாலும் பிறகும் நித்திரை வரும் அறிகுறி இல்லை. விடிந்ததும் எழுந்து என்னென்ன செய்ய வேண்டும். என்பதை மனதில் நினைத்துக் கொண்டாள். குறைந்தது ஐந்து பேர் சாப்பிடவேண்டும் என்றாலும் அறுபது இடியப்ப மாவது அவிக்க வேண்டும்.

பெரிய சட்டிகளில் கோதுமை மாவோடு அரிசி மாவையும் கலந்து உலையில் கொதிக்கும் நீரை மாவின் மேல் ஊற்றி கிளறி திரளையாக எடுத்து இடியப்ப உரலில் போட்டு தட்டுக்களில் புழிய வேண்டும். பின்னர் மாறி மாறி அவற்றை ஆவியில் அவிய விட்டு இறக்கினால் இடியப்பம் தயார். பிறகு ஒரு கூட்டு கறியும் வேண்டும். பருப்பை வேகவைத்து தேங்காய்ப்பாலையும் மிளகாய்த்

தூளையும் போட்டுவிட்டால் சாம்பார் போல ஒரு கறி ரெடி. பின்னர் கொதித்த நீரில் கோப்பி ஊத்தி குடிக்கவும் நேரம் இல்லை. இடியப்பங்களை ஓலைப் பெட்டியில் அடுக்கி தூக்குச் சட்டி கறியுமாக ஓட்டமும் நடையுமாய் சாப்பாட்டு கடைக்கு எடுத்துப்போக வேண்டும். அப்பாடா அதன் பிறகு தான் வீடு திரும்பியதும் மற்ற வேலைகள் அம்பாரமாய் குவிந்திருக்கும்.

எல்லாம் தனி ஆளாய் செய்ய வேண்டும். உதவிக்கு வேறு ஒரு கரமும் இல்லை. அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள். இன்று ஏதோ தூக்கம் வரவில்லை. கட்டாயம் எப்படியாவது தூங்கியாக வேண்டும். இன்னுமொரு பனடோல் போட்டு பார்க்கலாமா? என நினைத்தாள். எழுந்து போய் ஒரே நேரத்தில் இரண்டு குளுசைகளை விழுங்கி விட்டாள். அமைதியாக தூங்கி எழ வேண்டும். நித்திரை மெதுவாக கண்களை அழுத்தியது. ஏதேதோ அறுபட்ட கனவுகளுடன் சுகமான நித்திரை வந்தது.

அவள் எழுந்த போது முற்றத்தில் நிலம் லேசாக வெளுத்து கொண்டிருந்தது. அதை கண்டவுடன் அவளுக்கு லேசான பரபரப்பு. இண்டைக்கு சரி கடை முதலாளியிடம் பேச்சு வாங்க போறன் என்று புலம்பினாள். அடுக்களைக்குப் போய் அவதி அவதியாக வேலை செய்யத்தொடங்கினாள்.

ஒருவாறு இடியப்பங்களை அவித்து முடித்து சாம்பார் செய்யத்தொடங்க இருக்கும் வேளை செல் போன் மணி அடித்தது ஓடி போய் எடுத்தாள். கடை முதலாளிதான் பேசினார். என்ன கனகவள்ளி மணி ஏழு ஆச்சு ரெண்டு மாஸ்டர்கள் வந்து கொண்டிருக்கினம். வெள்ளன பள்ளிக்கூடம் போகனுமாம் கெதியாக சாப்பாட்டைக்கொண்டு வா

கொண்டு வாறன் ஐயா, இப்ப கொண்டு வாறன் ராத்திரி நித்திரை இல்லை. விடியப்புறம் தான் கொஞ்சம் அசந்து போனன். இப்ப கொண்டு வாறன் ஐயா என்று சமாதானம் சொல்லிவிட்டு சாம்பார் தயாரிக்கத் தொடங்கினாள். பருப்பை கொதிக்கவைத்து தேங்காய் திருகிவிட்டு பின்னர் வாழைக்காயை வெட்டும்போது அப்பப்பா நேரம் போய்க்கொண்டிருந்தது. ஒருவாறு இடியப்பங்கள் எல்லாத்தையும் ஓலைப்பெட்டிக்குள் அடுக்கி சாம்பாரையும் ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டாள்.

தலையைவார நேரமில்லாது கோதி முடிந்து கொண்டாள். எதிர்வீட்டில் ஓட்டோ வந்து நிற்பது தெரிந்தது. அதில் ஊர்ப் பள்ளிக்கூடத்து பீயோன் எதிர் வீட்டுப்பிள்ளை சோபனாவுடன் வந்திறங்கி பூட்டிய எதிர் வீட்டுக்கதவை பார்த்துக்கொண்டிருந்தான். என்னப்பா என்ன நடந்தது என்று கனகவள்ளி விசாரித்தாள். இந்தப்பிள்ளை அசம்பிளி நடக்கேக்க மயங்கி விழுந்திடுத்து . காலையில் சாப்பிடேல்லையாம். அதிபர் கூட்டிக்கொண்டே விடச்சொன்னவர் என்றான்

கனகவள்ளி அந்தச் சிறுமியைப் பார்த்தாள். களையாக இருந்த சிறுமதியின் முகம் சோர்ந்திருந்தது. பின்னலில் இருந்து சிறு மயிர்கள் களைந்து அவள் முகத்தில் படிந்திருந்தன பார்க்க பாவமாக இருந்தது.

கையிலிருந்த இடியப்பம் நிறைந்த ஓலைப் பெட்டி கனப்பது போல் உணர்ந்தாள். எதிரே நிற்கும் சிறுமி பசியால் சோர்ந்து நிற்கும் போது, தான் யார் யாருக்கோ இடியப்பம் எடுத்துச்செல்வது மனதை உறுத்தியது. அவை காத்துக்கொண்டிருக்கட்டும். ஓலைப்பெட்டியையும் சாப்பாட்டு கோப்பையையும் ஒரு கையால் பிடித்துக் கொண்டு மறு கையால் அந்தப் பிஞ்சுக் கரத்தைப் பிடித்து, வா பிள்ளை நான் சாப்பாடு தாறன் என்று கூறிக்கொண்டு வீட்டுக்குள் திரும்பி போனாள்.

கந்தோருக்கு, கச்சேரிக்கு போறவை அரைமணி நேரம் காத்திருக்கட்டும். கடை முதலாளியும் திட்டட்டும். இனி இடியப்பம் கொண்டு வர வேற ஆளை பிடிக்கப் போறன் என்றும் அவர் கடுமையாகத் திட்டலாம். காத்திருக்கிறவை யும் காத்திருக்கலாம் திட்டிறவையும் திட்டட்டும்.

தன் மூத்த மகளை ஆஸ்பத்தரிக்கு கூட்டிக் கொண்டு போன சோபனாவின் தாய் திரும்பி வரும் மட்டும் அந்தச்சிறுமி தன்னோடையே இருக்கட்டும் அந்த மூன்று பெண்களே கொண்ட அந்த சிறு குடும்பம் ஒரு நாளைக்கு கழிக்கப்படும் பாடு அவளுக்கு இப்பொழுது தான் புரிந்தது போலிருந்தது. இந்தச் சிறுமியின் வாடிய முகத்தை கண்ட பொழுது. ●

# பிந்திய செய்திகள்

பாரத்தின் சுமை
வாழ்க்கையை நசுக்கிய
சுவடுகள் வழியே
நிமிசங்கள் கரையும்.

காதல் வழியில்
கவனம் சிதறிய..
அநேகரின் செழிப்பும்
சிரிப்பும்..
வதனம் விட்டு கழன்று
விதிக்குள் மறைந்து
காணாமல் போய்விடும்

நேற்றைகள் சுகம்விசாரித்த




கணப்பொழுதின்
ஆரவாரம் பற்றி
இந்த நிமிசங்கள்
நினைத்துக்கொள்ளும்

காலம் சேமித்த
செய்திகளை
கேட்கும் நிலையில்
எந்த செவிக்கும்
அவகாசம் கிடையாது

கோட்டைகள் தோறும்
பூனைகள் அப்பங்களின்
காவலர்களாக...

நாச்சியாதீவு பர்வீன்
மல்வானை



# தமிழ் இலக்கிய வரலாற்றில் குழந்தைக் கவிதையின் செல்நெறிப் பாங்கு

கி.நடராசா

மக்கள் உணரமுடியாத விடயங்களை உணர்ந்து அதற்கு ஏற்றதொரு கலைவடிவம் கொடுப்பவன்தான் கவிஞன். அவனது உணர்வுகள் சமூகத்தை மையப்படுத்தியே தோன்றுகின்றன. கவிதையாக்கப் பசி கொண்டவனுக்கு அவனறிந்த சமுதாயம் ஓர் அமுதசுரபி. அத்துடன் அவனது படைப்புகள் சமூக நலனுக்கு மருந்தாக அமைவதால் அவனை சமூக மருத்துவன் என்றும் கூறுவர். கவிஞர்களிடம் குழந்தையுள்ளம் இருக்குமாயின் உணர்ச்சியும் கற்பனையும் எளிதாக அமைந்து விடும். இவ்வகையில் கவிதை என்ற கூண்டிற்குள் குழந்தைக் கவிதையும் தனியான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. குழந்தைக் கவிதையும் குழந்தை இலக்கியமும் ஒரே பொருள் தருவன என்பதை மனங்கொள்ள வேண்டும். கவிதை வடிவத்தில் அமைந்த எல்லாவற்றையும் இலக்கியம் என்ற பாரம்பரியத்தில் வளர்த்தவர்கள் நாம். என்பதையும் மறக்கக்கூடாது.

**குழந்தைக் கவிதையின் பண்புகள்:**

"சிறுவருக்காக, சிறுவர் உள்ளத்தோடு சிறுவர் மொழியில் உலக அனுபவத்தை விளக்க உருவாகும் படைப்பே சிறுவர் இலக்கியமாகும்." என்று குழந்தை இலக்கியம் தொடர்பான பிரபல விமர்சகர் கலாநிதி பூவண்ணன் குறிப்பிடுகின்றார். சிறுவர் இலக்கியம் பற்றி சிந்திப்பவர்கள் சிறுவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். சிறுவர், சிறார், புதல்வர், பிள்ளை, குழந்தை, குழவி, போன்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவன என்பதை, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் "குழவி கொள்பவரின் ஓம்புமதி" என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் குழந்தை கவிதையின் முக்கியமான பண்புகளை முதலில் ஆய்வு செய்து பின்னர் அது வளர்ந்த வரலாற்றை நோக்குவது சிறப்புடையதாகும்.

குழந்தைக்கவிதையானது குழந்தைகளால் விளங்கி உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். அது குழந்தையின் வயது நிலைக்கேற்றவாறு மன உணர்வைப் பிரதிபலிக்க வேண்டும். இசைக்கு வசமாகும் இயல்பு குழந்தைகளிடம் இருப்பதால் எளிய நடையில் சந்த நயம் பொருந்தியனவாக இருத்தல் வேண்டும். குழந்தையின் அறிவு நிலைக்கேற்ப சொல்லாட்சியைப் பெற்றிருக்க வேண்டும். குழந்தைகளின் அறிவு நிலைக்கேற்ற சொல்லாட்சியைப் பெற்றிருக்க வேண்டும். குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு அறிவூட்டும் வகையிலும் மகிழ்வூட்டும் வகையிலும் அமைதல் வேண்டும். சிறுவர்களின் விருப்பு, வெறுப்பு, ஆர்வம், நுண்மதி, சமூக நடத்தைக் கோலங்களை பிரதிபலித்தல் வேண்டும். சிறுவரின் தோற்ற நிலை, அவர்களின் உணவுப் பழக்க வழக்கம், ஆடை அணிகள், ஆபரணங்கள், விளையாட்டுக்கள், இவற்றோடு வாழ்வியலில் அவர்களது முக்கியத்துவம் தொடர்பாகவும் கூறப்பட வேண்டும்.

**குழந்தைக் கவிதையின் தோற்றம்**

மனித சமுதாயத்தின் தோற்றமும் வளர்ச்சியும், மழலைப்பருவத்திலிருந்தே தோன்றுகின்றன. எனவே

சமூகத்தை சித்திரிக்கும் இலக்கியமும் மழலைச் செய்திகளையே கொண்டிருத்தல் வேண்டும். என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் குழந்தைக்கவிதையின் தோற்றம் வாய்மொழி இலக்கியத்திலிருந்து தான் தோன்றியது என்பதை பேராசிரியர் சிவலிங்கராசா நிறுவ முற்பட்டுள்ளார். குழந்தை மனம் இசையினால் மிக இலகுவாக ஈர்க்கப்படும் அழுகின்ற குழந்தையை தூங்க வைப்பதற்காக தாய் தாலட்டுப்பாடுகின்றாள். "தாய்மை உலகினுக்கு வழங்கிய முதல் இலக்கியப்பரிசு தான் தாலாட்டு" என்று தமிழண்ணல் கூறியுள்ளார். "தாலாட்டு குழந்தை கேட்கும் முதற்பாட்டு" என்று தமிழறிஞர் சண்முகசுந்தரம் குறிப்பிட்டுள்ளார். தாய் தன் உள்ளத்துணர்வுகளை உணர்ச்சி மேலீட்டில் தன் வாயிலிருந்து வழங்கி விழும் சொற்களைக் கொண்டு பாடி குழந்தையை உறங்க வைக்க முற்படுகின்றாள். குழந்தையை தூங்க வைக்கும் தொட்டிலின் பெருமையை,

"தொட்டிலுமோ பொன்னாலே
தொடு கயிறோ முத்தாலே"

எனப்பாடுவதும் குழந்தை அழுவதற்கு காரணத்தைச் சொல்லும் போது,

"மாமன் அடிச்சானோ
மல்லிகைப் பூச்செண்டாலே"

எனப்பாடுவதும் வெறுங்கற்பனையல்ல.
அவை யதார்த்தமான உணர்வுகளின் வெளிப்பாடாகும். "தாலாட்டு ஊற்றெடுத்து ஆறாக ஓடுவதற்கு அடிப்படையாக அமைந்த சக்தி குழந்தையின் அழுகைதான்." என்று ஆறு.அழகப்பனின் கூற்று இங்கு மனதில் கொள்ளத்தக்கது. வாய்மொழி மரபாக முகிழ்த்த குழந்தைப்பாடல்கள் ஏனைய எழுத்திலக்கிய மரபுடன் இணைந்து வளர்ச்சியடையத் தொடங்கின.

## பழந்தமிழ் இலக்கியங்களில் குழந்தைக் கவிதை

குழந்தை இலக்கியம் கருக்கொள்வதற்கு அடிப்படைக் கூறுகள் சிலவற்றை தொல்காப்பியத்தில் காணலாம். "குழவி மருங்கினும் கிழவதாகும்" என தொல்காப்பியத்தில் வரும் பொருளதிகார நூற்பா வரி பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு வழி காட்டியது.

"ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளர்ந்த துணிவினாலும்
என்றிரு வகைத்தே பிசி வகை நிலையே"

எனவும் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் (488) கூறப்பட்டுள்ளது. இதில் பிசி என்பது விடுகதை என வழங்கப்படுகின்றது. கதையும் கவிதை வடிவத்தில் வருவதை அவதானிக்கலாம்.

"கழுத்து உண்டு தலையில்லை
கை உண்டு விரல் இல்லை.
உடல் உண்டு உயிர் இல்லை"

இது என்ன என்று கேட்டால் சட்டை என விடை வரும். தாய்மாரும் பாட்டிமாரும் விடுகதையையும் கவிதை வடிவத்திலேயே கூறினர்.

சங்க காலத்திலும் மழலையின் பெருமைகள் பற்றிய சிதறல்களை பரக்கக் காணலாம். புறநானூற்றில் பாண்டியன் அறிவுடை நம்பி,

"படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட துழந்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்கு
பயக்குறு இல்லைத் தான் வாழும் நாளே"

என குழந்தைச் செல்வ மாண்பு கூறப்பட்டுள்ளது. நெய்யோடு கூடிய சோற்றை கையிலெடுத்தெறிந்தும், வாயினாற் கவ்வியும், கையால் அளைந்தும் உடம்பின் கண் பூசியும் விளையாடும் அவ்வுணவு எப்படிப்பட்டது. என்பதை வள்ளுவர்,

"அமிழ்தினு மாற்ற வினிதே தம் மக்கள்
சிறு கையளாவிய கூழ்"

எனப் பெருமைப்படுத்துகின்றார். இன்னொரு புறநானூற்றுப் பாடலில்,

"சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டு உளனோ? என வினவுதி என்மகன்
..........................
ஈன்ற வயிறு இதுவே
தோன்றுவான் யாதோ போர்களந்தானே"

என்று சிறுவர் பெருமையை கூறிச் செல்கின்றது. மேலும் அகநானூற்றுப்பாடல் ஒன்றில் தாய் ஒருத்தி தன் மகனுக்கு உணவூட்ட நிலவை அழைப்பதை,

"முகில் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என மகன் ஒற்றி
வருவையாயின் தருகவென் பாலெனெ"

என்ற பாடல் வரிகள் தெரிவிக்கின்றன. தாய்மார்கள் குழந்தையின் குதூகலத்திற்காக,

"அம்புலி மாமா வா வா வா
அழகழ சொக்கா வா வா"

என்று பாடுவதை இன்றும் கேட்கலாம். திருக்குறளில் புதல்வரைப் பெறுதல் என்ற ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வகுத்துள்ளார். அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் சிறுவர் தோற்றநிலை, சிறுவரின் உணவுப்பழக்கம், அவர்கள் அணிகின்ற ஆபரணங்கள், அவர்களது விளையாட்டுக்கள், எனபல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளதை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் விளக்கமாக, "குழவி கொள்பவரின் ஓம்மதி" கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறு இன்றி எய்தும்
செறுநரும் விழையும் செயிர் நீர் காட்சி
சிறுவர்ப் பயந்து செம்மயோர் என்ப
பல்லோர் கூறிய பழமொழி..."

என அகநானூறு கூறுகின்றது. சிலப்பதிகாரத்திலும் மழலைச்செய்திகள் இடம்பெற்றுள்ளன. அழற்படு காதையில் "குதலைச் செவ்வாய்க்குறுநடைப்புதல்வர்" (129ம் வரி) எனவும், மணிமேகலையில் குழந்தைக் குமரனை" செவ்வாய்க்குதலை மெய்பெறா மழலை (மலர்வனம் – 137) எனவும் இடம்பெற்றுள்ளன.

## இடைக்காலத்தில் குழந்தைக்கவிதை

இடைக்காலத்தில் இறைவன் மீது அன்பு கொண்டு பாடும் கவிதைகள் பல தோன்றின. பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாக கற்பனை செய்து பாடிய பக்திப்பாசுரங்கள் அனைத்தும் குழந்தைக் கவிதை

களாகக் கொள்ள வேண்டும். அவரது தாலாட்டுப் பாடல்கள் உண்மையான பெற்றதாயின் உணர்ச்சி வெளிப்பாடுகளாக அமைந்தன. நிலாவைக்காட்டி குழந்தையோடு விளையாட அழைத்தல், செங்கீரை ஆடுதல், சப்பாணி கட்டுதல், தளர்நடை நடத்தல், காது குத்தி அணிகலன் பூட்டுதல், நீராட அழைத்தல் என ஒவ்வொரு பருவமும் பத்துப்பாடல்களாக கண்ணனைக் குழந்தையாகவும் அவனை வளர்த்த தாய் யசோதை யாகவும் பாவனை செய்து பாடினார். அவரது தாலாட்டுப் பாடல் இன்றும் வீட்டுப்பெண்களின் கலையாக இருந்து வருகின்றது.

"மாணிக்கம் கட்டி வைரம் இடை கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ண சிறுதொட்டில்
பேணி உனக்கு பிரமன் வீடு தந்தான்
மாணிக்கக் குரலனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ"

இவை போன்ற குழந்தைக் கவிதைகளே பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் பிரபந்தம் என வடிவம் எடுத்தது. குழந்தையின் மூன்றாந்திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை இருதிங்களுக்கு ஒரு பருவமாகப் பத்துப் பருவங்கள் அமைத்துப்பாடுவதே பிள்ளைத்தமிழ்.

"பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே"

என பன்னிருபாட்டியலும்,

"சாற்றரிய காப்புத்தாள் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை போற்றிய
அம்புலியே யாய்ந்த சிறுபற்றையே சிற்றிலே
பட்டிசிறு தேரோடும் பத்து"

என வெண்பாப் பாட்டியலும் பிள்ளைத்தமிழிற்கு இலக்கணம் கூறின. இந்தப் பத்துப் பருவங்களிலும் குழந்தைக்கு இயல்பாக உள்ள நிலை, செயல், தன்மை, ஆர்வம் ஆகியவற்றைக் களம் அமைத்துப் பாடினர். இவ்வாறான குழந்தைக்கவிதை பெரியோர்களையும் கவர்ந்து செல்லும் இலக்கிய வடிவமாக மாறியதை ஒட்டக்கூத்தரின் குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழில் கண்டறியலாம்.

**அற இலக்கியங்களில் குழந்தைக்கவிதை**

"ஆத்தி சேர் கொன்றை அழகு தமிழ் மூதுரை
பாத்தி சேர் நல்வழி பண்புலகம் - பூத்த
நறுந்தொகை நன்னெறி ஏழும் குழந்தைக்
குறுந்தமிழ் என்றறிந்து கொள்"

என்ற பாடல் குழந்தைத் தமிழ் அறநூல்களைப் பற்றிக்கூறும் சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வெற்றிவேற்கை போன்ற நீதிநூல்கள் போதிக்கப்பட்டன. சிறுவர்களின் பட்டறிவுத் தன்மைக்கேற்ப வகையில் ஒழுக்கத்தைப் போதிப்பதற்குப் பயனுள்ள இலக்கியங்களாக கருதப் பட்டன. இவற்றின் புறத்தோற்றம் சிறுவர் இலக்கியம் என்றே அழைக்கப்பட்டது. சிறுவர்களுக்கு மனப் பயிற்சிக்கேற்ற வகையில் அகர வரிசையில் "அறம் செய விரும்பு" எனப் போதிக்கப்பட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றில் முதற்தோன்றிய குழந்தை இலக்கியங்கள் இவை என்று குழந்தை இலக்கிய திறனாய்வாளர் டாக்டர்.பூவண்ணன் குறிப்பிடுகின்றார். குழந்தைக் கவிதைகளுக்கு அறிவு நுட்பம் தேவையில்லை. எளிமை யான உணர்வுகள் போதுமானவை. பாட்டின் பொருட் சிறப்பை விட ஒலி நயம் வேண்டும் என்று டாக்டர் மு.வரத ராசன் குறிப்பிடுகின்றார்.

ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலானவற்றைத் தொடர்ந்து அதிவீரர் தந்த சிறுவர் நூல் நறுந்தொகை எனப்படும் வெற்றிவேற்கை என்ப தாகும். இந்நூலில் எண்பத்திரண்டு நீதிகள் உள்ளன.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

கல்வித்துறையில் இவைபோன்ற கருத்துக்கள் சிறுவர் கவிதைகளினூடாகவே ஏற்படவேண்டும்.

இவரைத்தொடர்ந்து அறநூற்போதனையில் "உலக நீதி" என்ற நூலை உலகநாதர் என்பவர் ஆக்கித் தந்துள்ளார். இந்நூலில் பதின்மூன்று பாடல்கள் மட்டுமே உள்ளன. தினமும் படி; தீயன பேசேல்; தாயை நேசி; கெட்ட வரோடு பேசாதே; புறங்கூறாதே போன்ற அறக்கருத்துக் கள்சிறுவர்களுக்குஉரித்தான முறையில்ஊட்டப்பட்டுள்ளன.

**தற்காலத்தில் குழந்தைக்கவிதை**

பதினாறாம் நூற்றாண்டுக்குப்பின் குழந்தைக் கவிதை வளர்ச்சியில் ஒரு தேக்க நிலை காணப்படு கின்றது. எனினும் சின்னக் குழந்தைகளுக்கென வயதை குறிப்பிட்டு பாடல் எழுதியவரான பத்தொன்பதாம் நூற் றாண்டில் எ.ஆ.கிருஷ்ணபிள்ளை என்பவர் தோன்று கிறார். "இரட்சணிய மனோகரம்" என்ற நூலில் தொடக்கத்தில் பாலிய பிரார்த்தனை தொடர்பாக நூற்று எண்பத்து நான்கு வரிகளில் எழுதியுள்ளார்.

"பக்தியால் செபம் பண்ணவே
சுத்தமாய் தெரியாதையா
புத்தியோடுமைப் போற்ற நவ
சித்தம் ஈந்திடும் யேசுவே"

என யேசு பிரானை வேண்டும் பக்திப்பாடலாக அமைந்துள்ளது.

**பாரதியும் குழந்தைக் கவிதையும்**

வளர்ந்த மக்களின் குறையை திருத்திவிட்டால் போதாது. அந்தக்குறைகள் வளரும் குழந்தைகளின் உள்ளத்தில் வேர் கொள்ளாதவாறு அடியோடு களைந்தெறிய வேண்டும் என்ற விருப்பமே குழந்தைப் பாடல் பாட அவருக்கு அடிப்படைக் காரணமாயிற்று. நாட்டிற்கு நல்ல பிரஜைகளாக வரவேண்டுமானால் அஞ்சி அடங்கி ஒய்ந்திருக்கின்ற வாழ்க்கை குழந்தைக்கு ஆகாது.

"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா"

என்று பாடிய உணர்ச்சிக்குக் காரணம் அதுவே

கொடியவர்கள் கொடுமை செய்யும் போது கோழைகளாக அஞ்சி ஒழிந்து வாழும் சமுதாயத்தை மாற்றியமைக்க விரும்பினார். உள்ளத்தில் வீரம் விளங்க வேண்டும் என்ற நோக்கிலேயே பாப்பா பாட்டுப் பாடினார்.

"பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொளல்ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என அறிவுறுத்தலோடு குழந்தையிடம் நீதி உணர்வை யும் ஊட்ட முற்படுகின்றனர். சமுதாயம் திருந்த வேண்டுமானால் குழந்தைப்பருவத்திலிருந்து நல்ல மனப்பாங்கு ஏற்பட வேண்டும். காலத்திற்கேற்ற நல்லகருத்துக்களை கூறி வரும் பாரதி தனது ஆத்திசூடியில், "அச்சம் தவிர்" எனப்போதிக்கின்றார். அறம் செய விரும்பு என்பதை குழந்தைகள் புரிந்து கொள்வது சிரமமானது. இரு ஆத்தி சூடிகளையும் ஒப்பு நோக்கும் போது ஒற்றுமை வேற்றுமை தெரிய வரும்.

| | |
|---|---|
| ஆறுவது சினம் | ரௌத்திரம் பழகு |
| ஐயமிட்டுண் | தையலை உயர்வு செய் |
| போர்த்தொழில் புரியேல் | போர்த்தொழில் பழகு |
| வெட்டெனப்பேசேல் | நேர்ப்படப்பேசு |

(விரிவஞ்சி அதிகம் சேர்க்கப்படவில்லை)

குழந்தையின் வாழ்வில் உள்ள இரு செல்வங்கள் மழலையும் சிரிப்புமாகும். இவற்றை அவர் பாட மறந்து விடவில்லை.

"ஓடி வருகையில் - கண்ணம்மா
உள்ளங்குளிருதடி"

என தன் நெஞ்சோடு அணுகிறார்.

"சொல்லும் மழலையில் கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்"

இவை பாரதியின் அனுபவ உணர்வின் வெளிப்பாடுகளாகும். புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு என பலதுறைகளில் அவரது குழந்தைக் கவிதை வளர்ந்து, குழந்தை இலக்கிய வரலாற்றில் இது ஓர் திருப்புமையம் என்று குறிப்பிடலாம். பாரதியார் காலம் தேசிய உணர்ச்சிக்காலமாதலால் குழந்தையுலகில் முழுமையாக தன் கவனத்தை திருப்ப முடியவில்லை. அவரது வழி வந்த பாரதிதாசன் தனது தமிழ் உணர்ச்சி யில் குழந்தைகள் மன உணர்ச் சிக்கு இடம்கொடுத்தார். இயற்கை, பெண்ணுலகு போன்ற பகுதிகளில் மயில், பெண்குழந்தை தாலாட்டு பற்றி குழந்தைக் கவிதை களை எழுதினார். தமிழும் பகுத்தறிவும் அவர் இதயத் துடிப்பாக இருந்தது. இதனால் குழந்தைகள் அவர் நெஞ்சில் முழுமையாக இடம்பெறவில்லை.

**கவிமணியும் குழந்தைக்கவிதையும்**

"செந்தமிழ் நாட்டுச்சிறுவர் சிறுமியர்க்கு
இந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே"

என சிறுவர்களுக்கென்று ஒரு நூலை உரிமையாக்கினார் என்றால் அது கவிமணியே தான். தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டில் பாப்பா பாட்டை பாரதி தொடக்கி வைத்தாலும் பாப்பா இலக்கியமாக மாற்றிய பெருமை கவிமணிக்கேயுண்டு. என்னைப் பொறுத்தவரை கவிமணியை "குழந்தை இலக்கியத்தின் தந்தை" என்று கூறலாம் போல இருக் கிறது. அவரது மலரும் மாலையும், இளந்தென்றல், குழந்தைச் செல்வம், ஆசியஜோதி போன்ற படைப்புக் கள் மழலை மணம் வீசி நிற்கின்றன பசுவும் கன்று என்ற பாடலில் வரும் சந்தத்தையும் கருத்தையும் அற்புத மாகக் கூறியிருக்கிறார்.

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி
அம்மா என்குது
வெள்ளைப்பசு உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி"

இந்தப்பாடலை எனது பேரப்பிள்ளைக்கு சொல்லிக் கொடுத்த போது தாளலயம் மாறாமல் பாடுகின்றான். இதனால் தான் கவிமணியை குழந்தை இலக்கியத்தின் தந்தை எனக்குறிப்பிடுகின்றேன்.

கவிமணியின் குழந்தைக் கவிதையில் தாலாட்டுப் பாடுவதாயின் அவரே தாயாகி விடுவார்.

ஆராரோ ஆராரோ
ஆரிரரோ? ஆரிரரோ?
மாமணியோ முத்தோ?
மரகதமோ?

என தாலாட்டுப்பாடுவார். "எளிய பதங்கள் எளிய நடை, எளிய சந்தம் இவற்றால் கவிதை செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு புத்துயிர் தருகின்றான்" என்ற பாரதியின் கூற்று இலக்கணத்துக்கு இலக்கியமாக அவரது குழந்தைக் கவிதை காணப்படும். குழந்தை உள்ளத் துக்குப் புரியக்கூடிய எளிமையானதும் கருப்பொருளுக் கேற்ற சொல்லாட்சியை அமைப்பதில் வல்லவராகவும் காணப்பட்டார். கவிமணியைப் பொறுத்தவரை அவர் சொற்களுக்கா காத்து நிற்பதில்லை. சொற்கள் அவருக் காக காத்து நிற்கும் எலிக் கல்யாணம் என்ற பாடலில்,

"வீட்டெலி வந்தது காட்டெலி வந்தது
வெள்ளெலி வந்தது முள்ளெலி வந்தது"

ஓசை நயம் சிறக்க ஒலி நயத்தைப் பயன்படுத்தியுள்ளார். பாரதியாரை ஓரிடத்தில் நினைத்து,

"பாப்பாப் பாட்டிலே நெஞ்சை
பாதிகொடுத்தேனடா
சாப்பாடேதுக்கடா சீனி
சர்க்கரை எதுக்கடா"

என தன் நன்றியறிதலையும் தெரிவிக்கின்றார். கவி மணியின் குழந்தை உள்ளப்பாங்கினை உணர்ந்த சுத்தானந்த பாரதியார்,

"கவிமணியெனும் கண்மணிப்புலவன்
குழந்தையுள்ளம் குலுங்கும் முதியவன்"

எனக் கூறிப்பாராட்டுகின்றார். "குழந்தை இலக்கியத்துறையில் வெற்றிவீரராக காட்சிதரும் பாரதியாரையும் விஞ்சி நிற்கின்றார் கவிமணி" என முடியரசன் சிறப்பிக்கின்றார்.

"பாரதி தொடக்கி வைத்த குழந்தைப் பாடல் துறையை செழுமைப்படுத்தியவர் கவிமணியார்" என்கிறார் தே.ப.பெருமான். பேராசிரியர் சாலை இளந்திரையன் "கருணைக்கும்பரிவுக்கும் அவற்றை வெளியிடும் எளிமைக்கும் உலகில் இடம் உள்ள வரையில் தமிழர் நெஞ்சிலே கவிமணிக்கு ஓர் இடம் உண்டு" எனக்கூறுகின்றார். காலத்தால் அழியா மல், எளிமையால், இனிமையால் கருத்தால் வலுப்பெற்று குழந்தைகள் நலநாட்டத்தினை நித்திய உண்மையாக வழங்கும் குழந்தைப் பாடல்களை அமைத்த நாமக்கல் கவிஞர்,

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதென் செவிப்பெருமை"

என்று மழலை மொழியின் அழியாத்தன்மையை எடுத்துரைத்துள்ளார்.

## வள்ளியப்பாவும் குழந்தைக்கவிதையும்

இவருக்கு முன்னர் பாரதி, பாரதிதாசன், கவிமணி, நமச்சிவாயர், மயிலை சிவமுத்து போன்றோர் குழந்தை கவிதைகள் எழுதிப்பெயர் பெற்றிருந்தனர். எனினும் இவர் குழந்தைக் கவிதை எழுதுவதை ஒரு தொண்டாகக் கருதி அதன் வளர்ச்சிக்குப் துணை போயிருந்தார். பாலன் மலர், டமாரம், சங்கு, பூஞ்சோலை போன்ற பத்திரிகைகள் இவரது நேரடி மேற்பார்வையிலேயே வெளிவந்தன. குழந்தைக் கவிஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒன்று உருவாகவும் காரணமாயினார். பெரிய அளவில் வெளிவந்த இவரது முதல் குழந்தைக் கவிதை நூல் "மலரும் உள்ளம்" என்பதாகும். இது இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. இதனை விட "சிரிக்கும் பூக்கள்" ஈசாப் கதைப் பாடல்கள், பாட்டிலே காந்தி கதை போன்ற நூல்களும் இவரால் வெளியிடப்பட்டன.

வள்ளியப்பாவின் பாடல் குழந்தைகளுக்கு லட்டுப்போல இனிக்கும்.

"வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு

எட்டில் பாதி விட்டு
எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு"

இந்தக் கவிதையில் ஓசைக்குள்ளே உன்னதமான கருத்தை வெகு அற்புதமாக நுழைத்து விட்டுள்ளார். குழந்தைகள் லட்டுக்கு அடிபடாத சமத்துவ உரிமையங்கு இழையோடிக் காணப்படுகின்றது. இவரது கவிதையின் சிறப்பினை டாக்டர் பூவண்ணன், "வள்ளியப்பாவின் பா, தெள்ளிய பா; நம் உள்ளத்தை அள்ளிய பா; உவகையில் தள்ளிய பா" என்று சிறப்பிக்கின்றார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் குழந்தைக் கவிஞர்கள் என இனங்கண்டு டாக்டர் பூவண்ணன் திறனாய்வு நூலொன்றை எழுதியுள்ளார். "குழந்தைக் கவிஞர்கள்" என்ற தலைப்பில் ஐம்பத்தாறு கவிஞர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இதுவே குழந்தைக் கவிதை பற்றிய முதல் திறனாய்வு நூல் என்றும் குறிப்பிடலாம். இந்திய மொழிகள் எதிலும் வெளிவந்தது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஈழத்தில் குழந்தைக் கவிதை

ஈழத்து இலக்கியவரலாறு என்பது கி.பி 14ம் நூற்றாண்டின் பின்னரே தகவல்கள், ஆதாரங்கள், ஆவணங்களுடன் கூடிய வரலாறாகத் தோன்றுகின்றது. இக்கால கட்டத்தில் குழந்தைகள் கவிதைகள் தொடர்பான செய்திகளும் எமக்கு கிடைக்கவில்லை. குழந்தை கவிதை தொடர்பாக பல பாடல்களினை உள்ளடக்கியதாக ஈழத்து சான்றோர்கள் தொகுத்து வெளியிட்ட முதற்சம்பவமாக 1886ம் ஆண்டில் தம்பி முத்துப்பிள்ளை என்பவர் "பால்யக் கும்மி" என்ற பெயரில் சிறுவர்கள் நடிப்பதற்காக ஒரு நூலை வெளியிட்டதாக அறியமுடிகின்றது. 1918ம் ஆண்டில் அரச அதிகாரி முதலியார் வைத்தியாதர் "பாலபோதினி" என்ற பெயரில் ஒரு தொகுதியொன்றினை வெளியிட்டிருந்தார். இவற்றினைத் தொடர்ந்து ச.அருணந்தி அவர்கள் "பிள்ளைப்பாட்டு" என்ற சிறுவர் பாடற்றொகுதி யொன்றினை வெளியிட்டிருந்தார். இது வட இலங்கை தமிழாசிரியர் சங்க வெளியீடாகவே வெளிவந்தது. நூலின் பதிப்பாசிரியரும் சங்கத்தலைவருமான சி.சுவாமி நாதன் பாலர்களுக்கு ஏற்ற சந்த நயத்துடன் இது போன்ற திருத்தமான முறையில் தமிழில் நூல் எதுவும் வெளிவர வில்லை என்றும் பலரின் கவித்துவ சக்தியின்ஒன்று கூட்டப்பட்ட நூலே இதுவாகும்" எனப் பாராட்டியுள்ளார். குழந்தைக் கவிதைகள் எழுதப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் குழந்தைப் பாடற் போட்டியொன்றினை நடாத்தி தெரிவு செய்யப்பட்ட பாடல்களின் தொகுப்பா கவே இந்நூல் வெளிவந்தது. குழந்தையின் மன நிலையைக் கருத்திற்கொண்டு, சூழல், குழந்தை உளவியல், நற்போதனைகள், தாளலயம், விருப்பு வெறுப்பு என்பனவற்றுக்கு ஏற்ற வகையில் நூலாசிரியரின் பணி அமைந்திருந்தது. "ஈழத்து குழந்தைப்பாடல் வரலாற்றில் அருணந்தி தொகுத்து பிள்ளைப் பாட்டிற்கு அழியாத ஓர் இடமுண்டு" என்று பேராசியர் எஸ்.சிவலிங்கராசாவின் கூற்று இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது.

பேராசிரியர் சிவலிங்கராசா பிள்ளைப்பாட்டு நூற்போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை என குறிப்பிடும் பாடல் வருமாறு,

"ஆலமரம் ஆலமரம்
அழகான ஆலமரம்
பாலர் நாங்கள் ஆடல்பாடல்
பழக நல்ல ஆலமரம்"

இப்பாடல் மா.பீதாம்பரப் புலவர் பாடியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குழந்தைக் கவிதை வளர்ச்சியில் சோமசுந்தரப்புலவர்

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக செய்யுள் இலக்கிய வரலாற்றில் இவருக்கு நிகரானவர் எவரையும் சொல்ல முடியாது. திரு.கே.எஸ்.அருணந்தியின் தூண்டுதல் தான் இவரைக் குழந்தைக் கவிஞராக்கியது. குழந்தைகளின் அனுபவத்திற்கேற்ற சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். அதிகளவிலான குழந்தைப் பாடல் களை பாடவில்லையாயினும் அவரது "சிறுவர் செந்தமிழ்" குழந்தைகளை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும்.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"

என்ற பாடல் சிறுவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இங்கு பாடலில் சந்தம் துள்ளிக்குதிக்கின்றது. தனிப்பாடல்களாகவும் கதைப்பாடல்களாகவும் புலவர் பாடியவற்றுள் ஆடிப்பிறப்பு கத்தரிவெருளி, பழுக்கொடியல், எலியும் சேவலும், பவளக்கொடி, தாடியறுந்த வேடன், கொழுக்கட்டைப் பொன்னன் போன்றன குழந்தைகளுக்கேற்ற சிறந்த பாடலாகும். இக் குழந்தைப் பாடல்களில் யாழ்ப்பாணப் பண்பாடு பிரதிபலிப்பதையும் காணலாம்.

#### முது தமிழ்ப்புலவர் நல்லதம்பின் குழந்தைக் கவிதை

ஈழத்து தேசிய கீதத்தை தமிழில் யாத்த முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பியின் சிறுவர் பாடல்கள் "இளைஞர் விருந்து" என்ற நூலாக 1958ம் ஆண்டு வெளி வந்தது. கொழும்பு சாஹீராக் கல்லூரியில் தமிழ் ஆசிரிய ராகப் பணியாற்றிய போது கல்லூரி மாணவன் படித்தற் பொருட்டு "தமிழ்ப்பாடல்கள்" என்ற நூலையும் வெளி யிட்டவர். இவரது சிறுவர் கவிதைகளில் இயற்கையோடு, தமிழ்ப்பற்று, சிறுவர் விளையாட்டுக்கள், தமிழ் அறிஞர் பெருமை முதலானவற்றை வெளிப்படுத்துவனவாக அமையும் குறத்தியும் சிறுவனும் என்ற கவிதையில்,

"கறுத்த உடல் வெளுத்த நகை
குறத்தியரே வாரீர்
சிறுத்த இடைக்கறுத்த உடை
சிறுக்கி நீர் எவ்வூர்"

வரும் பாடல் வரிகளும், அவைப் பற்றிய கவிதைகளும்,

"குந்தி முன்னங் கால்களை
குவித்து கையொன்றாக்குவாய்
கொந்தி காய்பழம்
கொட்டை உணவாக்குவாய்"

என வரும் வரிகளும் குறிப்பிடத்தக்கன. சிறுவர்களின் பட்டறிவுத் தன்மைக்கு ஏற்றதாக இவரது மொழிநடை அமையவில்லை என்பது ஒரு குறைபாடாகும்.

#### வேந்தனாரும் குழந்தைக்கவிதையும்

ஈழத்து தமிழறிஞர்களில் மரபுவழித்தமிழ்ப் புலமையாளரான வித்துவான் வேந்தனார் குழந்தை இலக்கியத்துறையிலும் தடம் பதித்தவர். எளிமையும் கருத்து வளமும், செந்தமிழ் இனிமையும் ஒருங்கு நிறைந்த குழந்தைக்கவிதைகளைக் "கவிதை பூம்பொழில்" என்ற நூலில் காணலாம். இந்நூலில் "கற்பனைக்காதல்"; "அவனும் அவளும்" என்னும் இரு காவியங்களும் இடம் பெற்றுள்ளன. சிறுவர்களின் உள்ள உவகைக்கு ஊட்டமளிக்கும் வகையில் "அம்மா வின் அன்பு" என்று கவிதை அமைந்துள்ளது. ஈழநாடு பத்திரிகையில் மட்டுமன்றி இலங்கை வானொலியிலும் இது ஒலிபரப்பப்பட்டது.

"காலைத்தூக்கி கண்ணில் ஒற்றிக்
கட்டிக்கொஞ்சும் அம்மா
பாலைக்காய்ச்சி சீனி போட்டு
பருகத் தந்த அம்மா"

இவ்வாறு குழந்தை நிலையில் நின்று கவிபாடும் ஆற்றல் பெற்றவர் எவருமேயில்லை. "இவரது கொஞ்சு தமிழ் கவிதைக்கு ஈடாக, மழலைக் கவிதை யாரும் படைக்க வில்லை" என சரவணபவன் (சிற்பி) கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சோமசுந்தரப்புலவருக்கு ஈடானவர் இவரே என்று பண்டிதமணியும் குறிப்பிட்டுள்ளார்.

#### ஏனைய குழந்தை கவிஞர்கள்

ஈழத்து குழந்தைகள்கவிஞர்களின் தனி நூல் களாக யாழ்ப்பாணனின் "பாலர் கீதம்", வெ.விநாயக மூர்த்தியின் "பாலர் பாமாலை"; இ.நாகராஜனின் "சிறுவர் பாடல்"; எம் சுபைரின் "மலரும் மணம்" இ.அம்பிகைபாகனின் அம்மிப்பாடல் என்பன வெளி வந்துள்ளன. குழந்தைகளை மகிழ்விக்கும் வகை யிலான ஏனைய ஈழத்து கவிஞர்களாக கந்தவனம், ஆடலிறை, செல்லையா, திமிலைத் துமிலன், சச்சிதானந்தன், சாரணாகையூம், வீரகத்தி முதலியோரைக் குறிப்பிட லாம். வகைமாதிரிக்கு ஒரு சில பாடல்கள் உதாரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

"ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி
அருமையான சின்னக்குட்டி
ஓட்டமோடி வந்திடுவாய்
உனக்கு முத்தம் தந்திடுவேன்"

-யாழ்ப்பாணன்

"அம்மா வெளியே வா அம்மா
அழகாய் மேலே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனை
துண்டாய் வெட்டினதாரம்மா"

-கவிஞர் மு.செல்லையா

"குதிரை குதிரை மரக்குதிரை
குறும்பு செய்யா மரக்குதிரை
குதித்து ஓடி எஜமானை
குப்புறத் தள்ளிப்போடாது"

-சாரணாகையூம்

"அப்பம் அப்பம் அப்பம்
அம்மா சுட்ட அப்பம்
வட்டமான அப்பம்
வாய்க்கு நல்ல அப்பம்"

-எம்.ஸி.எம்.சுபைர்

ஈழத்து சிறுவர் கவிதை வளர்ச்சியில் வேறு சில முயற்சி களையும் அவதானிக்ககூடியதாகவுள்ளது. கோப்பாய் பெண்கள் அரசினர் ஆசிரியர் கலாசாலை பேராசிரியை செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு அவர்கள் தமிழகத்தினதும் ஈழத்தினதும் குழந்தைக் கவிஞர்களின் பாடல்களை தொகுத்து இசை அமைத்து "செந்தமிழ் சிறுவர்களே சேர்ந்து பாடுவோம்" என்னும் பெயரிட்டு வெளி யிட்டுள்ளனர். மட்டக்களப்பு இலக்கிய மன்றத்தினர் ஈழத்து இளங் கவிஞர்களது நாற்பத்தொரு குழந்தைப் பாடல்களைத் தொகுத்து "கனியமுது" என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர். பிறமொழிச் சிறுவர் பாடல்களை தமிழில் அறிமுகப்படுத்தும் பணியில், கு.இராமச் சந்திரன், க.நவசோதி போன்றோர் ஈடுபட்டிருந்தனர். ஈழ நாடு இதழில் இரசிகமணி கனக செந்திநாதன் "சிறுவர் கவிநயம்" என்னும் கட்டுரைத் தொடர் ஒன்றையும் தொடக்கியிருந்தார். ஏறக்குறைய இக்கட்டுரையில் இருபத்தைந்து குழந்தைக் கவிஞர் களது ஆக்கம் விமர்சனம் செய்யப்பட்டிருந்தன.

#### மலேசிய நாட்டின் குழந்தை கவிதை வளர்ச்சி

தமிழ் கூறு நல்லுலகம் என்பது பழங் காலத்தில் தமிழகத்தையும் ஈழத்தையும் தான் குறித்தது என்பர். இன்று உலகின் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் தமிழ் மொழி பேசப்பட்டு வருகிறது. அவ்வகையில் மலேசியா நாட்டில் தமிழறிஞர்கள் பலரால் தமிழ் வளர்க்கப்பட்டு வருகின்றது. முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகா நாடே கோலாலம்பூரில்தான் நடைபெற்றது. அவ்வகை யில் மலேசியாவிலும் குழந்தைக் கவிஞர்கள் பலர் தோன்றி குழந்தை இலக்கியத்தை வளர்த்து வருகின்றனர்.

ஆசிரியராகப் பணியாற்றும் சி.வேலுசுவாமி மலேசியாவின் மிகச் சிறந்த குழந்தைக் கவிஞராவார். அவரது குழந்தைப் பாடல்கள் "தேனியைப்பார்";

"பாட்டுப்பாடலாம்" என்னும் இரண்டு நூல்களாக வெளிவந்தன. "கொண்டாட்டம்" என்ற பாடலில் பள்ளி செல்லும் மாணவன் மழை பெய்யும் காட்சியை,

"இடி இடிக்குது மழை பெய்யுது
எனக்கு கொண்டாட்டம்
எங்கும் போக முடியவில்லை
என்ன திண்டாட்டம்

பள்ளிக்கூடம் போக வேண்டும்
பஸ்சும் இல்லையே
படிப்புக் கெட்டுப் போச்சு தென்று
பலரும் தொல்லையே
…………..
டமடமன்னு இடி இடிக்குது
நடுங்க வைக்குது
நல்ல மழை பெய்யுது நாட்டில்
நலம் பெருக்குது"

எனச் சிறுவன் பாடும்போது அவனது மனிநிலை எத்தன்மையானதென்பதையும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

முரசு நெடுமாறன் என்பவரும் ஒரு தமிழாசிரியர், மலேசிய வானொலியில் இவரது சிறுவர் பாடல்கள் புகழ் பெற்றிருந்தன. இளந்தளிர் என்ற பெயரில் அப்பாடல்கள் நூல் வடிவம் பெற்றன.

ஒன்று பட்டால் உயர்வு உண்டு. ஒன்றுபடுவோர் வென்று வாழலாம் என்ற உயரிய கருத்தை குழந்தைகளின் மனதில் விதைப்பதே அற்புதமாக உள்ளது.

"பூக்கள் ஒன்று சேர்ந்தால்
புனித மாலை பெறுகின்றோம்
ஈக்கள் ஒன்று சேர்ந்தால்
இனிய தேனைப் பெறுகின்றோம்
ஆறு பலவும் சேர்வதால்
ஆழ் கடலைப் பெறுகின்றோம்
நாம் எல்லாரும் கூடினால்
நன்மை கோடி விளையும்"

அவரது கருத்துக்கள் ஆதாரங்கள் பலவற்றுடன் செல்வதைக் காணலாம்.

**புலம்பெயர் நாட்டில் குழந்தைக் கவிதை**

புலம்பெயர் தமிழர் இலக்கிய முயற்சிகளில் குழந்தைக் கவிதைத்துறை தாய்த் திருநாடுகளுக்கு ஈடாக வளர்ந்தது என கூறமுடியாது. புலம்பெயர்ந்து சென்றவர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொள்வதிலும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான கல்வி நடவடிக்கைகளிலும் தான் தம் கவனத்தை செலுத்தியிருந்தனர்.

பத்மா இளங்கோவன் என்பவரின் செந்தமிழ் மழலைப்பாடல்கள், செந்தமிழ் சிறுவர் பாடல்கள் என்ற இரு தொகுப்புகள் வெளியிடப்பட்டிருந்தன. பெரும்பாலானவர்கள் குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதில் தான் அக்கறை காட்டி வருகின்றனர்.

**திரைப்படப் பாடல்களில் குழந்தை**

திரைப்பட பாடல்களில் குழந்தைக் கவிதைகள் பல உயர்ந்த ரகத்தைச் சார்ந்தனவாக அமைந்திருந்தன. அவை நேரடி அனுபவ உணர்வை வெளிப்படுத்தா விடினும் கதையோட்டத்தை விளக்கும் வகையில் எழுதப்பட்டன என்பதை மறக்கக்கூடாது. எழுபது ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த பராசக்தி படத்தில் உடுமலை நாராயணகவியின் பாடல் குழந்தைக்கவிதையின் தேன் அமிர்தமாக விளங்குகின்றது. அண்ணன்மாரையும் கணவனையும் பிரிந்த நிலையில் ஒரு தாய் மகனை தலாட்டும் போது அப்பாடல் சோகமயமாக இருந்தாலும் குழந்தைகளுக்கான மழலை மொழியிலேதான் எழுதப்பட்டுள்ளது. கவிதைக்குரிய அத்தனை இயல்புகளும் அப்பாடலில் ஒருங்கே காணப்பட்டன.

> குழந்தைக் கவிதைகள் சிறுவர்களின் உள்ளத்தைப் புரிந்து, அவர்களைச் சிந்திக் கச் செய்து. அவர்களது பிரச்சினைகளை அவர்களே விடுவிக்கின்ற ஆற்றலைப் பெறும் வகையில் எழுதப்பட வேண்டும்.

"கொஞ்சு மொழி சொல்லும் கிளியே செழும்
கோமளத் தாமரைப் பூவே ஒரு
வஞ்சமிலா முழுமதியே - இன்ப
வானில் உதித்த நல்லமுதே
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

மாமன்மார் மூவர் தம்பி நல்ல
வாழ்வளிக்க வருவார்
மாம்பழக் கன்னத்திலே முத்த
மாரி பொழிந்திட வருவார்
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

வெள்ளியினால் செய்த ஏட்டில் - நல்ல
வைர எழுத்தாணி கொண்டு
தெள்ளு தமிழ் பாடம் எழுத உன்னைப்
பள்ளியில் சேர்த்திட வருவார்
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ!

இந்தப்பாடல் ஒரு தாலாட்டுப்பாடல். அப்பாடலில் தாயின் உணர்வுகள், உறவுகள், எண்ணங்கள், சிந்தனைகள் அத்தனையும் பொதிந்த ஓர் அற்புதமான குழந்தைக் கவிதை.இன்னொரு திரைப்படத்தில் குழந்தையின் நடத்தை, செயல், தலைமொழி, அதன் உடலழகு, தாயின் உணர்வு நிலை போன்றவற்றின் பிரதிபலிப்பாக பட்டுகோட்டையாரின் பாடல் ஒன்று வருமாறு:

"விண்மீனும் கண்ணேயுன் கண்ணாகுமா
விளையாடும் கிளியுன் தன் மொழி பேசுமா
கண்ணாடியுனைப் போல கதை கூறுமா - இரு
கைவீசி உலகாளும் மகனாகுமா?


இவ்வாறு குழந்தைக் கவிதை வளர்ச்சியில் திரைப்படங்களுக்கும் முதன்மையான இடம் உண்டு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

**நிறைவுரை**

இன்றைய குழந்தை நாளைய சமுதாயத்தை வழி நடத்தும் தலைவர்கள். இதனால் அவர்களது உள்ளத்தில் நல்ல கருத்துக்கள் விதைக்கப்பட வேண்டும். அந்த விதை துளிர்விட்டு மரமாக வளர்ந்து, பூத்துக் கருவாகி நல்ல கனிகளைத் தர வேண்டும். குழந்தைக் கவிதைகள் சிறுவர்களின் உள்ளத்தைப் புரிந்து, அவர்களைச் சிந்திக் கச் செய்து, அவர்களது பிரச்சினைகளை அவர்களே விடுவிக்கின்ற ஆற்றலைப் பெறும் வகையில் எழுதப்பட வேண்டும். சிறிய கவிதைகளுக்குள் தான் பெரிய மரங்கள் உறங்குகின்றன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவகாந்தன்

# மலர் அன்ரி



மலர் அன்ரி எனக்கு நேரடியான சொந்தமில்லை. ஆனாலும் மலர் அன்ரியென்றே அழைத்தேன். அவளது அக்காளை மேரி மாமி என்று அழைத்து வருகையில், அவளேதான் தன்னை மலர் அன்ரியென அழைக்கச் சொன்னாள். அப்போதுதான் எனக்கும் தெரிந்தது அந்தப் புதிய சொல் மாமியென அர்த்தம் கொண்டதென. அவள் என்னோடு வெகு அன்பாயிருந்தவள். என்னை அரவணைத்து எந்நேரமும் அருகில் வைத்துக் கொண்டவள்.

இப்போது அவளையேயல்ல, என்னையே எழுதப்போகிறேனாயினும், இதில் அவளின் உள்ளும் வெளியும் தெரிய வரவேதான் போகின்றன. எனினும் இது வேறொரு அர்த்தமும் நோக்கமும் கொண்டது.

இக் கதை நிகழ் காலத்தில் அவளுக்கு சுமார் இருபது வயதிருக்கலாம். எனக்கு ஏழுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட ஒரு வயது. அவள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் அந்த வயதில் என்னில் எவ்வாறு புரிதலாகினவென்பதை, இவ்வளவு காலத்துக்குப் பின்னான அறிவு அனுபவங்களின் விளக்கப் பின்புலத்தில் நான் எழுதுவதென்பது சிரமமான விஷயம். ஆனாலும் அவள்மீதான பிரியமுடனும், சிறுபிள்ளைத்தனத்தின் சிந்தனை செயற்பாங்குகள் வெளிப்பாடு அடையும்படியுமே இதைச் செய்ய நான் முனைவேன்.

மலர் அன்ரி மாநிறம். கல்யாணமாகி வாழப்போய் கணவனை இழந்த பின் அங்கே தனியனாய்த் திரும்பிவந்த அவளது அக்கா மேரி மாமியைவிடவும் நிறமாயிருந்தாள். அவர்களது அம்மாவின் நிறத்தோடு ஒப்பிட்டால் அவர்களைச் சிவப்பி களென்று தாராளமாகச் சொல்லிவிடலாம். அதுபோல் அவள் அழகானவளென்பதை யும் நிச்சயப்படுத்திச் சொல்லவேண்டும்.

அந்த வட்டாரத்திலேயே எஸ்.எஸ்.சி. படித்தவள் மலர் அன்ரி மட்டும்தான். பரீட்சையில் றிசல்ற் என்னவெனக் கேட்பவர்களுக்கு “றிபேர்ட்” என சிறிது தயக்கமாக அவள் சொல்கிறபோது, அவள் பாஸ் செய்யவில்லை என்பதை நான் புரிந்துகொண்டிருந்தேன்.

ஊர் நாற்சந்தியின் ஒரு மூலையில் அவர்களது வீடென்றால், அதன் எதிர் மூலையில் எங்களுடைய வீடிருந்தது. அதனால் நான் அங்கேதான் நிற்கிறேனாவென்பதை மலர் அன்ரியைக் கூப்பிட்டே விசாரித்துவிடும் சுலபமிருந்ததில் நான் அங்கே போய்வருவதற்கான இடைஞ்சலேதும் என் அம்மாவிடமிருந்து ஏற்பட்டுவிடவில்லை. அது என் தம்பிக்கும் மிக அனகூலமாக இருந்திருக்குமாதலால், அம்மாவுக்கு அதில் இரட்டைத் திருப்தி. எந்நேரமும் தம்பியுடன் சண்டை பிடிக்கிறேனென்று அம்மாவுக்கு என்னில் குறை.

மலர் அன்ரி வீட்டில் வேறு சிறுவர்கள் இல்லாததோடு, அங்கே வந்து விளையாடுகிற வேறு அயற் சிறுவர்களும் இல்லாததில் அந்த வீட்டு குட்டி இளவரசனாக நான் அரவணைக்கப்பட்டேன். பள்ளி முடிந்த நேரத்திலிருந்து வார நாட்களிலும், சனி ஞாயிறுகளில் பெரும்பாலான நேரமும் எனது வீடு அதுவாகவே ஆகியிருந்தது.

மலர் அன்ரி கதைப் புத்தகங்களும், கல்கி குமுதம் ஆனந்தவிகடன் அம்புலிமாமா கல்கண்டு என சஞ்சிகைகளும் நிறைய

வாசிப்பாள். மேரி மாமிக்கும் அந்தப் பழக்கம் இருந்தது. கல்கண்டு சஞ்சிகையில் வரும் கத்தரிக்காய் துப்பறியும் சித்திரக் கதை அவளுக்கு மிகவும் பிடிக்கும். அந்தப் பிடிப்பு அவள் கதை சொல்லும் விதத்தில் குறிப்பாகத் தெரியும். சொல்லாவிட்டால் அவதி தீராதென்பது போல், என்னைக் கூப்பிட்டு கூப்பிட்டு வைத்து ஒரு தீவிரத்தோடு கதை சொல்வாள்.

சில காலம் ஆக, மேரி மாமிக்கு இரண்டாம் கல்யாணம் நடந்து அவள் கணவனூர் போக, மலர் அன்ரி வீட்டிலே தனித்துப்போனாள். மலர் அன்ரியின் தாய்க்கு சந்தையிலே காலமைப்பாட்டில் மீனும், பின்னேரப்பாட்டில் கருவாடும் வியாபாரம். காலையிலே போனாளென்றால் அவள் வீடு திரும்ப எப்படியும் இருண்டுவிடும். தகப்பனுக்கு ரயில்வேயில் சிங்களப் பகுதியிலே வேலை. இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வீட்டுக்கு வருவதே அபூர்வம். வந்தாலும் தங்குவது குறைவு. ஒரு சனிக்கிழமை காலையிலே வந்தாரென்றால், ஞாயிறு மாலையில் பையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவார். அவர் அங்கே ஒரு சிங்கள மனுஷியோடு குடும்பம் நடத்துவதாக ஊரிலே ரகசியப் பேச்சு இருந்தது.

அவர் அவ்வாறு வந்து வீட்டிலே தங்கும் நாட்களில் நான் அங்கே போவது கிடையாது. அவரைக் கண்டாலே எனக்குப் பயம். அப்படியொரு சிரிப்பற்ற முகமும், தொனி பெருத்த குரல்வாகும் அவருக்கு.

மலர் அன்ரியின் தாயோடு அவரை ஒப்பிடுகையில் அவருக்கு அவளைவிட பத்து பதினைந்து வயதாவது குறைவுபோல் தோன்றும். ஆனால் அந்த மாயத் தோற்றத்தில் நான் மயங்கியதில்லை. ஏனெனில் கணவர்களுக்கு எப்போதும் மனைவியரைவிட வயது கூடவெனவே நான் நம்பியிருந்தேன்.

மேரி மாமி கல்யாணமாகிப் போன பின், தாயும் சந்தை வியாபாரத்திலிருந்து திரும்பி நடந்து வர இருண்டுவிடுமாதலால், மலர் அன்ரி தனியாகத்தான் வீட்டிலே இருந்துவந்தாள். பள்ளி முடிந்து வந்த நான் வீட்டிலே சிறிது தாமதித்துவிட்டாலோ, ஒழுங்கையில் நடக்கும் போளை அடி, காககட்டு, புள்ளடி விளையாட்டுகளில் பராக்காகி நின்றுவிட்டாலோ மலர் அன்ரியே தேடிவந்து என்னைக் கூட்டிப்போய் விடுவாள்.

அப்போது மாரி தொடங்கியிருந்தது.

நத்தாருக்கு சில நாட்கள் இருந்தன.

ஒருநாள் பொழுது சாய்கிற நேரமாய் தேவ சகாயம் மலர் அன்ரி வீட்டுக்கு வந்தான். தேவ சகாயத்தை எனக்குத் தெரியும். ஊர்த் தொங்கலில் வயல்கரைப் பக்கமாய் அவனது வீடு இருந்திருக்க வேண்டும். அங்கிருந்துதான் சைக்கிளில் வேலைக்குப் போய்வருவான். பெல் தேவையில்லாத சைக்கிள் அவனது. அதுவாகவே சப்தித்துக்கொண்டுதான் வரும்; போகும். கொஞ்சக் காலத்துக்கு முன்புதான் பாஸையூரிலிருந்து அங்கே அவனது தாய் தகப்பன் காணி வாங்கி வீடு கட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். ஐயா யாருடனோ கதைக்கும்போது சொன்ன ஞாபகம். பல சிறுவர்களும் அவனை சகாயமண்ணை என்றும், பெரியவர்கள் சகாயம் என்றும் அழைத்தார்கள். நானும் அவனை விளிக்க நேர்ந்தவை குறைந்த சந்தர்ப்பங்களென்றாலும் சகாயமண்ணையென்றே அழைத்திருக்கிறேன்.

வீட்டுக்கு வந்த சகாயமண்ணை பின்வளவில் போய் பனை மட்டையொன்று வெட்டிவந்தான். கருக்குச் சீவி, அதைப் பிளந்து, தேவையான அளவுகளில் துண்டு துண்டாக வெட்டினான். முக்கோணம், சதுரங்கள் வரும்படியாக அவற்றை தடித்த நூலெடுத்து கட்டத் தொடங்கினான். “ஏனிது, மலரன்ரி?”யென நான் கேட்க, “வெளிச்சக் கூட்டுக்குத்தான்” என்றாள் அவள். வேதக்காரர் அதிகமாய்க் குடியிருக்கும் அந்த ஊரிடத்தில் நத்தார்க் காலத்திலே அவ்வாறு சில வீடுகளில் கட்டுவதை நான் கண்டிருக்கிறேன்.

பனைமட்டைக் கீறுகள் கட்டப்பட்டு முடிந்ததும் வர்ண ரிசுப் பேப்பர்களை அளவாக வெட்டி ஒவ்வொரு கட்டத்துக்கு ஒவ்வொரு வர்ணம் வரக்கூடிய வாறு சகாயமண்ணை அவற்றை பசையினால் ஒட்டினான். பிறகு காயும்வரை தொடவேண்டாமெனக் கூறி வீட்டுக் கூரையின் உட்புறத்தில் ஒரு வசதியான இடம் பார்த்து வெளிச்சக் கூட்டைக் கட்டி தொங்கவிட்டான். “ரண்டொரு நாள் போகட்டும், வந்து பாக்கிறன்” என்றவன், பின் சிறிதுநேரம் முற்றத்தில் நின்றபடியே மலர் அன்ரியோடு கதைத்துவிட்டு போய்விட்டான்.

அங்கே வருகிற நேரமெல்லாம் வீட்டுக் கூரையில் கட்டித் தொங்கவிட்டுள்ள வெளிச்சக் கூட்டை அண்ணாந்து அண்ணாந்து பார்ப்பதே எனக்கு வேலையாகிப் போனது. “வெளிச்சக் கூடு இன்னமும் காயேல்லயோ, மலரன்ரி? எப்ப கட்டுவியள்?” என அன்ரியை அடிக்கடி கேட்கவும் ஆரம்பித்துவிட்டேன். அவளும், “சகாயமண்ணை வந்துதான் பாத்துச் சொல்ல வேணும்” என்று சுலபமாகச் சொல்லி தப்பித்துக் கொண்டு இருந்தாள்.

சகாயமண்ணை நாளுக்கு இரண்டு மூன்று தடவைகள் வேலைக்கோ வேறு அலுவல்களுக்கோ அந்த றோட்டால் சைக்கிளில் போய்வருகிறான், முற்றத்தில் அல்லது படலையில் மலர் அன்ரி நிற்பதைக் கண்டால் சைக்கிளை மறித்து நின்று பேசுகிறான், வெளிச்சக் கூடு காய்ந்திருக்குமா என்பதை அன்ரி கேட்டிருக்கலாமே யென எனக்குத்தான் துக்கமாகிப் போகும்.

மேரி மாமிக்கு குழந்தை பிறந்ததாய் போஸ்ற் கார்ட் தகவல் வந்து, மலர் அன்ரியின் அம்மா அவளைப் பார்க்க போயிருந்தவேளையில், நத்தாருக்கு இன்னும் நாலு நாள் இருப்பதாக மலர் அன்ரி கணக்குப் பார்த்துச் சொன்னதற்கு அடுத்த நாள் மாலையில் சகாயமண்ணை மறுபடி அங்கே வந்தான்.

நான் அப்போது அங்கேதான் நின்றிருந்தேன்.

“மழை வாற சிலமனும் இல்லை; நேரமுமிருக்கு; அப்ப... இண்டைக்கே வெளிச்சக் கூட்டை கட்டியிடுவம், மலர்” என்றான்.

மலர் அன்ரி குளித்து வந்து, உடுப்பு மாற்றி, தலையிழுத்து, பவுடர் போட்டு, பொட்டு வைத்து நல்ல வடிவாய் நின்றிருந்தாள். “அதைப் பாக்கத்தான நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறம்” என தன் தெத்துப் பல்லின்

ஒருவித அழகு சிதற சிரித்தாள் அவள்.

சகாயமண்ணை மலர் என்று அழைத்ததையே பிடிக்காதிருந்த எனக்கு, மலர் அன்ரி சிரித்துக்கொண்டு பதில் சொன்னது விசரைத்தான் கிளப்பிற்று. ஏன் பிடிக்க வில்லையென்றெல்லாம் தெளிவாய்த் தெரிய வில்லையே தவிர, அந்தப் பிடிப்பின்மை இருந்தது மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது.

சூரியன் மேற்கே சாய்ந்துகொண்டு இருந்தது. இருள வெகுநேரமில்லை இனி. சகாயமண்ணை அவசர மானான். அவன் எதிர்ப் பக்க வளவிலுள்ள வெறுங் காணி நாவல் மரத்தில் ஒரு முனைக் கயிற்றைக் கட்டி, மலர் அன்ரியின் வளவு வேப்ப மரத்துக் கிளையிலே மறுமுனையை முதலில் தொங்கவிட்டான். பிறகு வெளிச்சக் கூட்டை, கயிற்றின் முனையை இழுத்தால், அது றோட்டின் மத்தியில் உயர்ந்து நிற்கக்கூடியவாறு கட்டி முடித்தான்.

வேலை ஆரம்பிக்கும் முன்னரே தன் சேர்ட்டைக் கழற்றி விறாந்தையில் மறைப்புக்குக் கட்டியிருந்த மூங்கில் தட்டியிலே போட்டிருந்ததில், சகாயமண்ணை யின் கரிய வெறுமேனியில் வியர்வை குளித்ததுபோல் வழிந்துகொண்டிருந்தது. துளி துளியாய் அவை வழிந்து உதிர்வதை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டி ருந்தாள் மலர் அன்ரி.

புதுச் சைக்கிள் வைத்திருக்கிற நாகராசா வோடும் சிலவேளை மலர் அன்ரி கதைப்பதுண்டு. "டேய்... வாடா... போடா" என்று "டா"போட்டுத் தான் பேசுவாள். அவ்வாறு பேசினால் பரவாயில்லை யென்றுதான் அப்போது நான் நினைத்திருந்தேன். ஆனால் சகாயமண்ணையோ பேய்க் கறுப்பாயிருந்தா லும், நாகராசாவைவிட அழகானவாய் இருந்தான். தன்னைக் கவனிக்கும்படி செய்யும் ஒரு வசீகரம் அவனிடத்தில் இருந்தது. அவனது வெறுமேனியில் வழிகிற வியர்வை எனக்கோ பார்க்கவே அருவருப்பாய் இருக்க, மலர் அன்ரி அதையே உற்று உற்றுப் பார்ப்பதும், அவனுக்குக் கிட்டக் கிட்டவாய்ப் போய் நிற்பதும் எனக்குப் பிடிக்கவேயில்லை.

என்ன நினைத்தாளோ, திடீரென மலர் அன்ரி அடுக்களைக்கு ஓடினாள். சிறிதுநேரத்தில், "செபமாலை மாதாவே...!" என்று அவள் அங்கிருந்து கூவியது கேட்டது. பின் என்னைக் கூப்பிட்டாள். நான் செல்ல, "ராசா, சகாயமண்ணை பாவமெல்லே, எவ்வளவு களைச்சுப்போய் இருக்கிறார், நீயும் பாத்தியெல்லே, ஒரு தேத்தண்ணியாச்சும் நாங்கள் வைச்சுக் குடுக்கவேணு மெல்லோ, காலமையே சீனி முடிஞ்சுபோச்செண்டது எனக்கும் இப்பதான் ஞாபகம் வந்திது, சின்னக் காலால ஓடிப்போய் கடையில கா றாத்தல் சீனி வாங்கிக் கொண்டு வந்திடுறியா" என்று கேட்டாள்.

நான் தயங்கினேன். கணபதி கடைதான் சுற்று வட்டாரத்தில் எங்கள் வீடுகளுக்குக் கிட்ட உள்ள கடை. என்றாலும் போய்வர இருண்டுவிடும். அதற்குள் வெளிச்சக் கூட்டை சகாயமண்ணை மேலே கட்டி யிட்டால்...? நான் அதைச் சொன்னேன்.

"கட்டமாட்டார். நீ வாறமட்டும் கட்ட வேண்டாமெண்டு நான் மறிச்சு வைப்பன்" என்று உறுதி சொன்னாள் மலர் அன்ரி. நான் சம்மதித்தேன்.

மலர் அன்ரி அடுப்படிப் பரணிலிருந்த அடுக்குப் பெட்டியெடுத்து காசு பொறுக்கி எண்ணித் தந்தாள். அவள் குனிந்து காசு தந்தபோது, பின்னேரத்தில் குளித்திருந்தவளின் மேனியிலிருந்து வாசச் சோப்பின் வாசனை மூச்சில் அடித்தது. பெரிய கழுத்துச் சட்டைக்கூடாக நெஞ்சப் பிளவு தெளிவாய்த் தெரிந்தது. முன்பெல்லாம் அவளை நான் அந்தமாதிரிக் கண்டதே யில்லை. ஆனாலும் எனக்கு பறந்துபோய் கடையில் சீனி வாங்கிக்கொண்டு வருவதே முதன்மைச் சிந்தனையா யிருந்தது.

காசு கையில் கிடைத்தமாத்திரத்தில் எடுத்தேன் ஓட்டம்.

கடையிலே அந்தநேரத்தில் சனமாய்த்தான் இருந்தது. ஒருமாதிரி துளைத்துக்கொண்டு நுழைந்து, முன்னாலிருந்த மேசைக்கு மேலாக தலையை உயர்த்தி, "கா றாத்தல் சீனி தாருங்கோ... கா றாத்தல் சீனி..." எனச் சொல்லிக்கொண்டே நின்றேன். விளக்கு வைக்கிற நேரத்தில் எங்கிருந்து வந்த பெடியனோ, இருட்டு முன்னம் போகட்டுமென எண்ணிப்போலும் கடைக் காரர் சீனியை கட்டித் தந்தார். சரையை வாங்கியதும் அம்மா அவ்வப்போது சொல்லியனுப்பும் "கடையில எப்பவும் மிச்சக் காசை கேட்டு வாங்கவேணும், இல்லாட்டி அவை மறந்துபோவின" என்ற வார்த்தைகள் ஞாபகமாக, "மிச்சக் காசு" என்றேன்.

"கா றாத்தல் சீனி எட்டுச்சதம் தான்; மிச்சமில்லை."

நான் மறுபடி விசையெடுத்தேன்.

மேற்குத் திசைப் பனங்கூடலுக்குள் மஞ்சள் பெரு வட்டத்தில். இன்னும் சூரியன் நின்று கொண்டிருந்தது.

சென்ற வேகத்தில் நான் தகரப் படலையைத் திறந்த சத்தம் பெரிதாய்க் கேட்டிருக்கும். விறாந்தை மூங்கில் தட்டி மறைப்பில் நின்றிருந்த சகாயமண்ணை யும் மலர் அன்ரியும் இறங்கி முற்றத்துக்கு வந்தார்கள்.

மலர் அன்ரி சீனிச் சரையை என்னிடமிருந்து வாங்கிப் போய் சகாயமண்ணைக்கு தேத்தண்ணீர் போட்டுவந்து கொடுத்தாள்.

சகாயமண்ணை தேநீர் அருந்தி முடிந்ததும், வெகு ஆர்வமாய் வெறும் கோப்பையை வாங்கி விறாந்தையில் மலர் அன்ரி வைக்க, வெளிச்சக் கூட்டு வேலையில் கவனமானான் சகாயமண்ணை. தூரத்தில் பக்குவமாய் வைத்திருந்த கடதாசிச் சரையிலிருந்து இரண்டு மெழுகுதிரிகளை கொளுத்தி வெளிச்சக் கூட்டின் சப்பையான தடித்த நடுத் தண்டில் நன்கு பொறுத்திருக்கும்படி அமைத்தான். பின் மெதுவாக வேப்ப மரக்கிளையில் தொங்கவிட்டிருந்த கயிற்றை இழுத்து இழுத்து வெளிச்சக் கூட்டை மேலே வரச் செய்தான்.

வெளிச்சக் கூடு கட்டியாகிவிட்டது. இனி அங்கே எனக்கு வேலையில்லை. வெளிச்சக் கூட்டை கிழேயிருந்தல்ல, தூரவிருந்து பார்த்தாலே அதனழகு இன்னும் கூடவாய்த் தெரியுமென்று எனக்குத் தெரிந் திருந்தது. நான் வெளிச்சக் கூட்டைப் பார்த்தபடி றோட்டில் பின்னோக்கி நடந்து நடந்து எங்களது வீட்டை

யும் தாண்டிப் போய் றோட்டு முகரியில் நின்றேன்.

இருள் கவியக் கவிய வெளிச்சக் கூட்டின் மஞ்சள் பச்சை சிவப்பு வெள்ளை நீல காவி நிறங்கள் விகசிப் படையத் துவங்கின. ஒருபொழுது பார்த்த போது மலர் அன்ரியும் சகாயமண்ணையும் படலைக்கு முன்னால் நின்றிருந்தது தெரிந்தது. மறுபொழுது பார்த்தபோது இருள் அவர்களை விழுங்கியிருந்தது. எனக்கு அதுபற்றி ஒன்றும் தோன்றவில்லை. என் நெஞ்சு முழுக்க வெளிச்சக் கூடு காண்பதின் பரவசம் நிறைந்திருந்தது.

என்னை அழைத்த அம்மாவின் குரல் வீட்டிலிருந்து எழுந்தது. அப்போதுதான் கவனித்தேன், றோட்டில் அங்கங்கே வீடுகளின் முன்னால் நின்று வெளிச்சக் கூடு காண்போரின் தொகை.

மறுநாள் பொழுதுபடும் வேளையிலும் மலர் அன்ரி வீட்டுக்கு சகாயமண்ணை வந்தான். வெளிச்சக் கூட்டை புது மெழுகுதிரிகள் கொளுத்திவைத்து உயர ஏற்றிக் கட்டிய பின் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு போய்விட்டான். மறுநாளும் அவன்தான் வந்து வெளிச்சக் கூட்டை ஏற்றினான்.

இப்போதெல்லாம் மலர் அன்ரி வீட்டில் நான் அதிகநேரம் தங்குவதில்லை. வெளிச்சக் கூடு ஏற்றியதும் றோட்டு முகரிக்கு வந்துவிடுவேன். மலர் அன்ரி பாவம் தனிய என்ற எண்ணம் அவ்வப்போது எழத்தான் செய்யும். ஆனாலும் இன்னும் சிறிதுநேரத்தில் பக்கத்து வீட்டு அன்னம்மா ஆச்சி படுக்கைத் துணைக்கு வந்து விடுவாள் தானேயென்று சமாதானம் ஆகிக் கொள்வேன்.

"வெளிச்சக் கூடு வைச்சாப் பிறகு நீ இஞ்ச வந்தாலும் கனநேரம் நிக்கிறாயேயில்லையே, ராசா. மலரன்ரி பாவம்... தனியா இருப்பாவெண்டு நெக்க மாட்டியோ?" என ஒரு நாள் மலர் அன்ரி கேட்கவும் செய்தாள். "அன்னம்மா ஆச்சி வருவாவெல்லோ?" என்றேன் நான். "அவ வர எவ்வளவு நேரமாகுமோ? கொழும்புக் கோச்சு வாற சத்தம் கேட்டாப் பிறகுதான் அவ வீட்டைவிட்டு வெளிக்கிடுவா."

நான் அதற்கு ஒன்றும் சொல்வதில்லை.

நத்தாருக்கு முந்திய நாள் மாலையில் மலர் அன்ரியின் அம்மா மேரி மாமியின் வீட்டிலிருந்து திரும்பிவிட்டாள்.

நத்தாரிலன்று சகாயமண்ணை வெளிச்சக் கூடு வைக்க வரவில்லை. சிறிதுநேரம் காத்திருந்து ஏமாறிய நான் மலர் அன்ரியிடம், "இண்டைக்கு வெளிச்சக் கூடு ஏத்திறேல்லையோ?" என்று கேட்டேன். அவள்தான் சொன்னாள், "இண்டைக்கு சகாயமண்ணை வர மாட்டார்; பாஸையூர் போயிட்டார்; நான்தான் கூடேத்தப் போற"னெண்டு.

எனக்குப் பரபரப்பாகிப் போனது. மலர் அன்ரியாலும் அது ஏலுமாவென்று பார்க்க ஆர்வம் மேவிப் போனேன். அவள் கொய்யாப் பழம் பிடுங்க கொய்யா மரமென்றும், நாவல் பழம் உலுப்ப நாவல் மரமென்றும் ஏறி இறங்கிற ஆள்தான். மலர் அன்ரியால் முடியுமென்றால் இனி சகாயமண்ணை அங்கே வரத் தேவையில்லையென எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

சிறிதுநேரத்தில் எதுவித சிரமமுமில்லாமல் வெளிச்சக் கூட்டில் மெழுகுதிரி கொழுத்திவைத்து கூட்டினை மேலே ஏற்றினாள் மலர் அன்ரி. "உங்களுக்கும் வெளிச்சக் கூடேத்த தெரியுது, மலரன்ரி" என நான் புளகித்து நிற்க, "சகாயமண்ணைதான் சொல்லித் தந்தவர்" என்றாள் அவள்.

எனது புளுகம் பொத்தென்று மடிந்தது. அத்தனை நாட்களாய் சகாயமண்ணை வெளிச்சக் கூடேற்றுவதைக் கண்டு தானாகவேதான் அவள் அதைத் தெரிந்துகொண்டாளெனவே நான் கருதியிருந்தேன். சகாயமண்ணையிடமிருந்து அல்லாமல் நாகராசாவிட மிருந்து அறிந்திருந்தால் நான் அவ்வாறு எண்ணியிருப் பேனோ தெரியாது.

புது வருஷம் வந்தது. முன்னதோ பின்ன தோவாக இரண்டொரு தடவைகள் சகாயமண்ணை அங்கு வந்துபோனான்.

வருஷம் முடிந்து ஒரு வாரமாகியது.

இப்போது வெளிச்சக் கூடு இறக்கி வைத்தாகி விட்டது. இனி அடுத்த நத்தாருக்குத்தான். அப்போதும் மழைவராவிட்டால்தான் வெளிச்சக் கூடு ஏற்றலாம்.

ஆனாலும் எனக்கு தைப் பொங்கல் கொண்டாட்டம் விரைவில் வரவிருந்தது.

தைப் பொங்கல் வருகிறதென்றால் சீன வெடிச் சத்தங்கள் எழத் துவங்குவது மட்டுமில்லை, வீடுகளும் கலகலப்பு கொள்ளத் துவங்குகின்றன. அடுப்பு பிடிப்பதி லிருந்து, பொங்கல் பானை வாங்குவதுவரை எல்லாமே ஒரு கொண்டாட்டத்தின் களிநிலையையே உருவாக்கு கின்றன.

ஒருநாள் மாலை, தைப் பொங்கலுக்கு முன்ன தாகத்தான், மலர் அன்ரி வீடு போயிருந்தேன். படலையைத் திறக்கத்தான் தெரிந்தது, சகாயமண்ணையும் அங்கே நின்றிருப்பது. நான் அதை எதிர்பார்த்திருக்க வில்லை. அவனது சைக்கிள்கூட படலைக்கு வெளியில் நின்றிருக்கவில்லையே.

சிறிதுநேர உரையாடலின் பின் மலர் அன்ரி அடுக்களைக்குப் போனாள். என்னை அழைத்தாள். நான் போக, கடைக்குப் போய்வருகிறாயாவெனக் கேட்டாள். வெளிச்சக் கூடேற்றுவது பார்க்கும் ஆவல் அப்போது இல்லாததில் நானும் பிகுவின்றிச் சம்மதிக்க, அடுக்குப் பெட்டியில் தேடி எட்டுச் சதம் எடுத்துக் கொடுத்தாள். குனிந்து என்னிடம் காசு தருகையில் அப்போதும் கண்டேன், அவள் அணிந்திருந்த பெரிய கழுத்துச்சட்டைக் கூடாக அவளது துல்லியமான நெஞ்சுப் பிளவை.

நான் கடைக்குப் போய்க்கொண்டிருந்தபோது தான் தெரிந்தது, சகாயமண்ணை தன் சைக்கிளை எங்கே விட்டிருந்தானென்று. அவனது பழஞ் சைக்கிள் பக்கத் துக் காணியோடுள்ள வேலிப் புதருக்குள் நின்றிருந்தது.

மறுநாள் பொங்கலென்றிருந்த குதூகலமான ஒருநாளில் நான் மலர் அன்ரி வீட்டுக்குப் போனபோதும் சகாயமண்ணை அங்கே நின்றிருந்தான். நான் படலை திறந்து உள்ளே நுழைய இருவருமே சத்தமின்றிச் சிரித்தார்கள்.

மலர் அன்ரி அன்றைக்கு மிகவும் வடிவாக விருந்தாள். பெரிய கழுத்துச் சட்டை அணிந்திருந்தாள்.

பவுடர் பூசியிருந்தாள். இரட்டைப் பின்னலிட்டு றிப்பன் கட்டியிருந்தாள். பின்னல் தன் அசைவுக்குத் தக ஆடும் படி அவள் இங்குமங்குமாய்ச் சரிந்து சரிந்து கிணு கிணுத்தாள்.

பின்னரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். அப்போது நான் நினைத்துக் கொண்டேன், மலர் அன்ரி இனி அடுக்களைக்கு பாய்ந்தோடுவாளென. அப்படியே அவள் செய்தாள். இனி கடைக்குப் போய்வர என்னை அழைப்பாளென நான் எண்ணினேன். அவளும் அப்படியே என்னை அழைத்து கடைக்குப் போய்வர கேட்டாள்.

அவர்களது கொடுப்புச் சிரிப்பு மனத்தைக் குடைந்துகொண்டிருந்ததில் இந்தமுறை கடைக்குப் போக எனக்கு விருப்பமிருக்கவில்லை. நான் மௌன மாய் நின்றுகொண்டிருக்க என்னை மெதுவாக மலர் அன்ரி அணைத்து, "அச்சாப் பிள்ளையெல்லே..." எனக் கெஞ்சினாள்.

நெஞ்சோடு சேர்த்த அந்த இதமான அணைப்பு என்னைச் சம்மதிக்கச் செய்தது. நான் காசை வாங்கிக் கொண்டு புறப்பட்டேன்.

மலர் அன்ரிமீதான எனது கோபம் போய் விட்டிருந்ததென்றாலும், சகாயமண்ணைமேல் கொண்டது இன்னுமிருந்தது. அதில் இன்னும் என் முகம் கடுகடுப்பாகவே இருந்தது. சகாயமண்ணை அதைக் கவனித்திருப்பான்போலும். படலைவரை என்னையே பார்த்தபடி நின்றிருந்தான்.

போகும்போது அவன் வழக்கமாக தன் சைக்கிளை மறைவாய் விடும் வேலி மூலையைப் பார்த்தேன். சைக்கிள் நின்றிருந்தது. ஏதோ கள்ளத்தின் காரணமே அவன் சைக்கிளை அவ்வாறு விட காரண மென்று நெஞ்சுக்குள் சந்தேகம் குமைந்தெழுந்தது. போகும் வழி முழுதும், சீனி வாங்கிக்கொண்டு வரும் வழி நெடுகிலும் அதுபற்றியே நான் யோசித்திருந்தும் அக் கள்ளத்தின் காரணத்தை என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. அதனால் கோபம்தான் ஏறியது.

கோபம் சகாயண்ணைமீது மட்டுமல்ல, இப்போது மலர் அன்ரியிலும். அவள் ஏன் என்னையே எப்போதும் சீனி வாங்கிவர கடைக்கு அனுப்புகிறாள் என்பதினால் அது. ஒவ்வொரு தடவை சகாயமண்ணை வரும்போதும் அவளுக்குச் சீனி ஏன் முடிந்துபோகிறது; அப்படி முடிந்திருந்தாலும், ஒவ்வொரு தடவையும் அவனுக்கு தேத்தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று இல்லையேயென நான் மறுகினேன்.

அந்தக் கோபத்தில் சீனிச் சரைக்குத்தான் ஒரு நுள்ளுக் கொடுத்தேன். மழைக்கு உவனித்திருந்த மண்ணிறச் சீனி அந்தத் துவாரத்திலிருந்து பதுங்கிப் பதுங்கி செய்யலாமா வேண்டாமா என்பதுபோல்தான் கொட்டுண்டது. அதுபோதும். என்னவிருந்தாலும் மலர் அன்ரி அல்லவா? அவளது அன்பும் அணைப்பும் எவ்வளவு இதமானவை?

ஆனால் சகாயண்ணை மீதான கோபம் அப்படியேதான் இருந்தது. மலர் அன்ரி என்னைப் பார்த்துச் சிரித்தாலும், அவன் எப்படிச் சிரிக்கமுடியும்? மேலும் அவனிடம் ஏதோ கள்ளமுமிருக்கிறது. அவனுக்கு ஏதாவது தீங்கு செய்தே ஆகவேண்டுமென நான் நிச்சயித்தேன். அதற்கேற்ற ஐடியாவும் உடனடி யாக உதித்தது.

நான் றோட்டின் இரு பக்கங்களையும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன். யாருமில்லை. மெதுவாக அவன் சைக்கிள் விட்டிருந்த இடத்தை அணுகுகிறேன். மறுபடியும் றோட்டைக் கவனித்து யாரும் காண வாய்ப்பில்லையென்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, சைக்கிளின் பின் சில்லில் "வால்வ் கட்டை" எங்கே இருக்கிறதென தேடுகிறேன். அதைக் கண்டுகொள்ளப் போதுமான வெளிச்சம் இன்னும் வெளியில் இருக்கிறது. நான் "வால்வ் கட்டை"யை இளக்க முயன்றேன்.

"மூதேவி..." எரிச்சலாக வந்ததெனக்கு. அது கழர சிரமப்பட்டது. கையிலிருந்த சீனிச் சரையை கழிசான் பொக்கற்றுக்குள் திணித்துவிட்டு, ஒரு கையை சைக்கிளில் ஆதாரத்துக்குப் பற்றிக்கொண்டு மறுபடி என் வலிமையெல்லாவற்றையும் திரட்டி கட்டையை முறுக்கினேன். அது மெல்ல அசைந்து கொடுத்தது. நான் மேலும் திருகினேன். இப்போது இன்னும் சுலபமாகிப்போனது எனக்கு.

ஆனால் மறுகணம் திறபட்ட வேகத்தில் காற்று புஸ்ஸென்று சீறிக் கிளம்ப கைப்பிடிக்குள்ளிருந்த "வால்வ் கட்டை" அப்படியே பாய்ந்து எங்கோ மறைந்தது.

மெதுவாக காற்றைத் திறந்துவிடும் எண்ணம் தான் என்னிடத்தில் இருந்தது. இப்போதோ "வால்வ் கட்டை"யே பறந்து மறைந்துவிட்டது. எனக்கு பெரிய அதிர்ச்சி. அதிலிருந்து விடுபடுமுன்னம் காற்று சீறி வெளிவந்த இரைச்சல் மலர் அன்ரி வீட்டிலிருக்கும் சகாய மண்ணைக்கு கேட்டிருக்குமோவென்று இப்போது பயமாகிவிட்டது. "வால்வ் கட்டை" கையிலிருந்தாலா வது மறுபடி அதைப் பூட்டிவிட்டு போய்விடலாம். காற்று போனதற்கு அந்தக் கல் றோட்டில் காரணம் தேடவேண்டிய அவசியமில்லை. இப்போது பெரும் பிழை செய்து மாட்டிக்கொள்ளப் போகிற அவதி என்னில்.


நான் றோட்டில் ஏறி மெதுமெதுவாக மலர் அன்ரி வீட்டை அடைந்தேன். மலர் அன்ரி சிரித்தபடி வந்து, "ஏன் ராசா இவ்வளவு நேரம்" என்று கேட்டு சீனிச் சரையை என்னிடமிருந்து வாங்கினாள். "கடையில சரியான சனம், மலரன்ரி" என நான் சொன்னேன்.

அன்றிலிருந்து மலர் அன்ரி வீடு போவதை சகாயமண்ணையின் பயத்தில் குறைத்துக்கொண்டேன். அதிசயமாக சகாயமண்ணையின் வரத்தும் அங்கே குறைந்துகொண்டு வந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. சிறிதுகாலத்தில் அது நின்றே போனது. எனது மனப்பயம் ஒரு முடிவுக்கு வந்தது.

நான் சுதந்திரமானவனாக பழையபடி மலர் அன்ரி வீடு போய்வரத் துவங்கினேன்.

சிறிது காலத்தில் அவளது தந்தை ஒரு சிங்கள தேச மாப்பிள்ளையைக் கூட்டிவந்து அவளுக்கு கல்யாணம் செய்து வைத்தார்.

ஏனோ, அந்தச் சிங்கள ஆள்மீதும் எனக்கு வெறுப்புத்தான் வந்தது. •



# பூக்கோ – அதிகாரம் – கலைகள் – சடங்குகள்

■ பேராசிரியர் சபா.ஜெயராசா ■

"கருத்து வினைப்பாடு" (DISCOURSE) என்ற கருத்து வடிவத்துக்குப் புதிய பொருளேற்றம் செய்தவர் மிசேல் பூக்கோ (1926 - 1984) அரசியல், சமூகம், பொருளியல் ஆகியவற்றை மட்டுமன்றி கலை இலக்கியங்களை மீளாய்வு செய்வதற்குரிய புதிய அணுகுமுறையை அது தோற்றுவித்துள்ளது.

"அறிவின் அகழ்வாய்வு" என்ற நூலில் (1969) "கருத்து வினைப்பாடு" என்பதற்குரியபுதிய விளக்கத்தையும், மாற்றுச்சிந்தனையையும் அவர் முன்வைத்தார்.

பெரும் தொகுதியான அறிவின் அமைப்பையும், அதிகாரத்தையும், மொழியாலும் நடைமுறை வடிவங்களாலும், நம்பிக்கைகளாலும் வெளிப்படுத்தி நிற்கும் அறிவார்ந்த வடிவமாக இயங்குவது "கருத்து வினைப்பாடு."

எண்ணங்கள், உளப்பாங்குகள் செயற்பாடுகள், நம்பிக்கைகள் முதலியவற்றை சமூகத்தினால் ஒழுங்குறக் கட்டமைப்புச் செய்யப்பட்ட வடிவமே "கருத்து வினைப்பாடு" அந்தக் கட்டமைப்பை அதிகாரமே மேற்கொண்டுவருகின்றது.

அறிவும் அதிகாரமும் வேறுபிரிக்கமுடியாது ஒன்றிணைந்துள்ளன. அறிவு அதிகாரத்தின் வடிவம். மரபுவழி எழுத்தாக்கங்களும் கலைகளும் அறிவோடு இணைந்த அதிகாரத்தின் வடிவங்களாகின்றன.

ஐரோப்பிய அறிவு வளர்ச்சியை ஆழ்ந்து ஆய்வு செய்த மிசேல் பூக்கோ, "அறிவின் அகழ்வாய்வு" (ARCHAEOLOGY OF KNOWLEDGE) என்ற நூலை எழுதினார். "கருத்து வினைப்பாட்டு உருவாக்கம்" என்பது சிந்தித்தல், பொருள் கொள்ளல் என்பவற்றுக்கும் மேலான நிலை யில் அதிகாரத்தினால் கட்டமைப்புச் செய்யப்படுகின்றது என அவர் மேலும் விபரித்தார்.

பெரும்பாக நிலையிலும் நுண்பாக நிலையிலும் அதிகாரத்தினதும் மேலாதிக்கத்தினதும் இயல்புகளை ஆராய்ந்தவர்களுள் பூக்கோ முக்கியமானவர். அறிவுக்கும் அதிகாரத்துக்குமுள்ள இணைப்பே அவரது ஆய்வுகளில் மேலோங்கி நின்றது.

மனித உள்ளம் அதிகாரத்துக்குக் கீழ்படியும் உள்ளமாக மாற்றியமைக்கப்படுவதில் கருத்து வினைப்பாடு முக்கியமான பங்காற்றுகின்றது. மனித உள்ளம் மட்டுமன்றி, உடலும் அதிகாரத்துக்குக் கட்டுப் படும் "பணிவுடலாக" (Docile Body) மாற்றியமைக்கப்படுகின்றது. இந்திய மரபில் அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டதும் நாணிக்குறுகி நிற்றலும், சொல்வதற்கெல்லாம் தலையசைத்தலும், மாற்றுமொழிபேசாது வாய்மூடி மௌனித்தலும், புறமுதுகுகாட்டாது பின் செல்லலும் என்றவாறு பணிவுக்குரிய பன்முக உடல் மொழியினை வெளிப்படுத்தல் குறிப்பிட்டுக் கூறக் கூடியவை. பணிவுடல் இயல்புகள் இந்திய ஆடல்களிலும் அரங்கிலும் இலக்கியங்களிலும் செம்மையாக வெளிப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவின் தொன்மையான பனுவல்களில் அதிகாரம் பலநிலைகளிலே கட்டமைப்புச் செய்யப் பட்டுள்ளமையைக் காணலாம். ஏகலைவன் தொன்மம் அறிவுசார்ந்த அதிகாரத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றது.

பூக்கோவின் கருத்து விளைப்பாடும் அதிகாரத்தின் இயல்பும் இந்தியச்சூழலுக்கும் பொருந்தி ஆராயத் தக்கவை. வர்க்க நிலையில் அதிகாரத்தின் இயல்பைக் காண்பதில் அவர் அதிக கவனம் செலுத்தவில்லை. உளவியல் நிலையிலும் குற்றவியல் மற்றும் உள நோயியல் நிலையிலும் பாலியல் தொடர்பாகவும் அதிகாரத்தின் இயல்பை ஆராய்வதில் அவர் ஊன்றிய கவனம் செலுத்தினார்.

இந்திய சமூகத்தில் அதிகாரம் வருணப்பாகு பாட்டுடன் கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தது. பனுவல்களும், செவ்வியல் ஆடல்களும், இசையும் சமூகத்தின் மேலடுக்கினரின் அதிகாரப் பிரயோக வடிவங்களாக இருந்தன. தேவரடியார் ஆடலில் சமூகத்தின் மேலடுக்கினர் செலுத்திய அதிகாரத்தைத் தகர்த்தெறிவதில் மூவலூர் இராமாமிர்தமும், முத்துலட்சுமி ரெட்டியும் முக்கிய பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கது.

வேத உபநிடதங்களை சமூகத்தின் கீழடுக்கினர் ஓதுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. அறிவும் அதிகாரமும் கல்விச் செயற்பாடுகளும் வலிதாக ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.

"அதிகாரம்" என்பது அறிவுடன் மட்டும் கட்டுப்பட்டிருக்கவில்லை. மொழியுடனும் கட்டுப்பட்டுள்ளமையைக் காணலாம். இந்தியச்சூழலில் அதிகாரம் சமஸ்கிருத மொழியுடன் இணைக்கப்பட்டிருந்தது. தமிழகச் சூழலில் அதிகாரம் சமஸ்கிருதமொழியுடன் மட்டுமன்றி தெலுங்கு மொழியுடனும் இணைக்கப்பட்டிருந்தது. தமிழிசை இயக்கம் மொழி வடிவிலான அதிகாரத் திணிப்புக்கு எதிரான மேற்கிளம்பலாக அமைந்தது.

உலகவரலாற்றில் காலனித்துவ அதிகார விரிவாக்கம் மொழியுடன் இணைக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். அதிகாரமும் மொழியும் பின்னிப்பிணைந்தவையாகவே பின்காலனியச் சூழலிலும் காணப்படுகின்றது.

"அறிவு சார்ந்த கொடுமை" (EPISTMIIC VIOLENCE) என்பது பற்றி பூக்கோ மட்டுமன்றி வேறுபலரும் ஆராய்ந்துள்ளனர். ஐரோப்பா தனது அறிவுப்பலத்தாலும் மொழியாலும் காலனித்துவ நாடுகள் மீது வன்கொடுமை நிகழ்த்திய செய்தியைப் பின்காலனியத் திறனாய்வாளர் விளக்கியுள்ளனர்.

இந்திய தத்துவஞானத்தில் உண்மை என்பது நிலைத்த பொருளாகவும் நீடித்தபொருளாகவும், சார்பு நிலைகொள்ளாத தனித்துவமானது என்றும் விளக்கப்பட்டு வந்தது. பூக்கோவின் கருத்து, உண்மை என்பது அதிகாரத்தோடு இணைந்த தென்றும், அதிகாரத் துக்கு வெளியில் இல்லை என்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதிகாரம் அறிவை உருவாக்குகின்றது. உண்மை அதிகாரத்துக்கு வெளியில் விட்டுவைக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு கால கட்டத்திலும் அதிகாரத்தோடு இணைந்த அறிவுக்குவியங்கள் (EPISTEME) உருவாக்கப்பட்ட காட்சியையும் அவர் எழுதிய "பொருள்களின் ஒழுங்கமைப்பு" (1966) என்ற நூலில் விளக்கியுள்ளார்.

சடங்குகள் அறிவை உட்பொருளாகக் கொண்டிருக்கையில் அவையும் அதிகாரத்தின் வடிவங்களாக அமைகின்றன. அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் நிறுவனங்களின் முக்கியமான பங்கினை பூக்கோ விளக்கியுள்ளார். மானிடவியற் பின்புலத்தில் சடங்குகளும் அதிகாரமும் ஒன்றிணைந்திருத்தல் இந்தியச் சூழலில் விரிவான ஆய்வுக்குரியது.

ஐரோப்பாவில் நிகழ்ந்த தொழிற்புரட்சியும், சமூக மாற்றங்களும் மரபுவழியான பழங்குடியினரின் சடங்குகளைக் கைவிடச்செய்தன. சடங்குகளின் அதீத முக்கியத்துவம் அங்கே வீழ்ச்சியடைத்தொடங்கியது. அதேவேளை நகர வாழ்க்கையில் புதிய சடங்குகள் தோற்றம் பெற்றாலும் குறுகிய நேரம் அளவைக் கொண்டவையாயும் தவிர்க்கக்கூடிய நிலையிலும் அவை அமைந்தன.

இந்திய சமூகத்தில் மரபுவழியான சடங்குகளும் அவற்றுள் உட்பொதிந்திருந்த அதிகார அழுத்தங்களும், ஐரோப்பாவில் நிகழ்நதது போன்ற வீழ்ச்சியைக் கொண்டிருக்கவில்லை.

இந்தியப் பண்பாட்டுப்பின்புலத்தில் சாதிய நிலையில் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு சடங்குகள் துணை செய்த வண்ணமுள்ளன. சடங்கும் அதிகாரமும் சாதியமும் இறுகிய நிலையிலே கட்டி வைக்கப்பட்டுள்ளன.

சடங்கு, அறிவு, அதிகாரம், மொழி ஆகியவற்றின் இணைப்போடு மேலாதிக்கம் தக்கவைக்கப்படுகின்றது. பொது மக்களுக்கு விளங்காத சமஸ்கிருத மொழிப் பயன்பாட்டோடு அதிகாரம் நிறுவப்படல் இந்தியப் பண்பாட்டிலே காணப்படும் பிறிதொரு சிறப்பியல்பு.

சடங்குகள் வழியான அதிகார நிறுவலுக்கு தொன்மக்கதைகளும், காவியக்கதை நிகழ்ச்சிகளும் துணை செய்தவண்ணமுள்ளன. இந்திய சமூகத்தின் கருத்து வினைப்பாட்டில் அவை அனைத்தும் உள்ளடக்கப்படுகின்றன.

இந்திய சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கும் அங்கு நிலைபேறுகொண்டுள்ள கலைப்படைப்புக்களதும் சடங்குகளதும் இயல்புகளை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதற்குமுரிய மாற்று வழிமுறைகளுள் ஒன்றாக பூக்கோவின் கருத்துவினைப்பாட்டுப்பகுப்பாய்வு துணைசெய்கின்றது.

நவீன இந்தியாவின் வர்த்தக திரைப்பட மொழியும், அதிகாரமும், பணமுடையோரின் மேலாதிக்கமும் ஒன்றிணைந்துள்ள நிலையில், அதிகாரமே கலைச் சுவையைத் தீர்மானிக்கும் வலுவாக மேற்கிளம்பியுள்ளமையைக் குறிப்பிடவேண்டியுள்ளது. பணமுடையோரின் அதிகாரம் மட்டுமன்றி அவர்களின் மட்டரகமான சுவைகளும் விளிம்புநிலை மக்கள் மீது சினிமாவால் சுமத்தப்படுகின்றன.

இனங்கண்டு கொள்ள முடியாத அதிகாரத்தின் வடிவங்களைக் காண்பதற்குரிய புலக்காட்சியை உருவாக்கிக் கொள்வதற்குப் பூக்கோவின் கருத்துவினைப்பாட்டுப் பகுப்பாய்வு துணை செய்யும்.

பூக்கோ மார்க்சியப்பின் புலத்தில் வந்தவர். மார்க்சிய அமைப்பியல் வாதியாகிய அல்துஸ்ஸரின் மாணவர். பிரான்சிய சமூகத்தில் நிகழ்ந்த உளவியல் அவலங்களும், சிறைச்சாலைகளில் இடம்பெற்ற அதிகார வன்முறைகளும், மனநலம் குன்றியோரைச் சமூகம் அடையாளப்படுத்தியவிதம், அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஆதிக்கமும் அவரது சிந்தனைகளை அதிகாரமும் அறிவும் பற்றிய அமைப்புக்களுள் அழைத்து வந்தது. மார்க்சிய இயங்கியல் தருக்கத்தை விட்டு "கருத்து வினைப்பாடு" என்ற அணுகுமுறையை முன்னெடுத்தார்.

ஐரோப்பியப் பின்புலத்தில் மேற்கிளம்பிய அவரது அளிக்கை, ஆசிய சமூகத்தை மாற்று வாசிப்புக்கு உட்படுத்துவதற்கும் துணை செய்கிறது. அதே வேளை அதிகாரக்கட்டமைப்பைத் தகர்ப்பதற்கு மீண்டும் மார்க்சியத்துக்கே செல்ல வேண்டியுள்ளது. ●

பாலம்பிட்டிக்குச் சென்ற ஆரம்ப நாட்களில் எனக்கு அவரில் நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. எனது அலுவலக வேலையாட்களின் கருத்துகளின் அடிப்படையில் அவர் ஒரு தற்பெருமை பிடித்த ஆள் எனும் விம்பத்தை என்னுள் நிலை நிறுத்திக் கொண்டேன். பெரியமடு வீதியில் அமைந்துள்ள எனது அலுவலகத்தை கடந்து அவர் தனது எருமைக் கூட்டத்தைப் பலமுறை காட்டுக்குள் கொண்டு செல்வதைக் கண்டிருக்கிறேன். ஒருமுறை கூட என்னிடம் சிகிச்சை பெறவோ ஆலோசனை கேட்கவோ அவர் வந்ததில்லை. நான்தான் அங்கு வந்திருக்கும் புதிய கால்நடை வைத்தியர் என்பது அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் என நம்பினேன். என்றாவது ஒருநாள் என் தேவை வரும்தானே... அப்போது பார்த்துக் கொள்கிறேன் என மனதுக்குள் கறுவிக் கொள்வேன்.

ஒருநாள் அந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. காலைநேரம், அப்போதுதான் அலுவலகத்துக்கு வந்திருந்தேன். திடீரென என் அறைக்குள் அவர் நுழைந்து,

"நான் வைத்தி..."

"தெரியும்...என்ன விசயம்?"

"நான் பொதுவா இந்த இங்லீஷ் வைத்தியத்த நம்புறதில்லை...ஆனா பாரும், என்ர எருமை ஒன்டு கண்டு போட ஏலாம நிக்குது... வழமைக்கும் இத்தனைக்கும் போட்டிருக்கும். இரவிலிருந்து இன்னும் போடுற சிலமனில்ல. ஒரு கால் மட்டும் வந்தபடி நிக்குது. இழுத்து பாத்தன் வரமாட்டுதாம். உம்மால வர ஏலுமா ஏலாதா?" என வைத்தி மூச்சுவிடாமல் பொரிந்து தள்ளினார்.

"ஐயா! பொறுங்கோ..என்னயும் கதைக்க விடுங்கோ... இப்பிடி வந்ததும் வராததுமா...முதலில இந்த கதிரையில இருங்கோ..."; என அவரை ஆசுவாசப்படுத்தி அமரச் செய்தேன்.

"உங்கட மாடு எங்க நிக்குது...?"

"உங்கால இருக்கிற சின்ன வில்லுக்கதான்."

"தலைவர்...சின்ன வில்லு எங்க இருக்கு..."

"சேர்...இந்த பெரியமடு ரோடல மூன்டு கட்ட தூரத்தில. காட்டுக்க இருக்கு. யானக் காடு சேர்..." என்று எனது அலுவலக உதவியாளர் தலைவர் மறுமொழி சொன்னார்.

"இல்ல இல்ல ... இப்ப ஆனை இருக்காது. நான் காலம போய் பால் கறந்து வந்தன். பயப்பிடத் தேவை இல்ல தம்பி." என்றார் வைத்தி.

"அதுசரி. யானயோட பிறந்து வளர்ந்தாக்கள் நீங்கள். நாங்க அப்பிடியா.?" என நான் சொன்னேன்.

"நீங்க கட்டாயம் வரணும் தம்பி. இப்பிடித் தான் முதல் இருந்த சிங்கள டொக்டரிட்ட ஒருக்கா வந்து, வெடி பட்ட மாட்ட பார்க்கச் சொன்னன். அந்தா வாரன். இந்தா வாரன் என்டு கடைசில அடுத்த நாள்தான் வந்தார். மாடும் செத்திட்டு. அதான் உந்த கந்தோருக்கு நான் வாறதில்ல. ஏதோ ஊர் சனம் உம்ம பற்றி நல்லா சொல்றதால வந்தன். புது விளக்குமாறு நல்லா கூட்டும் தானே..." என்டு சொல்லி பலமாக சிரித்தார்...

உண்மையில் நான் அதை ரசிக்கவில்லை.

"ஐயா! இங்க பாருங்கோ.எனக்கு பழைய கதை தெரியாது. இப்ப என்ன செய்யோனும் என்டு பாப்பம்."


"உடனே என்ட மாட்ட பார்க்கோனும். நான் வேணுமெண்டா என்ட மோட்ட சைக்கிள்ள கூட்டிக் கொண்டு போறன்."

"இல்ல ஐயா! நான் வாகனத்தில வாறன். வாகனம் போகும்தானே?"

"ஓ..தாராளமா போகும்.உந்த மண் ஏத்துற டிப்பர் லொறி எல்லாம் போகுது..."

# வைத்தியலிங்கம்

எஸ்.கிருபானந்தகுமாரன்



"ஐயா! டிப்பரும் இந்த வாகனமும் ஒண்டா." என தலைவர் அவரை ஏளனமாக பார்த்தார்.

"ரூபன்...எப்பிடி வாகனம் போகுமோ.." என் வாகன சாரதியை பார்த்து கேட்டேன்.

"சேர்...கஷ்டம். ரண்டு பக்கமும் விடத்தல் பத்தை. வாகனத்த கீறிப்போடும். மற்றது எல்லா இடமும் கள்ள மண் டிப்பர் ஓடி கிடங்கா கிடக்கு. அந்த கிடங்கு களுக்க யானை படுத்துக் கிடந்தாலும் தெரியாது. நீங்க போக சொன்னா வாறன்..." என இழுத்தார்.

"சரி...வேணாம். தலைவரும் நானும் பைக்கில போறம்... இங்க பாருங்க வைத்தி ஐயா...நான் வாறன். இந்த வில்லுக்கு போற இடத்தில நில்லுங்க.சரியா..."

"சரி. அது உங்க கொஞ்ச தூரத்திலதான் இருக்கு. கெதியா வாங்கோ. இப்ப மத்தியானத்துக்கு பிறகு மழை வேற பெய்யுது. காட்டில தண்ணி சேர கொம்பன்மார் ரோட்டுக்கு வருவினம்..." என்று விசமத்தனமான சிரிப்புடன் தனது சீடி 100 மோட்டார் சைக்கிளை உதைச்சு தள்ளி வெளிக்கிட்டார்.

***

"தலைவர்... ரெடியாகுவம். சீசர் செய்ய வேணுமோ தெரியல்ல. எதுக்கும் அந்த சீசர் சாமான்கள யும் எடுங்கோ. எருமை எண்டு வேற சொல்லுறார். மறக்காம ரெண்டு மூண்டு லிக்னோகெய்ன் போத்தல்கள எடுங்கோ..."

"சரி.சேர். இந்த ஆள் ஒரு கரைச்சல் பிடிச்சது. ஒருக்கா பழைய சிங்கள டொக்டர் இருக்கேக்க இவர்ட மாட்ட பெரியமடு காட்டுக்க வெடி வைச்சிட்டாங் களாம் எண்டு சொல்லி ஒபிஸ் முடியிற நேரம் வந்தார்... எங்கட ரேஞ்ச் இல்ல. மாந்தை ஏரியா. அதான் சிங்கள டொக்டர் அந்த ஒபீசுக்கு போக சொன்னார். இவர் தானும் பாலம்பிட்டி மாடும் பாலம்பிட்டி அதால நாங்க தான் வரணும் எண்டு மோட்டு ஞாயத்தோட முரண்டு பிடிச்சார். அங்க கடிதம் போடப்போறன் இங்க சொல்லப் போறன் எண்டு சத்தம் போட்டார். டொக்டரும் கொஞ்சம் பயந்த ஆள், சரி எண்டு, நானும் அவரும் பின்னேரத்தில யானை வாறதால அடுத்த நாள் விடியவே போனம். உந்த மனிசன் காடு மேடெல்லாம் ஊர்வலம் போற மாதிரி நடத்தி ஒரு தொங்கல் காட்டுக்கு கூட்டி போச்சு. அப்ப இந்த வாகனமும் இல்ல. டொக்டரட பைக்தான். போய் பார்த்தா... எருமட கால் துடைல பெரிய காயம். அதுவும் ரெண்டு பக்கமும் துளைச்ச காயம். துவக்கு சூடுதான். சன்னம் துளைச் சிட்டு போயிட்டு போல. நாலஞ்சு நாள் பழைய காயம் புழுத்து கிடந்தது. காட்டு வேட்ட காரங்கட வேல. உந்த ஆளே பெரிய வேட்டகாரன்தான். உந்த ஆள்ட மிஸ் பயரோ தெரியல்ல. டொக்டரும் நானும் எதுவும் பேசாம சுத்தப்படுத்தி ஊசி போட்டு வந்தம். மனுசன் முதலே ஏதேதோ கை மருந்துகள போட்டிருக்கு. ஒரு சதம் காசும் கைல தரல்ல. அடுத்த நாள் மாடு செத்திட்டு என ஒரு மாதிரி வந்து சொன்னார். ஏதோ நாங்கதான் மாட்ட கொண்ட மாதிரி. அதுக்கு பிறகு இங்க வாறதே இல்ல.இப்பதான் நீங்க வந்த பிறகுதான் வந்திருக்கு ஆள்..." என்றார்.

"ஓ...அப்பிடியா சங்கதி. கொஞ்சம் விவகாரம் பிடிச்ச ஆள்தான். கவனமாத்தான் ஆள கையாளனும். சில கதையள் என்னையும் வம்புக்கு இழுக்கிற மாதிரி இருந்திச்சு... கவனிச்சிங்களா."

"ஓம் சேர்.இந்தாள் யாரையும் விடாது."

பிறகு நானும் தலைவரும் எனது பீல்ட் பொக்ஸுடன் வெளிக்கிட்டோம்.

தலைவரின் நிஜப்பெயர் செபமாலை. முருங்கன் மாவிலங்கேணி பகுதியைச் சேர்ந்தவர். சராசரி மனிதனை விட சற்றுக் குள்ளமானவர். பெரிய மடுவில் திருமணம் செய்ததால் பாலம்பிட்டி வேலை அவருக்கு ஒத்துப் போகிறது. எந்த வைத்தியரின் கீழ் வேலை செய்கிறாரோ அவருக்கு கடும் விசுவாசமாக நடந்து கொள்பவர். சில காலத்துக்கு முன் ஊரில் உள்ள உதைபந்து கழகம் ஒன்றில் கௌரவ தலைவர் பதவியில் ஊர் பொடியன்கள் இவரை நியமித்திருந்தார்கள். பிறகு அந்த பெயர் நிரந்தரமாக நிலைத்து விட்டது. இப்போது அவர் இருக்கும் பெரியமடுவில் தொண்ணூறு வீதம் முஸ்லிம் தான். இயக்க காலத்தில் பெரியமடு பெரிய முகாம். இப்போது பதினைந்து வரையான தமிழ் கத்தோலிக்க குடும்பங்கள் உள்ளன. இதில் தலைவரின் குடும்பமும் ஒன்று. வவுனியா பத்தினியார் மகிழங்குளம் - மன்னார் பள்ளமடு வரையான வீதியில்தான் பெரியமடுவும் உளளது. அதில்தான் எனது பாலம்பிட்டி அலுவலகமும் உள்ளது. வவுனியா எல்லையான கல்மடுவில இருந்து பெரியமடுவரை காட்டு பாதைதான். பல வருடங்கள் இயக்க கட்டுப்பாடு என்பதால் வீதி திருத்தப்பட வில்லை. ஒவ்வொரு பிரதேசக் கூட்டங்களிலும் மக்களின் முதலாவது தேவையாக அங்குள்ள வீதி அமைப்பது தொடர்பாகத் தான் காரசாரமாக விவாதங்கள் அமையும். எனது பாலம்பிட்டி அலுவலகம் தொடங்கி பெரியமடு வரை எந்த ஒரு ஒரு வீடும் கிடையாது. அடர்ந்த காடு. யானைகளை அடிக்கடி காணலாம். எங்கள் உயிலங்குள பெரிய அலுவலகம் போக சிலவேளை இந்த பாதையைப் பயன்படுத்துவேன். இல்லாது போனால் மடு வீதிசென்று முருங்கன் வழியாக வவுனியா- மன்னார் வீதியில் போக வேண்டும். சுற்று அதிகம். இந்த பத்தினியார் மகிழங்குள- பள்ளமடு வீதி சரியாக இருக்குமானால் வவுனியா- மன்னார் பயண நேரம் கொஞ்சம் குறையும்.இந்த காட்டு பாதையில்தான் தலைவர் வந்து போவார். இதனால் நானும் சில நேரச் சலுகையை தலைவருக்கு வழங்கி யுள்ளேன். அன்றைய நாட்களில் விரல் பதிவு இல்லாத தால் இது சாத்தியமாக இருந்தது.இப்போது அது முடியாது.

எனது மோட்டார் சைக்கிளில் மெல்ல மெல்ல மாக போகத் தொடங்கி ஐந்தாவது கிலோமீட்டர் கடந்ததும் கூய்...கூய்...என யாரோ கூப்பிடுவது கேட்டது. சத்தம் வந்த திசையில், ஒரு மரத்தடியில் வைத்தி நின்று கொண்டிருந்தார். திருப்பிக் கொண்டு வந்தோம். அந்த இடத்திலிருந்து இடதுபக்கம் பிரிந்த கிளைப் பாதையில் வைத்தியின் மோட்டார் சைக்கிள் உள்ளிறங்கி வழி காட்டிச் சென்றது. தொலைவில் ஒரு நீரப் பரப்பு தெரிந்தது.

"அதுதான் சின்ன வில்லு சேர்." என தலைவர் சொன்னார்.

அதன் இரு மருங்கிலும் நீண்ட சமவெளி காணப்பட்டது. ஓரளவு புற்களும் வளர்ந்திருந்தன. அதற்குள்தான் வைத்தியின் எருமைகள் மேய்கின்றன. முன்னூறு எருமைகள் வரை காணப்பட்டன.

வைத்தியின் முழுப்பெயர் வைத்தியலிங்கம்.

அறுபத்தைந்து வயதிருக்கும். ஆறு அடி வரை உயரம் இருப்பார். ஓரளவு பொது நிறம். வெள்ளையும் கருப்பும் கலந்த தலை முடி. எந்த முட்காட்டிலும் செருப்பு அணியாதவர். பாலம்பிட்டியில் இவரின் முன்னோர்களுடன் குழந்தையாக ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் குடியேறியவர். பூர்வீகம், யாழ்ப்பாணத்திலுள்ள புன்னாலை கட்டுவன் பக்கம் என்கிறார்கள். சரியாக தெரியவில்லை. பாலம்பிட்டியர்கள் அருகில் இருந்த தட்சணாமருத மடு குளம் வரை பரவியுள்ளனர். மழைக் காலத்தில் வவுனியா மாவட்டக் காடுகளில் சேரும் தண்ணீர் பெரியதம்பனை குளத்தை நிறைத்து மேலும் ஓடி பண்டிவிரிச்சான் குளத்தை நிறைத்து மடுக் கோவில் குளத்தையும் நிறைத்து காட்டு வழியாக பயணித்து தட்சணா மருத மடுக் குளத்தை வந்தடையும். பிறகு அங்கிருந்து பாலம் பிட்டியிலுள்ள சிறிய பல குளங்களை நிறைத்து பெரிய மடு நீர்தேக்கத்துக்கு அந்த தண்ணீர் போகும். தட்சணா மருத மடு ஓரளவு பெரிய குளம். பல நூறு ஏக்கர் வயல்களுக்கு நீராதாரம் அதுவே. அந்த பகுதியில் வாழ்பவர்கள் சைவக்காரர்கள். பெரும் பாலும் தங்களுக்குள்ளேயே திருமணம் முடிப்பார்கள். இலகுவில் வெளியே முடிக்க மாட்டார்கள். யாரைக் கேட்டாலும் சொந்தக்காரரர்கள். விவசாயமும் மாடு வளர்ப்பும்தான் பிரதான தொழில். அத்துடன் காடுகளில் விலங்கு வேட்டை செய்வதும் தேன் எடுப்பதும் உப தொழில்கள். அங்கு வைத்தி பெரிய புள்ளி. முந்நூறு வரையான எருமைகளும் இருநூறு வரையான நாட்டு பசு மாடுகளும் அவருக்குச் சொந்தமாக உள்ளன. ஒருதொகை ஆடு களையும் வளர்க்கிறார்.

இவையெல்லாவற்றையும் விட ஐந்து நாய்களை வளர்க்கிறார். எல்லாம் வேட்டை நாய்கள். அந்த ஊரில் வைத்தி கைதேர்ந்த வேட்டைக்காரர். வேட்டைக்குப் போக முன் ஒருவித விசில் அடித்தாரென்றால் அவரின் எல்லா நாய்களும் எங்கிருந்தாலும் உடனடியாக வைத்தியின் காலடியில் வந்து நிற்கும். வைத்தி மட்டுமல்ல ஊரின் பெரும்பாலான ஆண்கள் வேட்டையில் கைதேர்ந்தவர்கள். மான்களை இடியன் எனும் நாட்டு துவக்கு மூலமும் பன்றிகளை சுருக்கு தடம் போட்டும் வெங்காய வெடி வைத்தும் மரைகளை, முயல்களை, உடும்புகளை நாய்கள் மூலமும் வேட்டையாடுவார்கள். மடு மாதா திருவிழா காலத்தில் அங்கு மான், மரை, காட்டுப்பன்றி, உடும்பு, முயல், உக்கிளான் என வேட்டை தூள் பறக்கும். கோயிலுக்கு வரும் தென்பகுதி கத்தோலிக்க சிங்களவர்களுக்கு நல்ல விலைக்கு விற்க அந்த நாட்களில் காட்டு வேட்டை மும்முரமாக இடம் பெறும். இவர்களைப் பிடிக்க காவல் துறையும் மும்முரமாகத் திரியும். சிலர் பிடிபடுவார்கள். அதை இதை கொடுத்து பெரும்பாலும் வெளியே வந்து விடு வார்கள். வைத்தியும் அடிக்கடி இப்படி மாட்டுகிறவர் தான்.

இறுதியில் வைத்தியின் கன்று ஈன சிரமப் படும் எருமைமாட்டின் அருகே சென்றோம். நிலத்தில் படுத்திருந்தது. இதன் பெண்ணுறுப்புப் பகுதி வழியே கன்றின் கால்கள் வெளித்தெரிந்தன. அந்த எருமை தனது பலம் கொண்ட மட்டும் முக்கிப் பார்த்துக் களைத்திருந்தது. அதன் பெண் உறுப்பைச் சுற்றிய பகுதி வழுவழுப்புடன் ஈரமாகத்தான் இருந்தது. நல்ல வேளை அந்த மாடு ஒரு மரத்தின் கீழே படுத்திருந்தது. இல்லாது போனால் நடு வெய்யிலில்தான் பிரசவம் பார்த்திருக்க வேண்டும். அதுவும் தினமும் மதிய வேளையின் பின் பெய்யும் உகைப்பு மழைக்கு முன் எறிக்கும் சித்திரை மாதத்து வெயில் தீயைப் போல சுடும். எமது நடமாட்டத்தை உணர்ந்த ஏனைய எருமைகள் எங்களை மிரட்சியுடன் பார்த்து அருகில் வரத் தொடங்கின. வைத்தி உடனே தனது குரலை உயர்த்தி "ஒற்றைக் கொம்பி, நெற்றிச் சுட்டி நான்தான்" என அவற்றுக்குத் தனது இருப்பை வெளிப்படுத்தினார். எருமைகள் புதியவர்களை கண்டு மிரண்டு தாக்கவும் முற்படலாம் என்பதால் வைத்தி அப்படிச் செய்தார். அவரின் குரலைக் கேட்டதும் எருமைகள் ஆசுவாசமடைந்து தம் பாட்டுக்கு மீளவும் மேயத் தொடங்கின.

அந்த மாடு 400-450 கிலோ வரை நிறை உள்ள மூரா கலப்பின எருமையாகும். "இது நான்காவது ஈற்று எனவும் முன்னைய மூன்று ஈற்றிலும் எந்தவித பிரச்சினையும் தந்திருக்கவில்லை" என வைத்தி கூறினார். மாட்டின் கால்களை கட்ட சொன்னதும் வைத்தி,

"தம்பி! இது சாதுவான மாடு ஒன்றும் செய்யாது"

"இல்ல ஐயா. என்னதான் இருந்தாலும் இது மிருகம். நம்ப ஏலாது. நாங்க புது ஆட்கள். மாடு பயப்பிடும். எங்கட பாதுகாப்ப நாங்கதான் பார்க்க வேணும். நான் செய்ய போற வேலை மாட்டுக்கு சில வேளை வேதனையை தரலாம். கட்டுங்கோ. கயிறு இல்லையா? "

"இங்க எங்க தம்பி கயிறு. வாழ்க்கையில இதுகள நான் கட்டினது கிடையாது."

அங்கயும் இங்கயும் தேடி ஏதோ ஒரு காட்டு வேர் விழுதுகளை கொண்டுவந்து மாட்டின் நான்கு கால்களையும் ஒன்று சேர்த்து கட்டி அதன் கால்கள் இணையும் இடத்தை தன் கால்களால் அமத்தி மிதித்தார். தலைவர் மாட்டின் தலையை எழும்ப விடாமல் அமத்தி பிடிக்க நான் பெண் உறுப்பினூடாக எனது ஒரு கையை நுழைத்து கன்றின் நிலையைப் பரிசோதித்தேன். கன்றின் தலை அதன் கால்களுக்கு இடையில் இடப்பக்கம் திரும்பியபடி செருகியிருந்தது. கன்றின் வாயருகே எனது கைவிரல்கள் சென்ற போது அதன் அசைவை உணர்ந்தேன். அது என் விரல்களை சப்பத் தொடங்கியது.

"கன்று உயிர்" என்று சொல்லியபடி எனது இரண்டு கைகளாலும் கன்றின் காலை பலம் கொண்ட மட்டும் உள்ளே தள்ளினேன். மாடு களைத்திருந்த படியால் அது எந்த வித எதிர்ப்பையும் என் செய்கைக்கு காட்டவில்லை. பெரிதாக முக்கவும் இல்லை. முக்கினால் அதன் முள்ளந்தண்டில் விறைப்புக்கு லிக்னோகெய்ன் மருந்தை போட வேண்டும். அதன் பிறகு ஒருவாறு அதன் தலையை நிமிர்த்தி கால்களை மீள இழுத்த போது கன்று புட்டு குழலில் இருந்து புட்டு வருவது போல வெளியே வந்தது. மூன்று ஈற்று ஈன்ற மாடு என்பதால் இடுப்பு எலும்பு விரிந்திருந்தது. இதனால் கன்று வெளி வருவதில் பெரிதாக சிரமம் இருக்கவில்லை. நச்சுக்கொடியின் பகுதிகள் சிலவற்றையும் அகற்றினேன். கன்றின் மூக்கு வாயில் இருந்த சளித்தன்மையான சவ்வுகளை அகற்றி விட்டு தாயிடம் கன்றைக் கொடுத்தோம். கால்களை அவிட்டவுடன் கன்றை நக்கிய படி மாடு எழும்பியது. சிறிது நேரத்தின் பின் கன்றும் தட்டுத்தடுமாறி எழும்பி தாயின் முலையைக்கடிக்க தொடங்கியது.

வைத்தியலிங்கத்துக்கு இந்த சம்பவத்தின் பின் என்னில் ஒருவித பிடிப்பு உருவாகியது என்று உணர முடிந்தது. அடுத்தநாள் இரண்டு போத்தல் காட்டுத் தேன் கொண்டு வந்து தந்தார். இன்னொரு நாள் மரை வத்தல் கொண்டு வந்து தந்தார். தரமான எருமை தயிர் சட்டி சட்டியாகக் கொண்டு வருவார். போகிற வருகிற நேரத்தில் வந்து சந்திப்பார். காட்டில் நாட்டில் கிடைக்கும் பல பொருட்கள் எனக்கு வந்து சேரும்.

பாலம்பிட்டியில் பெருபோகம், சிறுபோகம் இரண்டும் செய்வதால் அந்த நாட்களில் மாடுகளை அங்கு வைத்திருப்பது சிரமம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்று பாகுபாடு இல்லா மல் மொத்தக் கிராமமுமே காடுகளில் பகலில் மாடு களுடன் தவம் கிடக்கும். வைத்தி மட்டும் அந்த பகுதியில் எருமை வளர்ப்பதால் போக காலம் என்றில்லாமல் வருடம் முழுவதும் சின்ன வில்லு பகுதியில் அவற்றை மேய்ப்பார். அங்கு பெரும்பாலும் குறைந்த பட்சம் சேறாவது காணப்படும். எருமைகளில் வியர்வைச் சுரப்பி இல்லாததால் வெப்பத்தைச் சமாளிக்க தண்ணீருக்குள் இருக்கவே விரும்பும். சூரிய ஒளி நேரே படாமல் இருக்க சேற்றைப் பூசும். எனவே வைத்திக்கு சின்னவில்லு நல்ல வசதியான இடம்.

வைத்தியர் பால் கறக்க தொடங்குவதோ அதிகாலை மூன்று மணிக்கு. அவரும் மனைவியும் அந்த பகுதிக்கு அந்த நேரம்தான் சென்று ஒவ்வொரு எருமை யாக சிறுக்ச்சிறுக விடிய ஆறரை மணிவரை கறப்பார்கள். எப்பிடிக் கறந்தாலும் நாற்பது லீட்டரைத் தாண்டாது.

பால் சேகரிக்கும் நிறுவனம் விடிய காலை ஏழு மணிக்கு வருவதால்தான் இந்த அவசரம். அவரது மகள்மார் பசுக்களில் பால் கறப்பார்கள். மாலை நேர பால் எடுக்க வேண்டுமென எனக்கு ஊடாக பால் சேகரிக்கும் தனியார் நிறுவனமொன்றிடம் கோரிக்கை வைத்த போதும் காட்டு வீதியின் தன்மை காரணமாக அவர்களது கோரிக்கை மறுக்கப் பட்டது. கடைசியில் அவருக்கு எனது அலுவலகத்தால் அரை மானியத்தில் ஒரு குளிர்சாதனப் பெட்டியை வாங்கிக் கொடுத் திருந்தேன். வைத்தியும் மனைவியும் விடியல் காலையில் பால் எடுக்கப் போகும்போது யானைக் கூட்டம் பலமுறை துரத்தியும் தேன் எடுக்கப் போகும் போது கரடியிடம் கடியும் வாங்கியிருக்கிறார்.

ஒரு தடவை சிராட்டிக்குளப் பக்கம் இறந்த கரடியில் நெய் எடுக்க வேண்டும் என்று போவதாகக் கேள்விப்பட்டேன். கரடி நெய் தலைமுடி வளர நல்லதாம் என்று தலைவர் சொன்னார்.

சில நாட்களின் பின் வைத்தி இரண்டு பொலிசாரோடு வந்திருந்தார். சின்ன வில்லுப் பகுதில மேய்ந்த தனது மூன்று எருமைகளைக் கடத்திக் கொன்று இறைச்சியாக்கி விற்று விட்டார்கள் என்று..."

"யார் செய்தவங்க வைத்தி ஐயா!"

"உந்த ஈச்சளவக்க சைவ பொடியள்தான். வேச மக்கள் கிறிஸ்மஸுக்கு அடம்பன் பக்கம் வித்திருக் காங்க. எவ்வளவு பெரியமடு சோனகப் பொடியள் இருந்தும் எண்ட மாட்டில கை வைக்க மாட்டாங்க... பாவிகள். அருமையான பசு மாடுகள வெட்டிட்டாங் கள்..." என்று வேதனையுடன் சென்றார்.

வயோதிகம் காரணமாக முன்பு போல் வைத்தி ஐயாவால் இரவு காவல் செய்ய இயலாமற் போயிற்று. அவருக்கு இழுப்பு வருத்தம் இருந்தது. அதனால், பனி காலத்தில் அவர் இரவுக் காவலுக்கு போவதில்லை. யானைப் பயம் காரணமாக அவரின் மகன்களும் போவ தில்லை. இதனை நோட்டமிட்டு குறித்துக் கொண்ட பொடியள்தான் இந்த வேலையை செய்திருக் கிறார்கள்.

சில நாட்களில் ஒரு விபத்தில் வைத்தியின் கால் முறிந்து விட்டது. அதை சுகப் படுத்த மாதக் கணக்கில் வீட்டிலேயே இருக்க வேண்டிய நிலை தோன்றியது. எருமைகளை யாரும் பராமரிக்க முடிய வில்லை. அவரின் அநேக பிள்ளைகளும் பேரப் பிள்ளை களும் வேறு வேறு தொழில்கள் நிமித்தம் வவுனியா மன்னார் என்று போய் விட அவரின் மனைவியாலும் இவற்றை பராமரிக்க முடியவில்லை. பசுமாடுகளையும் ஆடுகளையும் ஊரில் உள்ள மகள் பொறுப்பெடுத்துக் கொண்டார். ஊரில் முன்னை விட அதிக இடங்களில் வயல் செய்யப்படவும், வைல்ட் லைப் பொறஸ்ட் கெடு பிடி அதிகரிக்கவும் மேய்சலின்றி எருமைகள் அவதிப் பட்டன. அந்த வருடம் பசுக்கள், எருமைகள், ஆடுகளுக்கு வந்த பரம்பிஸ்டோமி யோசிஸ் இரப்பைப் புழு நோய் தாக்கி வைத்தியின் மாடு களுடன் ஊரில் உள்ள பல இளம் கால்நடைகள் இறந்தன. அவர் கண் முன்னே அவரின் செல்வங்கள் கரையத் தொடங்கின. கனத்த இதயத்துடன் பல எருமைகளை விற்கத் தொடங்கினார். சில இறைச்சி வியாபாரிகளும் வந்த போதும் அறுப்புக்கு கொடுக்க மாட்டார் எனச் சொல்லி கலைத்துவிட்டார். வளர்ப்புக்கு எடுப்பது போல் உள்ளூர் ஆட்கள் மூலம் களவாக வாங்கத் தொடங் கினர். இறுதியில் அவரிடம் ஒருசில எருமைகளே மிஞ்சின.

நானும் மாற்றலாகிச் செட்டிகுளம் வந்து விட்டேன். அவரின் தொடர்புகள் அறுந்து போனது. ஒரு தடவை பாலம்பிட்டி சென்ற போது அவரின் வீட்டுப் பக்கம் போனேன். சின்ன வில்லுக்குள் நிற்பதாகச் சொன்னார்கள். அங்கு போக சில எருமைகளுடன் பேசிக்கொண்டு நிற்பதை கண்டேன்.

"ஐயா எப்பிடி இருக்கீங்க?"

"யாரு....சரியா தெரியல்ல"

"நான்தான் பழைய மாட்டு டாக்குத்தர்."

"அடடே வாங்க தம்பி...என்ன இந்தப்பக்கம். திருப்பி வந்திட்டீங்களா?"

"சும்மா உங்கள பாக்கத்தான். வீட்ட போனன். இங்க நிக்கிறதா சொன்னாங்க அதான்..."

"சந்தோசம் என்ன நினைவு வச்சு வந்ததுக்கு..."

"என்ன திருப்பி எரும வளர்க்க தொடங் கிட்டியள் போல..."

"முந்தி மாதிரி கனக்க இல்ல...எண்ட கடைசிப் பேரனுக்கு இதுகளில விருப்பம். அதான் அவனுக்குப் பழக்குறன்" என்று ஒரு பதின்ம வயசு சிறுவனைக் காட்டினார்.

"கடைசிச் சண்டைக்க எல்லாத்தையும் வட்டக் கச்சி வரை கொண்டு போய் இழந்துதான் இதுகள மீளக் கட்டி எழுப்பினன். இப்ப எண்ட பேரனுக்கு வழியக் காட்ட வேணும். பிறகு அவன் பார்த்து கொள்வான்." என்று நம்பிக்கையுடன் சொன்னார்.

நானும் சிரித்தபடி அவரிடமிருந்து விடை பெற்றேன். இந்தமுறையும் தேன், மரை வற்றல், தயிர் என கைநிறையத் தந்துவிட அவர் மறக்கவில்லை. •



# இப்ராஹிம் அல்காஷி

## நவீன இந்திய அரங்கின் அடையாளம் - விடை பெற்றுகொண்டது அவ்வடையாளம்

(18 அக்டோபர் 1925 - 4 ஆகஸ்ட் 2020)

■ கலாநிதி. சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் ■

**அறிமுகம்**

இந்திய தேசிய நாடகப் பள்ளியின் நாடக மாணவன் என்றால் நாடக உலகில் அவருக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. எஸ்.பீ. சீனிவாசன், சே.ராமானுஜம், கோஸ். ராஜேந்திரன், ரெஜின் ரோஸ், அறிவழகன் போன்றோருக்கு ஒரு தனி இடம் நாடக உலகில் உண்டு. இந்நிறுவனம் ஆசியாவின் நாடக மத்திய நிலையமாக அமைந்துள்ளது. மொஸ்கோ கலையரங்கு ரஷ்யாவின் நாடக மத்திய நிலையம் - அதைப்போன்ற இந்தியாவின் தேசிய நாடகப்பள்ளி. அதனோடு தொடர்புடையோர் அனைவரும் சிறந்த நாடக ஆளுமைகள். இந்த தேசிய நாடகப் பள்ளி என்ற நிறுவனத்துடன் பின்னிப்பிணைந்த பெயர்தான் இந்த - இப்ராஹிம் அல்காஷி.

அரங்கியலின் பல பரிமாணங்களைச் செய்முறையாகச் செய்து காட்டிய அரங்கியலாளர் இப்ராஹிம் அல்காஷியின் உயிர் (04.08.2020) தனது 95 ஆவது வயதில் இறையடி சேர்ந்தது.

இந்திய அழகியல்களைக் கண்டடைய வேண்டும்; உருவாக்க வேண்டும்; நிலை நிறுத்த வேண்டும் என்ற பண்டித நேருவின் கனவின் ஒரு பகுதியாக இந்திய அரங்கியலை உருவாக்கி, கற்பித்து, இந்தியாவெங்கும் மாணவர்களை அனுப்பிவைத்த மாபெரும்பேராசிரியர், கலைஞர் அல்காஷி.

அரங்க அமைப்பு நிர்வாகத்திலும், திறந்தவெளி அரங்க வடிவமைப்பிலும் நுட்பம் காட்டி, தேசிய நாடகப் பள்ளி இயக்குனராக கடந்த 60 வருடங்களில் இந்தியா முழுவதும் எண்ணற்ற அரங்கக் கலைஞர்களை உருவாக்கிய இப்ரஹீம் அல்காஷியின் மறைவுக்கு அஞ்சலி.

**அல்காஷியின் பயணம்**

தேசிய நாடகப் பள்ளியின் முதல் இயக்குநரும் இந்திய நவீன நாடகச் செயற்பாடுகளின் தொடக்கப் புள்ளியாகவும் இருந்து, நாடக்கலை வளர்ச்சிப் போக்கில் உயர்ந்த ரசனைத் திறனை உருவாக்கி, பல புதுமைகளை நோக்கி மடைமாற்றம் செய்தவருமான இவரின் மறைவு ஒட்டுமொத்த கலை உலகின் பேரிழப்பு. இந்திய நாடகக் கலையை உலக அளவிற்கு தன்னுடைய நாடக ஆக்கங்களின் மூலம் எடுத்துச் சென்றவர்.

அல்காசி ஒரு கண்டிப்பான ஒழுக்கநெறி கொண்டவர். அவர் ஒரு நாடகத்தைத் தயாரிப்பதற்கு முன்பு கடுமையான ஆராய்ச்சி செய்து தயாரிப்பு நெறிமுறைகளை ஒழுங்கு முறையில் கடைப்பிடித்த இயக்குனர். இவர் காட்சி அமைப்பின் முக்கிய கர்த்தாவாக விளங்கியதுடன், அதன் முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தவர். புதுடெல்லியின் தேசிய நாடகப் பள்ளி இயக்குநராகவும் இருந்தார் (1962-1977) இவர் ஒரு குறிப்பிடத்தக்க கலை ஆலோசகர், சேகரிப்பாளர் மற்றும் கலைக்காட்சிக் கூட உரிமையாளர் ஆவார். மேலும் டெல்லியில் கலை பாரம்பரிய கலைக்காட்சிக் கூடத்தினை தனது மனைவி ரோஷன் அல்காஷியுடன் இணைந்து உருவாக்கியவர். தனது வாழ்நாளில் பல நாடக மாணவர்களை உருவாக்கிய அல்காசி, புரோசீனியம் அரங்கு மற்றும் திறந்தவெளி அரங்குகளையும் தனது நாடக மேடையேற்றத்திற்கு பயன்படுத்தினார். திறந்தவெளி அரங்கில் அவரது நாடக வடிவமைப்புகள் அவற்றின் காட்சித் தன்மைக்காகவும், ஒவ்வொரு மேடைத்தயாரிப்பிலும் அவர் முன்பு இயக்கிய அசல் சூழல்களுக்காகவும் பாராட்டப்பட்டார்.

**கல்வியும் நாடக பயிற்சியும்...**

இங்கிலாந்தில் உள்ள ரோயல் அகாடமி ஆஃப் டிராமாடிக் ஆர்ட் (ராடா) Royal Academy of Dramatic Art (RADA) இல் பயிற்சி பெற்ற இவர், 1950 இல் பிபிசி ஒளிபரப்பு விருதை வென்றார். கிரிஸ் கர்னாட்டின் - துக்ளக், மோகன் ராகேஸின் - ஆஸாத் கா ஏக் தின், தரம்வீர் பாரதியின் - அந்தா யுக் மற்றும் ஏராளமான ஷேக்ஸ்பியர் மற்றும் கிரேக்க நாடகங்கள் போன்ற பிரபலமான தயாரிப்புகள் உட்பட 50 க்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். அதில் பங்குகொண்ட பலர் பின்னாளில் சிறந்த நடிகர்களாக, நெறியாளர் களாக, மேடை விதானிப்பாளர்களாக, மேடை ஒளி யமைப்பாளராக உருவாகி, இந்திய நவீன நாடகத்தை உலகுக்கு அறிமுகம் செய்தனர்.

அவரது ஆரம்பகால நாடகங்கள் பல மேற்கு நாடுகளின் எழுத்துருக்களை அடிப்படையாக் கொண்டவை. அவை ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்டன வாக இருப்பினும், அல்காசி இந்திய பார்வை யாளர்களுக்காக இந்நாடகங்களை இந்தியச் சூழலுக்கு மிகவும் தொடர்புபடுத்தக்கூடியதாக மாற்றினார்.

**வாழ்க்கையின் ஆரம்பம்...**

மகாரர்டிராவின் புனேவில் பிறந்த அல்காசி, இந்தியாவில் வர்த்தகம் செய்யும் ஒரு பணக்கார சவுதி அரேபிய வணிகர் மற்றும் ஒரு குவைத் தாயின் மகனாவார். அவர் ஒன்பது உடன்பிறப்புகளில் ஒருவர். 1947 ஆம் ஆண்டில், அல்காசி இந்தியாவில் தங்கியிருந்தபோது அவரது குடும்பத்தின் மற்றவர்கள் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தனர்.

அரபு, ஆங்கிலம், மராத்தி மற்றும் குஜராத்தி மொழிகளில் தாடனம் உடைய அல்காசி புனே புனித வின்செண்ட் உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் மும்பை புனித சேவியர் கல்லூரியிலும் பயின்றார். அவர் செயின்ட் சேவியர்ஸில் மாணவராக இருந்தபோது, கல் தான் "பாபி" பதம்சியின் ஆங்கில நாடக நிறுவனமான தியேட்டர் குழுமத்தில் சேர்ந்தார். அதன்பிறகு அவர் 1947 இல் லண்டனில் உள்ள ராயல் அகாடமி ஆஃப் டிராமாடிக் ஆர்ட்டில் பயிற்சி பெற்றார்.

**தொழில்**

அவரது தொழில் வாழ்க்கையின் ஆரம்பத்தில் - அவர் மும்பை முற்போக்கு கலைஞர்கள் குழுவுடன் இணைந்தார். அதுதவிர 1953 ஆம் ஆண்டில் "தியேட்டர் யூனிட் புல்லட்டின்" Theatre Unit Bulletin ஒன்றை நிறுவி, அதன் மூலம் மாதந் தோறும் நாடக நிகழ்வு களை மேடை ஏற்றி மற்றும் இந்தியா முழுவதும் நாடக நிகழ்வுகள் குறித்தும் அறி வித்தார். பின்னர், அவர் ஸ்கூல் ஆஃப் டிராமாடிக் ஆர்ட்ஸை நிறுவி, பம்பா யின் நாட்யா அகாடமியின் முதல்வரானார்.



நேஸனல் ஸ்கூல் ஆஃப் டிராமாவின் (என்.எஸ்.டி) இயக்குநரான அல்காசி ஹிந்தி நாடகத்தை தனது பார்வையின் மீள் கட்டுமானம் செய்து சிறப்பித்தார். அவர் தனது அரங்கியல் தொழில்நுட்ப அறிவால் புதிய புரட்சி செய்தார்.

அவர் திரைப்படம் மற்றும் அரங்கியல் ஆளுமைகளுடன் இணைந்து செயற்பட்டவர். அந்த வகையில் விஜயா மேத்தா, ஓம் சிவ்புரி, பால்ராஜ் பண்டிட், ஓம் பூரி, நசீருதீன் ஷா, மனோகர் சிங், உத்தர பாக்கர், ஜோதி சுபாஷ், சுஹாஷ் ஜோஷி, பி. ஜெயஸ்ரீ, ஜெயதேவ் மற்றும் ரோஹினி ஹட்டங்கடி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**விருதுகள்**

அல்காசி இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க விருதுகளை வென்றார். இது அரங்கின் உணர்திறன் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கியதுடன் மற்றும் நவீன பாரம்பரிய வெளிப்பாட்டை இந்திய பாரம்பரியத்துடன் வெற்றிகரமாக கலந்தது. நாடக அரங்கிற்காக வாழ்நாள் பங்களிப்புக்காக ரூப்வேத் பிரதிஷ்டானின் தன்வீர் விருது (2004) முதல் பெறுநராக இருந்தார். அவர் பத்மஸ்ரீ (1966), பத்ம பூஷண் (1991), மற்றும் இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த சிவில் விருது பத்ம விபுஷன் உள்ளிட்ட விருதுகளை 2010 இல் பெற்றுள்ளார். இந்தியா வின் இசை, நடனம் மற்றும் நாடகத்திற்கான தேசிய சங்க நாடக அகாடமியால் அவருக்கு இரண்டு முறை விருது வழங்கப்பட்டுள்ளது. அதி உயர் விருதான சங்கீதநாட்க அக்கடமி பெலோசிப் கௌரவத்தையும் பெற்றுள்ளார். அது அவரின் உழைப்பிற்கு நாடு அளித்த கௌரவம்.

**முடிவாக**

அவர் தனது அனைத்து நாடகங்களுக்கும் ஆடைகளை வடிவமைத்த ரோஷன் அல்காசியை (இறப்பு 2007) திருமணம் செய்து கொண்டார். மேலும் இந்திய ஆடைகளின் வரலாறு குறித்து இரண்டு புத்தகங் களை எழுதியுள்ளார். 1977 ஆம் ஆண்டில் டெல்லியின் திரிவேணி கலா சங்கத்தில் கலை பாரம்பரிய கலைக் கூடத்தை நிறுவி, 40 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டு நடத்தினார். தம்பதியருக்கு - தியேட்டர் இயக்குநரும், தேசியபள்ளி நாடகத்தின் முன்னாள் தலைவருமான அமல் அலானா மற்றும் டெல்லியைச் சேர்ந்த நாடக இயக்கு நரான ஃபைசல் அல்காசி ஆகிய இரு பிள்ளைகள்.

தன் குடும்பத்தையே இந்திய நவீன நாடக வளர்ச்சிக்கு ஆகுதியாக்கி யவர் அல்கஷி. அவர் வாழ்வு ஓர் ஆலம் வேர் கொண்டது. அவர் விட்டுச் சென்ற விழுது இன்னும் இந்தியா நாடகக் கலையை உயிர்ப்பித்துக் கொண்டு இருக்கின்றது. மாநில நாடக வளர்ச்சிக்கும் இவர் இட்ட புள்ளியால் தான் இந்தியா பூராகவும் நாடகம் புதிய தளத்தை பெற்றது. ●

# பகடாமணி...

ரோகில் அன்னம்மா

அவள் மங்கலான மின்விளக்கை ஒளிரச் செய்து "மெனே தம்பி... மெனே ராசு... இப்பானாப்பா வேல முடிஞ்சி வந்த... செரிப்பா நீ படுத்துக்க..." என்று கொடுப்புகுள் பொதுக்கிவைத்த வெற்றிலை சக்கையை துப்பிவிட்டு, கரித்துண்டால் பல்லை துலக்கியதும் அடிநீர் குழாயில் முகத்தை கழுவிவிட்டு விறாந்தைக் கொடியில் தொங்கியிருந்த புடவையை எடுத்து நாலுசுத்தால் உடுத்துவிட்டு வெற்றிலைகுற்றை தலைமேலே தூக்கிவைத்து, இடது கையில் மரக்கறிப்பையையும், வலது கையில் கைக் கூடையையும் எடுத்துக்கொண்டு வியாபாரத்துக்குச் செல்ல தயாராகும்போது அவள் வகிற்றில் லேசா கடமுட கடமுட என்று இரைச்சல் வந்ததும் கூடையை கீழே வைத்து, வகிற்றை தடவி சரி செய்து கொண்டாலும் வகிறு சூடாக இருந்ததால் உமிழ்நீரைத்தொட்டு பொக்கனியில் தடவிக்கொண்டு "நெலம செரியில்ல ஒருக்கா குந்தியிருந்தாத்தான் செரி..இப்பயெங்க குந்துறது....! செரி ஓட்டமாவடிக்கு போய்ச்சேரும் வெர கொஞ்சம் பொறுத்துக்கதான் வேணும்" என்று இரண்டு பனடொல் குளிசையை விழுங்கிவிட்டு அவள் புறப்படும்போது ராசு ஓடிவந்து வெற்றிலைக்குற்றை பறித்து துவிச்சக்கரவண்டியில் வைத்து சுமந்து சென்றதும் "கோ... ஓணக்கு வகுத்துக்கடுப்பெண்டா ஏங்கா யாவாரத்துக்கு போரா... வெத்திலய பக்கியத்தாவுக்கு குடுத்துப் போட்டு சொகமானதும் போவங்கா.."

"ஒணக்கென்ன... லேசா சொல்லிட்டா, ஒணக்கு வேலக்கி கட்டுன காசி... ஓ...ந்தம்பிக்காரன் வெளிநாட்டுக்குபோக வாங்கின காசெண்டு ஏகப்பட்ட கடன் கெடக்கு...! அதெல்லாம் ஆரு இறுக்கிற..! நீ வேற காசகட்டி எடுத்த வேலய உட்டுத்து ராத்திரில வங்கிய காவல் காக்கிற வேலக்கி போறா.. அதில என்னத்த குடுப்பானுகளோ...! நா... வேலக்கி போனாத்தான் எனக்குக்கொஞ்சம் ஆறுதல்.. மாக்கட்டிலிருக்கிற கக்கூஸ்ல கொஞ்சம் நிம்மதியா குந்திருப்பன்..!, இங்ககென்னத்த கோடியே நாறிபோய்கெடக்கு, கொப்பனும் வருத்தக்காரரு நடக்கமுடியாம அங்கதான் போராரு... புள்ள... அவளும் கொமரு.." என்று அவள் சொல்லி முடிப்பதற்கிடையில் வெற்றிலைக்குற்றை பேருந்து நிழற்குடை இருக்கையில் வைத்துவிட்டு துவிச் சக்கரவண்டியை வேகமாக உன்னியுதைத்து சென்றான்.

ஆளரவம் கேட்பதற்கு முன்னாடி காட்டுக்கு ஓடிப்போய் வசதியான இடத்தில் குந்தியிருந்து இன்று பகலைக்கிடையில் கழிக்கவேண்டிய எல்லா மலத்தையும் ஒட்டுமொத்தமாக கழித்துவிட்டு, மலவாயை கழுவுவதற்கு சுற்றி கொஞ்சத்தூரத்துக்கு நீரில்லையென்பதால் கம்புக்குச்சியால் வளித்துத் துடைத்துவிட்டு, வழமை போன்று கடற்கரையில் கழுவுவதற்காக செல்லும் போது கரைவலை மீன் பிடிப்பவர்களின் நடமாட்டம் தெரிந்ததும் அப்படியே நடையை விட்டு, காளிகோவில் கிணற்றில் நீரையள்ளி மலவாயை கழுவிவிட்டு வீடுவந்து சேர்ந்தான்.

துவிச்சக்கரவண்டியை வீட்டு சுவரோடு இணைத்து சாய்த்துவிட்டு ஒரு குட்டித் தூக்கத்தை போடலாமென்று தயராகும்போது ராசுவின் அப்பா வீட்டுக்கு ஒதுக்குப்புற குடிசையிலிருந்து அழைப்பது தெரிந்ததும் உடனே அவரை இரண்டு கைகளாலையும் இணைத்துத் தூக்கிக்கொண்டு கிடுகு மட்டையால் சுற்றிவேயப்பட்ட கோடிக்குள் இருக்கையாக இருக்கும் இரண்டு கற்களுக்கிடையில் அவரை பவ்வியமாக வைத்தான். அவர் சாரனை ஒதுக்கிவிட்டு கற்களுக்கிடையில் பட பட என்ற சத்ததுடன் மலம்வெளியேறியதும் கற்களுக்கிடையில் கோப்பத்தையை விட்டு மலத்தை வழித்து அள்ளிக்கொட்டுவதற்காக கோடிக்குள்ளிருந்த பழைய வாளியை திறந்தான் நாற்றம் குடலைப் பிடுங்கிய



தும் ஓடிப்போய் வாந்தியெடுத்தான். பின்பு அடிநீர்க் குழாயடியில் இருந்த நீர்வாளியை எடுத்துவந்து அப்பாவின் ஆசானவாய் பின்புறத்தில் நீரை ஊற்றியதும் அவரது இடது கை செயலிழந்ததால், வலதுகையால் மலவாயை தேய்த்து கழுவிக்கொண்டதும் அப்படியே தூக்கிக்கொண்டு அவரது படுக்கையில் வைத்தான்.

பட்டகையுடன் முகத்தில் துணியைச் சுற்றிக் கட்டி விட்டு கோடிவாளியிலிருந்த எல்லா மலத்தையும் பொலீத்தின் பையினுளிட்டு இறுகக்கட்டிவிட்டு பசளைப் பையினுள் போட்டு ஓரமாக வைத்தான். ஒதுக்குப்புறத்திலிருந்து மண்ணை வெட்டி கோடியை சுத்தப்படுத்தினான். வாளிகுள் நன்கு மணலைபோட்டு செருப்புக்காலால் துடைத்து, நீரையடித்து கழுவி விட்டு, வாளியை இருந்த இடத்தில் வைத்ததும் அவனது தங்கை எதிரே வந்து நிற்பதை பார்த்து நச்சரித்துக்கொண்டே "வீட்டானடியிருக்கா.. இந்த எடம் எப்படியிருந்திச்சி... இதெல்லாம் கிளியர் பண்ணுரலயா நீ"

"ஆ...கிளியர் பண்ணிட்டாபோல.. செரி செரி வெளியபோ எனக்கு அவசரம்... பொறகு பள்ளி தொடங்கித்தெண்டா மாடிலருந்து எட்டியெட்டி பாப்பாங்க" என்று கோடிக்கதவை அடைத்து சாய்த்து விட்டு அவள் மலத்தை கழித்துக்கொண்டே "இஞ்ச பொதச்சி பொதச்சி எடமில்லண்டுதான் வாளிக் கெடுத்து போட்டன்"

"எனி ஒடனே ஒடனே கிளியர் பண்ணிடு.. இல்லாட்டி ஒவ்வொரு நாளும் நான் சாமத்தில காட்டுக் குப்போகக்க இப்படி வேக்கிலபோட்டு வெச்சயண்டா நான் போட்டுத்துவருவன்" என்று கை, கால்களை சவர்க் காரமிட்டு நன்றாக உராய்ந்து தேய்த்து கழுவிவிட்டு மலப்பையை தூக்கிக்கொண்டு போகும் போது "டேயண்ணா... இதயும் போட்டுடு" என்று அவள் பொட்டலமாகச் சுற்றிகொடுத்ததையும் சாக்கினில் போட்டுகொண்டு துவிச்சக்கரவண்டியை மிதித்துச் சென்றான்...

அன்று காரிருள் சூழ்ந்துகொண்டதால் மழை விடாமல் கொட்டிக்கொண்டிருக்கின்றது. வியாபரத் துக்கு சென்று வந்தவளை மழைவரவேற்றதும் நனையாமலிருக்க விறாந்தையில் ஒதுங்கிக்கொண்டா லும் இத்துப்போன கிடுகில் மழைநீர் தேங்கியிருந்து, சொட்டுச்சொட்டாக வழிந்த நீர் அவள் கன்னத்தை நனைத்ததும், முந்தாணையால் துடைத்துகொண்டு, வாசலடியில் வந்து நின்ற முச்சக்கரவண்டியை அவள் ஆச்சரியத்துடன் வெறித்துப் பார்த்தாள். ராசு ஒரு பெரிய காகிதப்பெட்டியை அலுங்காமல் குலுங்காமல் துாக்கிக்கொண்டு மண்டபத்தில் நுழைந்ததும் "என்னப்பா இது....."

"ரீவிகா... முப்பத்திரண்டிஞ்சி, அபான்சில கட்டுகாசிக்கெடுத்தன்"

"எதுக்குத்தம்பி இதெல்லாம் மொதல் சம்பளத் தெடுத்து ஒ..அப்பனுக்கும் தங்கச்சிக்கும் உடுப்பெடுத் துக் குடுத்திக்கலாமே...!" என்று அவள் பேச்சிக்கு பதில் கூறாமல் அவன் அவசரத்தில் வீட்டுக்கு பின்புறத்தி லுள்ள பாடசாலை மதில் சுவரை தாண்டிக்குதித்தான்..

"கோ... உடுப்புத்தானே எடுக்கலாம் எடுக்க லாம்... அதவிட நான் எங்கபோப்புறன் இந்த நாலு சுவத்த விட்டா... வீட்டில ரீவியிருந்தா நல்லது தானேகா நாடகத்த பாத்திட்டு கெடந்திடலாம்... மாணியத்தா வுட்ட எவ்வளவு காலத்துக்குதான் ரீவி பாக்கிற... முஞ்சிய சுருட்டித்து...! குதாவிடக்கத வேற...! ஆரோ அவவுட கக்கூச அசிங்கப்படுத்திபோவ அவயெனக்கு கொம்பு றாவு நான்தான் கக்கூசிக்கு போனயெண்டு..."

"ஓ...அப்படி மணியத்தாவுமேல ஒணக்கென்ன கோவம்? ரீவிபாக்கிற சாட்டில அவவுட கக்கூசிக்க இருந்திட்டுவாரது எனக்கு தெரியாதா..! அதுமட்டுமா அண்டகியந்த பரமேஸ் டீச்சர் ஏசிப்போட்டு போராவ பள்ளிக்கக்கூச அசிங்கப்படுத்தினண்டு...இப்பிடி எளவு அசிங்கம் இருந்தும் ஒங்களுக்கு பவுசி கொறயல்லயே..! நாங்களும் இருந்தம்தான்.. இப்பிடி கேவலப்படல. அந்தக்காலத்தில ஆருரட வீட்டயாவது கக்கூசி இருந்திச்சா..!, ஆனா காட்டுக்க போனாலும் நிம்மதியா இருந்தம்! இப்பயா காடுகிடெல்லாம் தோட்டமும் வீடுமாயிட்டே...!"

"கோ.. இப்பன்ன கக்கூசிதானே.. எனக்கு மட்டும் ஆசல்லயா கட்டணுமெண்டு, தம்பி காசனுப்புனா கட்டுறாங்கா..."

"நீயும் ஒரு பொம்புலப்புள்ள.. ஒங்கடப்பாவும் கெடப்படயில கெடக்காரு... நாளக்கி அவருக்கு என்னவுமெண்டா சொந்தகாரரெல்லாம் வருவாங்க... நம்மட நெலம தெரிஞ்சா அசிங்கமே...டி" என்று அவள் சொல்லிமுடிப்பதற்கிடையில் தொலைபேசி அழைப்பு கேட்டதும் மகள் ரெட்மீ நொட் எயிட் தொலை பேசியை எடுத்து தம்பியின் வீடியோ அழைப்பை அழுத்திவிட்டு உரையாடிக்கொண்டிருக்கும் போது "அம்மா தம்பி கொழும்புக்கு வந்திட்டானாம்... நாளக்கி ஊருக்கு வந்திருவானாங்கா...!" என்று மகள் சொல்லிக்கொடிருக்குபோது அம்மா தொலைபேசியை பறித்து "ஏன் தம்பி அவசரப்பட்ட... என்னும் கொஞ்சக் காலத்திக்கிருந்து வந்திக்கலாமே.. வாங்கின கடன என்னும் இறுக்கல்ல.."

"கம்பனிய மூடிப்போட்டாங்கா.. நான் பாஞ்சி வேலசெய்லாமெண்டுதான் எளவுகாலமும் பொறுத் திருந்த... அதாங்கா நான் சொல்லல..."

"என்னமெணி தலயில கல்லதூக்கிபேடுரா.. அண்ணங்காரன் படிக்கட்டும், நான் வெளிநாடு போய் ஒழைக்கபோறனண்டுதானே சோனிகாரனிட்ட கடன் வாங்கித்தந்தன்"

"நீ இப்பிடி ஏசுவாண்டு தெரிஞ்சிதான் கூட்டாளி பொடியனிட்ட கொஞ்சக்காசி கடனுக்கு வாங்கிருக்கன்"

"ஒரு கடனடைக்க என்னொரு கடனா..! செரி செரி... இருக்கிற காச செலவழிச்சிடாம கவனமா வந்து சேரு... ஆ...பொறகு நீ வந்த மொதல் வேலயா அந்த கக் கூஸ.." என்று அவள் சொல்வதை கேட்கமுன் அழைப்பை துண்டித்ததும் "என்ன புள்ள இவன் கட்டுப்பண்ணிப் போட்டான்... கண்டதெல்லாம் வாங்கி காசக்கரி யாக்கிப் போடுவனே...!"

"இல்லகா டேற்ரா முடிஞ்சி.. அதுதான் கட்டாயிருக்கு" என்று மகள் கூறினாலும் தன்னுடைய பிள்ளைகளைப்பற்றி அவளுக்கு தெரியாதா...?

"எது நாகரிகம்..? எது அபிவிருத்தி..? இந்த நாற்றம் மேல் நடப்பதா..? ஆடம்பரம் ஒரு ஆடும் பம்பரம் போன்றது..! அது ஒரு பகடாமணி..! ஏழை எளியோர் மனங்களில் ஊடுருவி அத்தியாவசியத்தை ஆடம்பரமாகவும், எமது அடையாளத்தை பண் பாட்டுக்கலப்பாகவும் கொஞ்சம் கொஞ்சமாக உருமாற்றிவிட்டது..! நீர், உணவு, உடை, வீடு, மலசல கூடம் ஆகிய அத்தியாவசியமும் ஆடம்பரமாகி விட்டது. கிராமத்தில கிணற்றை நுளம்பு வலையால் மூடிவிட்டு லையின் வோட்டர் யூஸ் பண்ணுறாங்க, இருபத்தை யிந்து வருடத்துக்கு வேங்கில கௌசிங் லோன் எடுத்து மாடிவீடக்கட்டுறான் பிறகு அதை உடைத்துவிட்டு திரும்ப கட்டுறான் ஏன் என்றால் நியூ மொடல். இப்பெல்லாம் வீடுகட்டுறது பாம்பு சட்ட கழட்டுற மாதிரி..! இடையில அவன் வீடு கட்டுறத் துக்கே அரைவாசி வாழ்கை சரியாபோயிரும்..!" என்று தொலைக்காட்சியில் ஒலித்த குரலோடு அவளும் மகளுடைய எதிர்காலம் பற்றியும், அவளுடைய வாழ்க்கைத் துணையைப்பற்றியும் தொல்லையை பார்த்துக்கொண்டே மெய்மறந் திருந்தவள் திடீரென்று கணவரின் ஞாபகம் வந்ததும் மெல்ல மெல்ல நகர்ந்து ஒத்தாப்புப் படலையை திறந்துகொண்டு உள்ளே சென்றாள்...

அழுக்கு நிறைந்த போர்வையை போர்த்திக் கொண்டு படுக்கையிலே கிடப்பவரை கண்ணிமைக்காமல் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தவள் "கக்கூசி கட்டணுமெண்டு எளவுகாலமா நீ ஆசப்பட்டா.. ஒண்டாசய ஒ..ம் புள்ளயல் கணக்கெடுத்திச்சா... லாம அண்டக்கி நீ காட்டுக்கு போகாம, பாம்பும் கடிக்காம, கீழ விழாம, கைகால் முறியாம, இப்ப படுத்த படுக்கையா கெடக்காமருந்தா அந்தக்கக்கூச நீ கட்டிருப்பயே... நான் யென்ன செய்வன் என்ன மன்னிச்சிடு" என்று அவள் இடது கண்ணோரமாக கசிந்த நீரை துடைத்துவிட்டு அவர் பேச்சு மூச்சில்லாம லிருப்பதை பார்த்து தோளில் தட்டி இரட்டியதும் அவரது கை திடீரென்று நிலத்தில் விழுந்ததும் அவளுக்கு தூக்கிவாரிப்போட்டது..! உடனே அருகில் நகர்ந்து போர்வையை விலத்திவிட்டு மூக்கின் மேலே விரலைவைத்து பார்கிறாள், நாடியை பிடித்துப் பார்கின்றாள் அவர் உயிர் உடலைவிட்டு பிரிந்து விட்டாலும் அவர் உடலிளிருந்து கடைசியாக வெளி யேறிக்கிடந்த மலத்தை அப்படியே கண்ணிமைக் காது பார்த்துகொண்டிருந்தாள்..! இவளவுகாலமும் மலம் கழிப்பதற்கு பட்ட அவஸ்தைகளும், நாற்பது வருடம் ஒன்றாகவே பட்ட துன்பங்களும், இன்பங்களும் அவள் கண்முன்னே வந்து நின்றதும் சற்று உணர்சிவசப்பட்டு "ஒருதாய் தன் குழந்தையின் மலத்தை எவ்வாறு அள்ளி எடுப்பாளோ" அது போன்று இரண்டு கைகளாலையும் அவரது இறுதி மலத்தை அள்ளிக் கொண்டு ஒத்தாப்பிலிருந்து வெளியே வந்தும், தனது இளையமகன் கே.ரி.எம்: இருநூறு சி.சி புதிய மோட்டார் வண்டியுடன் வந்திறங்குவதை மகள் வர வேற்றுக்கொண்டு "ஏண்டா ஸ்கூட்டியெடுத்திருக் கலாமே நானும் ஓடியிருப்பன்"

"நானே லீசிங்கிலதாண்டி எடுத்தன்..." என்று அவன் பதில் சொல்லிக்கொண்டிருக்குபோது கையில் கற்பூரச்சட்டி போன்று தன் குழந்தையின் மலத்தை ஏந்திக்கொண்டிருந்தவள் கோபத்தில் "இது ஒ.. அப்பண்ட கடசிப் பீ... எனக்கித எங்க போடுறண்டு தெரியல..." என்று அவன் முகத்தில் வீசியடித்தாள்... ●

# போதை

என் போதையை தீர்ப்பதென்பது
அவ்வளவு எளிதானதல்ல
யாரேனும் தருவதை வாங்கி
பருகி என் போதையை என்னால்
தீர்க்கமுடியாதுள்ளது தோழர்களே!

நானே தயாரித்தால்தான்
எனக்கு போதை ஏறுகிறதென்பதை
தயவு செய்து யாரும்
தப்பாக எண்ணிவிடவேண்டாம்
தலைக்கணம் பிடித்தவனென
தாறுமாறாய் திட்டி விடாதீர்கள்
சுக்குநூறாய் உடைந்துவிடுவேன்.

போதைக்கு அடிமையான
ஆரம்ப காலங்களில்
யார்யாரோவெல்லாம்
தயாரித்தவற்றை எடுத்து
பருகியுள்ளேன்
அவர்களை பற்றி

இப்போது ஒருவரி கூட
என்னால் எழுதித்தர முடியாதுள்ளது.
உங்களுக்கும்தான்!

அவர்களில் சிலர்
தொழிலை கைவிட்டுவிட்டனர்
சிலர் செத்துப்போயினர்
சிலர் சாகடிக்கப்பட்டனர்
சிலரை காணவேயில்லை!
என் போதையை தீர்க்கும்
வலி படைத்தவன்
நானொருவனேயென்பதே
என் வேதனையும்
என் பெருமையும்!


சொற்ப செலவும்
அதிக நேரமும் தேவைப்படுகிறது
என் தாயின்
இல்லையில்லை
எம் தாய்மார்களின்
மனங்களைப்போன்ற
வெள்ளைநிற தாள்கள் சிலவற்றை
எடுத்துக் கொள்கிறேன்
என் மனைவியை போல
அழகான கறுப்பு நிற திரவத்தை
எழுத்தாணிக்குள்
நிரப்பிக்கொள்கிறேன்
இதோ இப்படியேதான்
நேரம் போவதே தெரியாமல்
தயாரித்து
சுடச்சுட பருகிவிட்டு
மின்னஞ்சல் வழியாக
அனுப்பிவிடுவேன்
என் நண்பர்களுக்கு
எனது போதையை தீர்த்த
எனது கவிதைகளை!

மு.யாழவன்

சி.ரமேஷ்

# கோடையாய் தகிக்கும் மணல் மேட்டில் கொட்டித் தீர்க்கும் மழை






கட்டிறுக்கமான சொல்மரபின் நீட்சியாக அமைந்த எழுத்து, ஐரோப்பியக் கல்வியை அடுத்து சொற்களின் கலையாக அமையும் கவிதை, சிறுகதை, நாவல் என்ற பல்பரிமாணத்தன்மை கொண்ட நவீன படைப்பிலக்கியங்களுக்கூடாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டது. வாழ்வின் உண்மை நிலையை ஆழமாக வெளிப்படுத்தும் வினைத்திறன் மிக்க கலைகள் மொழி வாயிலாக கட்டமைக்கப்பட்டு விளைதிறன் மிக்க படைப்பாக உருப்பெறும் நிலையில் குணம்நாடி, குற்றம் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்கதை வெளிப்படுத்துபவர்களாக திறானாய்வாளர்கள் விளங்குவர். ஒரு மரபின் தனித்தன்மையை தர்க்கவியல் சார்ந்த சிந்தனைப் போக்கை அதன் கருத்தாக்கத்தை புதிய பொருண்மையை உள்வாங்கி எழுதப்படும் திறனாய்வுகள் விளக்கி நின்றன. மொழியவப்பட்ட தமிழ்ச் சிந்தனை இழைகளின் தொடர்ச்சியாக அமையும் இத்திறனாய்வுகள் இலக்கியத்தை மதிப்பிடும் அளவுகோலாக அமைகிறது. காய்தல், உவத்தலற்று காமம்(விருப்பம்) செப்பாது கண்டதை மொழிவதைத் திறனாய்வு என்பர். ஓர் இலக்கியப் படைப்பை புரிந்து கொள்வதற்கும் அதன் தகுதி, தகுதியின்மையைக் கண்டறிந்து கலைத்திறனை மட்டிட்டு உறுதிபடக் கூறுவதற்கும் திறனாய்வு உதவுகின்றது.

அறிதல் முறையில் கோலோச்சிய பகுத்தறிவாதத்தின் இலக்கிய வெளிப்பாடாக யதார்த்தவாதம் அமைந்திருந்த நிலையில் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்திய புத்திஜீவிகள் புனை வெழுத்திலும் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். அவ்வகையில் அறிவாற்றலும் ஆராய்ச்சித் திறனும் கொண்டு தமிழ் இலக்கிய சூழலில் தனக்கான உறுதியான இடத்தை நிறுவிக் கொண்டவர் இராஜேஸ்கண்ணன். சிந்தனைத் துறையில் அறிதல் முறையில் இலக்கியப் போக்குகள் பன்முகத்தன்மை கொண்டு வலுப்பெற்ற நிலையில் இரசனை முறைத் திறனாய்வில் இருந்து நீங்கி, அறிவினைக் கருவியாக்கி ஆய்வறிவியல்துறையில் புதிய சிந்தனைகளுக்கு வித்திட்டவர். வரலாற்று உணர்வுடனும் இயக்கவியல் அடிப்படையில் மனிதகுல விடுதலையை ஆதாரமாகக் கொண்டு சமூகப் பிரச்சினைகளை அணுகியவர். இலக்கிய வரலாறு பற்றிய கற்கை விமர்சன மாக இலக்கியக் கோட்பாடாக மாறிய நிலையில் இதனைத் தன் எழுத்துக்கள் வாயிலாக சாத்தியமாக்கி அறிவுக்கையளிப்புச் செய்தவர்.

இலக்கிய வளர்ச்சியும் திறனாய்வு வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்து இயங்கிவரும் நிலையில் இலக்கியம் சரியான பாதையில் செவ்வனே செல்ல முறைமையான திறனாய்வுகளை மேற்கொண்டவர். திறனாய்வு செம்மையாக அமைவது நல்லிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பதனைக் கருத்தில் கொண்டு தமிழிலக்கிய உலகம் அறிய மறுத்த ஆளுமைகளை, இலக்கியவாதிகள் புரட்ட மறுத்த பக்கங்களை,அவற்றுக்கு அப்பாற்பட்ட மறைபொருட்களை(hidden meaning), அவர்களின் உண்மை பொதிந்த படைப்புக்களைச் சீர்தூக்கிபார்த்து அர்த்த உருவாக்கம் செய்தவர்.

"விமர்சித்தல்" என்பது மேலைநாட்டு மரபுவழி வந்த ஒரு நோக்கு முறைமை. "நயத்தல்" என்பது ஏலவே நம் மரபிலிருந்த ஒரு நடைமுறை. இது ஆங்கிலத்திற் கூறப்படும் Appreciation என்பதோடு இணைந்து நிற்பது. மேலைநாட்டு மரபில் அப்பிரிசியேஷன் என்பது உரைப்பகுதிகளையும் உள்ளடக்கி ஆராய, தமிழில் "நயத்தல்" என்பது கவிதைக்கு மாத்திரம் உரிய ஒரு செயற் பாடாகவே கொள்ளப்படுகிறது. ஆனால் இராஜேஸ் கண்ணன் "நயம்பட..." என்னும் சொல்லை கவிதையோடு மாத்திரம் குறுக்கிவிடாது சிறுகதை, நாவலுக்கும் உரிய பொதுவான செயற்பாடாகவே கையாள்கிறார். ஆயினும் "நயத்தல்" என்னும் சொல் சிறத்தல், மதித்தல், பலன்படல், விரும்பல் முதலான பொருண்மையில் சுட்டப்படுகிறது. இதனாலேயே நூலின் தலைப்பு "நயம்பட... :படைப்பு-படைப்பாளி-படிப்பு" என நிற்கிறது. தமிழில் "நயப்புணர்வு" என்பதை கண்ணோட்டம் என்ற பொருளில் வழங்கும் வழக்கமும் உண்டு.

பிரதானமாக மதிப்பீடான "நயத்தல்" விமர்சித்தலுக்கு இட்டுச் செல்லவேண்டும். விமர்சித்தல் என்பது மேலோட்டமான அபிப்பிராயத்தை சொல்வதன்று. அது அபிப்பிராயமாக அமையாது எல்லா விடயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து செய்யப்படும் ஒரு தீர்ப்பாக அமையும் நுண்ணிய மதிப்பீடு ஆகும். எனவே பல் பொருண்மையில் கட்டுறும் நூலின் தலைப்பு உள்ளடக்கத்தின் பொருட்புலப்பாட்டை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கிறது. "நயம்பட... : படைப்பு - படைப்பாளி - படிப்பு" என்னும் நூல் "சமூக வரலாற்றாசிரியனாக நாவலாசிரியன்: தெணியானின் நாவல்களை முன் வைத்த புரிதல்" முதல் "மூத்தோரின் உலகம் பற்றிய சிறுவர்களின் விமர்சனமான "வாழத் துடிக்கும் வடலிகள்" ஈறாக பதினைந்து

கட்டுரைகளை உள்வாங்கி எழுதப்பட்ட நூலாகும்.

"சமூக வரலாற்றாசிரியனாக நாவலாசிரியன்: தெணியானின் நாவல்களை முன் வைத்தல் புரிதல்" என்ற கட்டுரை தெணியானின் நாவல்களை தனிநிலை ஆய்வு முறைக்கூடாகவும் சமூக ஆய்வு முறைக்கூடாகவும் நுண்ணாய்வு செய்கிறது. அறிவைத்திரட்டுவதும் பரவச் செய்வதும் நம்பகமான உண்மைகளின் அடிப்படையில் அறிவை மெய்ப்பிக்கச்செய்வதும் ஆய்வாக முன்னெடுக் கப்படும் இச்சூழலில் இராஜேஸ்கண்ணனின் இக்கட்டுரை தெணியான் என்னும் படைப்பிலக்கிய ஆளுமைக்கூடாக யாழ்ப்பாண சமூகத்தின் வரலாற்றை ஆவணப்படுத்து கிறது. சமூகப்போராளியாகவும் மக்கள் மயப்படுத்தப்பட்ட படைப்பாளனாகவும் வரலாற்று ஆசிரியனாக வும் தெணியானை அடையாளப்படுத்துவதற்காக இராஜேஸ் கண்ணன் வைக்கும் தரவுச்சுட்டிகள் மெய்புலக் காட்டி களாக தொழிற்படுகின்றன. இக்கட்டுரையில் தெணி யானின் படைப்பிலக்கியம் இருபரிமாணங்களில் அனுகப் படுகிறது. ஒன்று படைப்பிலக்கியத்தின் சமூகத் தன்மையை மதிப்பிடல். மற்றொன்று படைப்பின் ஆக்கவியல் அம்சத்தை மதிப்பிடல். படைப்பிலக்கியத்தின் சமூகத்தன்மை என்னும்போது படைப்பாளியின் சமூகப்பிற்புலம், படைப்பை நிர்ணயித்த காரணிகள், படைப்பின் தோற்றம், சமூகமாற்றத்தில் படைப்பின் இயங்கியல், படைப்பாளியின் சமூகப் பொறுப்பு என்பன தீர்மானிக்கின்றன. ஆயினும் படைப்பின் ஆக்கவியல் என்னும்போது படைப்பின் பொதுவிதிகளுக்குட்பட்டு இயங்கும் உள்ளார்ந்த கட்டமைப்பினைக் குறிக்கும். கட்டுரையில் கரு, கதைக்களம், கதைப்பின்னல், பாத்திரவார்ப்பு, செறிவுக்கதைத் திட்டம் என விரியும் நாவல் கட்டமைப்பு கூர்மை பெற்றிருக்குமாயின் கட்டுரை மேலும் செறிவிறுக்கம் பெற்றிருக்கும்.

"நுண்மையை நோக்கி நகர்தல்" என்ற பொது விதிக்கமைய தெணியான் சிறுகதைகளின் பொதுக்கட்டு மானங்களை அறிவியல் நெறிக்கமைய ஆழப்பரிசீலிக்கும் முயற்சியே "விரியத் துடிக்கும் சமூக, பண்பாட்டு வரலாற்றுப் பதிவுகளாய் தெணியான் சிறுகதை கள்" என்ற கட்டுரை. "மாத்து வேட்டி" என்ற சிறுகதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரை இராஜேஸ்கண்ணனின் ஆரம்பகால கட்டுரைகளில் ஒன்றாகும். தெணியானின் சிறுகதைகளின் கருப் பொருண்மைக்கூடாக மனிதர்களின் அறிவுத் தேட்டத்தின் களமாக அமையும் சமூக அமைப்பின் உட்கூறுகளைக் கண்டடைந்து, இந்த உட்கூறுகளுக் கிடையே நிலவுகின்ற உறவுகளையும் அந்த உறவு முறைகள் கிளர்த்தும் நடப்பியல் வாழ்வையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய தளங்களில் அதிகாரம், அங்கீகாரம் மறுக்கப்பட்டு உதிரிகளாக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் வாழ்வையும், வடமராட்சி மக்களின் வாழ்வை போர் புரட்டிப்போட்ட நிகழ்வு களையும் தெணியானின் படைப்புக்களுக்கூடாக நிதர்சனபூர்வமாய் இக்கட்டுரை அறிக்கைப்படுத்துகிறது.

இந்நூலில் "சமூக மாற்றத்தை மிருதுவாக வெளிப்படுத்தும் சமூக வரலாற்று ஆவணப் பதிவான குதிரை வாகனம்", "புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்: ஞானம் பாலச்சந்திரனின் பொய்மையும் வாய்மையிடத்து நாவல் குறித்த ஒரு பார்வை" என்ற இரு கட்டுரைகளும் படைப்பின் உள்முகக்கிடக்கையையும் அதன் இயங்குகையையும் நுண்பகுப்பு வாசிப்புக்குட்படுத்தும் கோட்பாட்டு ரீதியான விமர்சனங்களாக அமைகின்றன. சமூகப் பிற்புலத்தில் நவீன அறிவியல் நுட்பங்களை உள்வாங்கிப் படைப்புக்கள் பரிச்சயமான ஒத்திசைவுடன் அணுகப்படுகின்றன. படைப்பின் உள்ளார்த்த தன்மையை குவியப்படுத்தி நோக்கும் இக்கட்டுரைகள் சமூகத்தை காவு கொண்ட அதிகார மையங்களையும் யதார்த்தவாதத்தால் வலிந்து கோடப்பட்ட அனுபவவாத எதிர்நிலைகளையும் கட்ட வீழ்க்கின்றன. மரணத்தை அண்மித்த ஒருவனின் வாழ்வு குறித்தான சாட்சியங்களின் வழி, ஐந்து வம்சா வழியினரின் நிகழ்த்துரு மாற்றங்களை சித்திரிக்கும் ஜீவகுமாரனின் "குதிரை வாகனம்" நாவல் கட்டுரையில் கதை, பனுவல், எடுத்துரைப்பு என்னும் அடிப்படை யில் விவாதிக்கப்படுகிறது. இக்கட்டுரையில் பனுவலின் தனிக்கூறு கள் எண்ணங்களின் மெய்மைகள் வாயிலாகக் கண்டறியப்பட்டு அவை நெறிமுறைகளாக வகுக்கப்பட்டு எழுத்துருக் கொள்கின்றன. யாழ்ப்பாண சமூகத்தில் நிலவி வந்த சாதிக் கட்டமைப்பின் இறுக்கம், தளர்வு என்பன இனம், மதம் மற்றும் அனுபவச் சிந்தனை தொடர்பான முற்சாய்வின் கருத்துநிலையில் விளக்கப்படுகிறது. தமிழர் களின் புலம்பெயர்வுகள் சாதியம் தொடர்பான இறுக்கங் களைத் தளர்த்தியமையை விவரிக்கும் இக்கட்டுரை சமூக அங்கமாக கருதப்படும் நாவலில் இடம்பெறும் கதைமாந்தர் களின் செயற்பாடுகள், பழக்க முறைகள், நடத்தை முறைகளை விரிவான ஆய்வுக்குட் படுத்த வில்லை.

சமுதாய வரலாற்றின் கால கட்டத்தில் தோன்று கின்ற இலக்கியம் படைப்பாளியின் அனுபவம், உணர்வுகள், சம்பவங்கள், குறிப்பிட்ட காலகட்ட வரலாற்று நிகழ்வுகள் முதலானவற்றைப் பெற்று வருகின்ற போது சமூக புலப் பாட்டுக்குரிய தூல உருக்காட்டியாகவும் தன்னைத் தக வமைத்துக் கொள்கிறது. சமுதாயத்தின் புலப்பாடே இலக்கியம் என்பதை இது புலப்படுத்தி நிற்கிறது. தேபொனால்ட்(DeBonaid),ஹேரிலெவின்(Hary Levin), ரெனிவெல்லக் (Rene Wellek) முதலான அறிஞர்கள் வரிசையில் இராஜேஸ் கண்ணனும் சமுதாயத்துக்கும் இலக்கியத்துக்குமான உறவுமுறைகளை ஆய்வுக்குட் படுத்தியுள்ளார். இலக்கியத்தின் நிகழ் கூறுகளை கதை சொல்லியின் சமூகப்பிற்புலம், உறவுநிலைகளுக்கூடான சமூகச் சித்திரிப்பு, சமுதாயச் சிக்கல்களும் சமுதாய மாற்றங்களும் என்னும் அடிப்படையில் தன்னை ஆழப்படுத்தியுள்ள இக்கட்டுரை இலக்கியம் குறிப்பிட்ட காலத்தின் பிரதிபலிப்பு என்பதனை படைப்பாளியின் காலப்பின்னணிக்கூடாகவும் எடுத்தாராய்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் வேரூன்றிய "நவீனத்துவம்" வெகுசனமாதல், நகர்மயமாதல், ஒருமுக மாதல் என மனித இயங்கியலின் கலை, இலக்கியம், அரசியல், பண்பாடு ஆகிய அனைத்து துறைகளிலும் மையங்கொண்டு புதிய சிந்தனை வளர்ச்சிக்கு கால் கோளிட்டது. இருபதாம் நூற்றாண்டில் யதார்த்த வாதம் நீட்சே போன்ற பலரால் விமர்சனத்துக் குள்ளாக்கப்பட்டது. கலை, இலக்கியங்கள் வாயிலாக தன்னை அடையாளப் படுத்திக் கொண்ட நவீனத்துவம் கடந்த, கால கதைகூறும் மரபிலிருந்து வழுவி பொதுமை பாவக் கலைத்திறம் (Impressionism), அகத்திறப்பாங்கியல் (Expressionism), கனசதுரக்கோட்பாடு(Cubism), டாடயிஸம், அடி மனம்

மற்றும் புற இயல்பு சார்ந்த கோட்பாடு (Surrealism), அமைப்பியல்வாதம்(Structuraism), பின்நவீனத் துவம் (Post Modernism) என்னும் பன்முகத்தன்மை கொண்ட கோட்பாடுகள் வாயிலாக புத்தாக்கப் படைப்புகளைத் தந்தது. குறிப்பான்(Sign), அர்த்தத்தைக் குறியீடுகள் (Signifier) வழி தமிழிலும் பன்முகத்தன்மை கொண்ட இலக்கியங்கள் தோன்றின. குறியீடுகளைக் கொண்ட பிரதி(Text) குறியீடுகளினால் (சொற்களினால்) அர்த்தத்தை தராமல் வாசிப்போர் தரும் அர்த்தத் தினாலேயே அர்த்தம் பெற்று தன்னை நிலைப்படுத்திக் கொண்டது. ஒரு பிரதி வாசகனின் சிந்தனை, மனோபாவம் என்பவற்றுக்கேற்ப நிலைபெறுவதாலும் வாசகர் அவரவர் பிரதியில் தாம் காணும் கருத்துக்களுக்கமைய பிரதியை அளவிட முனைவதாலும் பிரதி எழுதிய ஆசிரியன் நினைக் காததைக் கூட தரமுனைந்தது. அவ்வகையான பிரதி யொன்றினை முன்வைத்து எழுதப்பட்ட கட்டுரையே "புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்: ஞானம் பாலச் சந்திரனின் "பொய்மையும் வாய்மையிடத்து" நாவல் குறித்த ஒரு பார்வை".

யதார்த்தவாதத்தை மீறிய எழுத்துமுறைகள் தோன்றத் தொடங்கிய காலத்தில் சுயமுயற்சியுடன் கூடிய செயலாக்கமுள்ள வாசகனாய் இருந்து எழுதப்பட்ட பிரதிகளின்வழி பிரதியுடன் எதிர்வினை பூண்டு எழுத்தை மட்டிட்டு தன் எழுத்தில் புதிய பரிமாணங்களைச் சாத்தியப்படுத்தியவர் இராஜேஸ்கண்ணன். ஆழமான வாசிப்போ புதிய அறிதலோ இன்றி எழுத்து முறைமை தேக்கங் கண்ட நிலையில் இராஜேஸ்கண்ணனின் கட்டுரைகள் தமிழ் எழுத்துக்களின் புதிய பரிமாணங்களை அடையாளப்படுத்தி நிற்கின்றன. ஞானம் பாலச்சந்திரன் "சித்திரக்கவித்திரட்டு", "அங்கோர் உலகப் பெருங் கோயில்", "ஈழத்தின் முதலாவது வான சாஸ்திரநூல் கிரகசார எண்ணல் கி.பி *1506*", "யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்" முதலான நூல்களின் ஊடாக பரவலாக அறியப்பட்டவர். ஆவணப்புனைவாக மையங் கொள்ளும் இவருடைய "பொய்மையும் வாய்மையிடத்து" நாவல் இனப் பன்மைத்துவம் நிலவுகின்ற ஈழநாட்டின் காலனித்துவ கால வரலாற்று நிகழ்வொன்றினை ஊடுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்டது. இராஜேஸ் கண்ணனின் இக்கட்டுரை நாவலின் வடிவக் கட்டுடைப்பு, நாவலின் நகர்வில் சித்திரகவியின் வகிபாகம், காலனிய காலத்து வரலாற்று ஆவணங்களின் பதிவு, தொல் வர லாற்றின் பொருண்மை முதலானவற்றை ஆய்வுக்குட் படுத்துகிறது. நாவலில் இடம் பெறும் வடிவ உடைவை கட்டுரை கச்சிதமாக விளக்கி நிற்கிறது. ஈழத்து தமிழ் நாவல் ஒன்றினை முதன்முதலில் "மினிமலிச கோட் பாட்டு" அடிப்படையில் அணுகிய கட்டுரையாக இதனைக் கூறலாம். "நமக்கு சந்தோஷம் தரும் விஷயத்தை தவிர, மற்றவற்றை நம்மைச் சுற்றி வைத்திருப்பது முற்றிலும் அநாவசிய மானது என்னும் "மினிமலிசம்" கோட்பாட்டின் அடிப்படையில் பாத்திர வார்ப்புக்களை நுண்ணிய நோக்கில் கட்டுரை பரிசீலிக்கிறது.

மினிமலிசக் கோட்பாட்டு பின்னணியில் எழுதப் பட்ட பிறிதொரு கட்டுரையே "நிகழ்விய வெளிப்பாட்டின் பிரதிபலிப்பு எழுத்தாக நாட்குறிப்பு எழுதலின் சுயசரிதைப் பாணி: அஜந்தகுமாரின் இனிப்புக்கதைகளை முன்வைத்து ஓர் அடையாளப்படுத்தல்". சமூக அமைப்பு பற்றிய விதிகள், செயல்முறைகள், அளவியல் முறையிலான ஊகங்கள், பொதுக்கருத்து தொடர்பான நினைவுகள் போன்றவற்றையும் சமூக வாழ்வு பற்றிய தனிமனித உற்றுநோக்கலையும் அவை குறித்தான உள்நோக்கையும் அஜந்தகுமாரின் புனை வாக்கத்தின் உளவியல் பரிமாணமாகக் கொண்டு அதனை பிரதிபலிப்பு எழுத்துக்கள், நிகழ்வியம் (தோற்றப்பாட்டியம்), புலக் காட்சித்துவம், உள்ளூரத்தூண்டும் உணர்வு வாயி லாக இராஜேஸ்கண்ணன் இக்கட்டுரையில் எடுத்துரைக் கிறார். சுயசரிதைப்பாணியில் அமைந்த இந்த நாட்குறிப்புக் களை மறைந்து போன வாழ்வின் அம்சங்களை வெளிப் படுத்தும் அனுபவத் தோற்றப்பாடுகளின் நாட்குறிப்புக் களாகவும் நனவிடை தோய்தலாகவும் கொள்கிறார். பிரதி பலிப்புக் கோட்பாட்டு அடிப்படையில் அணுகவேண்டிய இக் கட்டுரை உணர்வறிவாகவும், அறிவுணர்வாகவும் உள் வாங்கும் சமூகக் காணுகைகள் மெய்மைக்குள் ஒளிரும் புனைவுகளாக அஜந்தகுமாரின் படைப்புக்களில் உருப் பெறுவதை உணர்த்தி நிற்கிறது. ஆங்கிலத்தில் ரிக்கா லேய்ன் (Erica Layne) 'The Minimalist Way" என்ற நூலையும் சோய் மிஸ்கி (Zoe mckdy) 'The Art of Minimalism என்ற நூலையும் பிலிப் லாக் (Phillip Lark) 'DECLUTTER: The Japanese Art of Minimalism" என்ற நூலையும் எழுதியிருந் தனர். அறுபதுகளில் வேகமாக கலைகளில் பரவத் தொடங்கிய மினிமலிசக் கோட்பாடு இற்றைவரை ஈழத் தமிழர்களால் பெரிதளவில் அறியப்படாத ஒன்றாகவே யுள்ளது. தமிழில் சந்தோஷ் நாராயணன் என்பவர் "மினிமலிசம்" என்ற நூலை தமிழில் எழுதி யிருந்தார் எனபதும் இத்தருணத்தில் நினைவுகூரத்தக்கது. இன்று வாசகரால் அறியப் படாத நிலையில் இருந்த மினிமலிசக் கோட்பாட்டை இக்கட்டுரை துல்லியமாகக் கையாள்கிறது.

"கலையழகோடு இயைந்த சமூக நோக்கெனும் படைப்புப் பக்குவம்: சட்டநாதனின் சிறுகதைகளை முன் வைத்த ஒரு தேடல்" என்ற கட்டுரை மொழிவழி கலானு பவத்தை தரும் சட்டநாதன் சிறுகதைகளின் ஊடு பொருளாக நிற்கும் மனிதநேயத்தையும் மற்றும் அவர் களின் கதைவழி சித்திரிக்கும் சமூக நோக்கின் சிறப்புக் கூறுகளை யும் திறனாய்வுக்குட்படுத்துகிறது. சிறுகதை சித்திரிக்கும் தனி மனித இருப்பின் நிலைமாற்றங் களுக்கூடாக உருப்பெறும் சூழமைவுகளையும் சமூக தோற்றப்பாடுகளையும் சமூகப் பிணக்கு களையும் ஆதார மாகக் கொண்டு அவை வெளிப்படுத்தும் சமூகப் பெறு மானங்களை இக்கட்டுரை ஆராய்கிறது. யாழ்ப்பாணத்துச் சாதிய சமூகத்தின் அசைவியக்கத்தை யும் அதன் தளர்வை யும் நோக்கும் இக்கட்டுரை. பால்நிலை வேறுபாட்டால் விளையும் பெண் அடக்குமுறையையும் சமூகச் சிக்கல் களால் நலிவுறும் சிறுவர்களின் பிரச்சினைகளையும் குடும்ப வாழ்வில் ஆண் - பெண் உறவுகளுக்கிடையே நிகழ்தேறும் அடிப்படை மாற்றங்களையும் மற்றும் மனித மனங்களுக் கிடையே புதையுண்டு போயிருக்கும் விழுமியங்களையும் விளக்கி நிற்கிறது.

கே.ஆர்.டேவிட்டின் இலக்கிய வகிபாகத்தை அவர் எழுதிய சிறுகதை வாயிலாக ஆவணப்படுத்தும் முயற்சியே "நலிந்தோரின் ஏழைக்குரலாயும் எழுவோரின் புரட்சிக் குரலாயும் "நீரில் கிழித்த கோடுகள்": கே.ஆர்.டேவிட்டின் எழுபதுகளின் சிறுகதைகளை முன் வைத்த பார்வை". ஈழத்து சமூகப் பண்பாட்டு நெறியில்

கூரிய அடக்குமுறையின் வலிசுமந்த நலிந்த மக்களின் வாழ்வை, சமூக யதார்த்தங்களை இப்பிரதி ஆய்வுக்குட் படுத்துகிறது. 1970களில் நிகழ்ந்தேறிய அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள், சமூக விடுதலை இயக்கங் களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள், இனமுரண்பாடுகள் தோற்றுவித்த முரண்கள், பிளவுகள், போர்கள், இடம்பெயர்வுகள், புலம்பெயர்வுகள் முதலான பன்முகப் பார்வையாக விரியும் இக்கட்டுரை பிச்சைக்காரர், மலையகமாந்தர், சாத்திரக்காரிகள், விபச்சாரி, வீட்டு வேலைக்காரர் என புறமொதுக்கப்பட்ட, மையத்துக்கு வராத மாந்தர்களின் வாழ்க்கையை கே.ஆர்.டேவிட்டின் சிறுகதைகளுக்கூடாக புலப்படுத்தி நிற்கிறது. அதிகார மையங்களுக்குக் கீழ் அடையாளங்கள் அமுக்கப்பட்டு உப தேசியங்கள் கூர்மைப்பட்ட நிலையில் கே.ஆர்.டேவிட் டின் படைப்புக்களை நிகழ்வுகள், நோக்கியறிதல் என்ற பௌதிக அர்த்தத்தில் ஒன்றிணைத்து சமூகப்பண்பாட்டு, பொருள்சார்ந்த வகைப்பாட்டுக்குட்படுத்தி இராஜேஸ் கண்ணன் மீள்வாசிப்புக்கு உட்படுத்துகிறார்.

எட்டப்படாத புதிய பொருண்மையை நோக்கி நகரும் ஆய்வு, அறிவுப்புலத்தை விரிவாக்கம் செய்வதுடன் மனித அறிவுப்புலம் அறியாத ஒன்றை கண்டறிந்து காரண காரிய அடிப்படையில் மெய்பிக்கக் கூடியதொன்றாய் அமைவதுமாகும். உடுவில் அரவிந்தனின் சிறுகதைகளை மூலாதாரத் தரவுகள் மூலம் பகுத்தாய்ந்து, கோட்பாடு மற்றும் கருத்தியல் தளத்தில் அப்படைப்புக்களை புதிய கண் கொண்டு நோக்கி முன்வைக்கப்படும் இவ்விமர்சன மானது இராஜேஸ்கண்ணனின் மதிநுட்பத்துக்குச் சான்றாக அமையும். உடுவில் அரவிந்தனின் ஆரம்பகால படைப்பிலக்கிய முயற்சிகள் திரட்டப்பட்ட தரவுகள் அடிப்படையில் பகிரப்பட்டு பின்னர் பொதுத்தளத்தில் வாசகர் அனுபவங்களாகப் பட்டியலிடப்பட்டு போர்க் காலம், போர்க்காலத்துக்கு பின்னைய காலமென படைப்புக்கள் பாகுபடுத்தப்பட்டு ஈற்றில் சிறுகதையின் படைப்பியல் கூறுகள் திறனாய்வுக்குட்படுத்தப்படுகின்றன. ஒப்புறவாலும் ஒட்டுறவாலும் ஒன்றைக் குறிப்பாக உணர்த்துவதற்காக சிறுகதையில் அரவிந்தனால் கையாளப்பட்ட குறியீட்டு உத்திகளை செறிவிறுக்கத் துடன் வெளிப்படுத்தும் இக்கட்டுரை மீப்புனைவியல் நோக்கிலும் மொழியடிப்படையிலும் படைப்பை அணுகுகிறது.

"வாசக சிநேகமான படைப்புகள்: க.பரணி தரனின் "அல்வாய்ச்சண்டியன்" சிறுகதைத் தொகுதிக் கான ஓர் அறிமுகம்" என்ற கட்டுரை அறிவார்ந்த தேடலையோ ஆழமான கூரிய வாசிப்பையோ கோர வில்லை. வாசக சிநேகமான படைப்புகள் வாசகனை திருப்திபடுத்தும் முகமாக எழுதப்படுபவை. அவ் வெழுத்துக்கள் சாகசகதைகளாகவோ குற்றக் கதை களாகவோ மெல்லுணர்ச்சிக்கதைகளாகவோ இலட்சிய வாத எழுத்துக்களாகவோ அமைந்திருக்கும். ஆனால் பரணீதரனுடைய கதைகள் உணர்வுகளைப் பொதுப் புரிதலுடன் வெளிப்படுத்துபவை. வளரிளம் பதின்ம வயதுடைய சிறுவர்களின் ஆழ்மன உணர்வுகளை ஆழ மாகச் சித்திரிப்பவை. அன்றைய போராளிகள் இன்றைய நிலையில் எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் பேசுபவை. சாதிய சமூகத்தில் சந்ததிகளுக்கிடையே நிகழும் மாற்றங்களை வெளிப்படுத்துபவை. பரணீதரனுடைய சிறுகதைகள் சிக்கல்கள் சிடுகுகளற்று எளிமையான ஓட்டமுள்ள நேர்கோட்டுத்தன்மையில் அமைந்தமையால் "வாசக சிநேகமான படைப்புக்கள்" என இவற்றை இராஜேஸ்கண்ணன் கருதியே அத்தலைப்பை இட்டிருக்கலாம். இக்கட்டுரை "அல்வாய்ச் சண்டியன்" நூல் அறிமுகவிழாவில் நிகழ்த்தப்பட்ட வெளியீட்டு உரையின் எழுத்துவடிவம் என்பதால் படைப்பாளி குறித்த அனுபவங் களை அதிகம் பேசுகின்றதே தவிர படைப்பின் உள்முகத்தன்மைகள் குறித்து விரிவாகப் பேசவில்லை.

"படைப்பாக்கச் சிரத்தைமிக்க சிறுகதைப் படைப்பாளி புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்" என்ற கட்டுரை ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் ஆழ வேரூன்றிய சுவடுகளை நினைவுகூர்கிறது. இயற்பண்புவாதக் கதைகள் எழுதிய இரத்தினவேலோனை வாழ்வின் பிரதிபலிப்புக்களை மிகைப் படுத்தாது காட்டும் சிரத்தைமிக்க படைப்பாளி யாகவும் கணிக்கத்தக்க விருதுகளைப் பெற்ற கலைஞனாக வும் இராஜேஸ்கண்ணன் இனங்காண்கிறார். இவருடைய சிறுகதைகளின் இடத்தைப் பாத்திரங்கள் கதை நிகழும் களங்கள், கதையாசிரியர்கள் கூற்றுக்கள் வாயிலாக நிறுவ முற்படுகிறார்.

"பால்நிலைப் பாரபட்சத்தில் புலனாகாப் பண்பாட்டின் செல்வாக்கு: நிரூபாவின் "சுனைக்கிறது" சிறுகதைத் தொகுதியை முன்வைத்த தேடல்" எனும் கட்டுரை பெண்ணிலைவாத நோக்கில் கருப்பொருள் சித்திரிப்புக்கூடாகவும் மதிப்பீட்டிற்கூடாகவும் நிரூபா வின் படைப்புக்களை ஆய்வுக்குட்படுத்துகிறது. தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் பெண்ணின் வகிபங்கினையும் சிறுமி களின் உளவியல் சார்ந்த உள்ளீடுகளையும் எடுத்துரைக் கும் இக்கட்டுரை புலனாகுபவை, புலனாகாதவை என்ற பண்பாட்டு மரபுரிமைகள் பெண்ணின் ஆளுமை உரு வாக்கத்திலும் சமூகமயமாதலிலும் எத்தகைய செல் வாக்கைச் செலுத்துகின்றன என்பதனை கிராமியப் பின்னணிக்கூடாக விரிவாக ஆராய்கிறது. எலைன் ஷோவால்டர் உருவாக்கிய "கைனோ கிரிட்டிசம்" என்ற பெண்ணிலைவாத நோக்கில் நிரூபாவின் படைப்பிலக்கியம் பேசும் கரு, கரு சித்திரிக்கும் உளவியல், உளவியல் பின்னணிக்கூடாக இயங்கும் சமூக வரலாறு, வரலாறு புரட்டிப் போடும் பெண்ணின் உருப்படிநிலைகள் என்பதை விரிவான கோணத்தில் இராஜேஸ்கண்ணன் வெளிப் படுத்தியுள்ளார்.

புலமைத்தொழிற்பாடு என்னும் இலக்கிய விமர்சனம் புதிய அறிதல்முறை, சிந்தனை மரபுக்கூடாக பன்மைத்தன்மையான உரையாடலுக்கு வழிவகுத்தது. கோட்பாட்டு ரீதியான விமர்சனங்கள் தமிழிலக்கிய செல்நெறியில் விரிவும் ஆழமும்மிக்கதாக உருப்பெறத் தொடங்கின. விமர்சன நோக்குமுறையான புதிய அறிகை மரபுகளை வாசகருக்கு கையளிக்கும் முயற்சியே மயூரரூபனின் "புனைவின் நிழல்" எனும் நூலுக்கு இராஜேஸ்கண்ணன் எழுதிய முன்னுரை. காரணவாத அறிவியல்சார் முற்றொருமைகளில் இருந்து விடுபட்டு மயூரரூபனின் கருதுகோளையும் அதனை பகுத்தாயும் அறிதல் முறைமையின் கூறுகளையும் செயல்முறை களின் இயங்கு வடிவத்தையும் வெளிப்படுத்தும் கட்டுரையே "அமைப்பாக்கலை கேள்விக்குள்ளாக்கும் படைப்புநெறி: மயூரரூபனின் "புனைவின் நிழல்" குறித்த புரிதல்".

கட்டமைக்கப்பட்ட நியாயங்களை பேசாது தோற்றப்பாடுகளின் மெய்மைகளைப் பேசும் மயூரரூபனின் சமூக அடிப்படையிலான விமர்சனமுறையியல், பொதுத் தளத்தில் உய்த்துணரப்பட்டு இராஜேஸ் கண்ணனால் பட்டறிவுடன் விவாதிக்கப்படுகிறது. மயூரரூபனின் கருத்தாடல்கள், இலக்கியம் குறித்தான விவாதங்கள், தத்துவ விசாரங்கள், அமைப்பியல், பின்நவீனத்துவக் கோட்பாட்டின் மீதான விமர்சனங்கள், ஆண், பெண், தலித் தொடர்பான சமூகக் கருத்தாக்கங்கள், மொழிக்கையாட்சி முதலான விடயங்கள் திறனாய்வுக்கு உட்படுத்தப்படுகிறன. அறிதல் திறனாய்வின் புலக் காட்சியை வளம்படுத்திக் கொள்வதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் இக்கட்டுரை துணை செய்கிறது.

நூலின் இறுதிப்பகுதியில் இடம்பெறும் மூன்று கட்டுரைகளும் கவிதைகளுக்கான விமர்சனமாக அமைகின்றன. “மரபு நிலைப்பட்ட கவிஞன் ஒருவனின் புதுக்கவிதைப் பரிமாணம்” என்ற கட்டுரை த.ஜெயசீலனின் “புயல் மழைக்குப் பின்னான பொழுது” என்ற கவிதைத் தொகுதியை ஆய்வுக்குட்படுத்துகிறது. ஜெயசீலனுக்கான காலப்பின்னணியையும் நிகழ்கவிதையில் அவருக்கான இடத்தையும் மதிப்பிடும் இக்கட்டுரை ஜெயசீலன் கவிதையில் வெளிப்படும் உருவ, உள்ளடக்கம் குறித்தும் திறனாய்கிறது. இதய ராசனின் “நானும் என் தேவதையும்” என்ற கவிதைத் தொகுதிக்கான விமர்சனமே “வாழ்வியல் முரண்களால் பேதலிக்கும் வரிகள்”. இதயராசனின் கவிதையில் முகிழும் சமுதாய நோக்கையும் மார்க்சிய சித்தாந்த வேட்கையையும் நுட்பமாக ஆராயும் இக்கட்டுரை வன்னி யுத்தத்தின் வரலாற்று வடுக்களையும் மனித அவலங்களையும் மனிதஉரிமை, சுதந்திரம் முதலியவற்றின் பெயரால் நடக்கின்ற கபளீகரங்களையும் தோலுரித்துக் காட்டுகின்றது.

உண்மையாக வாழ்ந்து உன்னத சேவைகள் செய்யும் வணபிதா செபமாலை அன்புராசா அவர்களின் சிறுவர் பாடல் திரட்டின் தரத்தை மதிப்பிடும் நோக்கில் எழுதப்பட்டுள்ள கட்டுரையே “மூத்தோரின் உலகம் பற்றிய சிறுவர்களின் விமர்சனமான வாழத் துடிக்கும் வடலிகள்” என்பது. குரு அன்புராசா அவர்களின் “வாழத் துடிக்கும் வடலிகள்” என்ற தொகுப்பு இயற்கை, செல்லப் பிராணிகளைப் பாடுதல், பெரியோரைக் கனம் பண்ணுதல் என்ற சிறுவர் நூலுக்கான அடிப்படையில் இருந்து விலகி இருப்பதை சுட்டிக்காட்டும் இராஜேஸ்கண்ணன் இந்நூலில் சிறுவர்கள் மீது அர்த்தமற்ற அழுத்தங்களை பிரயோகிக்கும் பெற்றோரின் நடத்தைகளையும் சமூகத்து மனிதர்கள் அணிந்திருக்கும் போலி முகங்களையும் எடுத்துரைக்கிறார். சிறுவர்களின் அகவுலகம் பற்றிய தெளிவான புரிதலை பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுத்தும் இந்நூல் சுருக்கமாகவே திறனாய்வுக்குட் படுத்தப்படுகிறது.

நிகழ்காலத்தின் பருப்பொருண்மைகளை அல்லது ஒரு தலைமுறைக்கு முந்திய வாழ்வைச் சொல்லும் பிரதிகள் பல, ஈழத்தமிழ் இலக்கியத்தில் பார்க்கப் படாத அல்லது புரட்ட மறுக்கின்ற பக்கங் களாகவே உள்ளன. அவ்வாறு புரட்ட மறுத்த பக்கங்களை இராஜேஸ் கண்ணனின் இப்பிரதி நுண்ணாய்வு செய்கிறது. எழுத்தின் அரசியல் வன்முறையாய், அநீதி இழைப்பனவாய் மாறிவரும் சூழலில் பேசாப் பொருளை பேசத்துணியும் இப்பிரதி மூடிமறைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தின் வாழ்வை, படைப்பை ஏடேற்றுகிறது. கற்ற சமூகத்தால் புறந்தள்ளப்பட்டவர்களின் தனித்துவத்தையும் அவர்களின் இலக்கிய வகிபாகத்தையும் ஈழத்து இலக்கியத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய இடத்தையும் இராஜேஸ் கண்ணனின் கட்டுரைகள் கற்பிதமற்று நிதர்சனபூர்வமாக சாட்சியப் படுத்துகின்றன.

# நிழல்முக நண்பர்கள்

**இராஜகிருபன்**

திரையொளியில் வந்துபோகும் தீண்டா முகத்து
நிரைநண்பர் கூட்டம் நிழல்.

வேழமுடை வேந்தனுக்கும் ஆண்டிக்கும் தன்னிழல்
காலடியில் வீழும் கறுத்து.

மயிலின் நிழலென்ன? கார்மைக் குயில்மேனி
மெய்யழகோ பன்மடங்கு மேல்.

இணையவலை நண்பனோர் நாவை நனைத்துதவாத்
தூரநீர் கானல்த் துளி.

நீயழுதால் சேர்ந்தழவும் நின்சிரிப்பில் இன்புறவும்
மாயநட்புக் குண்டோ உணர்வு?

நிழல்நண்பா நீயென்? மரந்தரும் காய்தண்
நிழலுமின்னும் முற்றத்தில் நின்று.

வலைநண்பர் வாழ்விற் கலையும் உழைப்புநேரம்
உள்ளமுடல் மின்னுடன் ஐந்து.

உளமடையும் இன்பம் மறுநாள் உளமுடையும்
ஊறுநிழல் நட்பினுக் குண்டு.

விம்பநண்பர் கூட்டமேவீண் மெய்த்தோழர் நான்குபோதும்
நம்மைத்தோள் மேலுயர்த்தும் நம்பு.

வெள்ளித் திரையினை விட்டெழுந்து வாவெளியே
நல்லநண்பர் நால்வரைத் தேடு.

■ ஜெயபாரதி கௌசிகன்

# இசைஞானியும் வயலினும்



இசையானது மனித நாடித்துடிப்பில் கலந்துள்ளது. இசையையும் மனிதனையும் பிரிக்க முடியாத அளவுக்கு இசைக்கும், மனிதனுக்கும் பந்தம் உள்ளது. தாயின் கருவறையில் குழந்தைக்கு எவ்வாறு பந்தம் உள்ளதோ அதே போல் மனிதனுக்கும் இசைக்கும் ஆதி முதல் அந்தம் வரை பந்தம் உள்ளது. இசை பற்றி அறிந்து கொள்ளல் ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்பது போன்ற செயற்றிட்டமாகும். இசையானது பண்டையகாலப் பண்ணிசையில் தொடங்கி கர்நாடக இசையாக வளர்ச்சியடைந்தது. இன்று இசைக்கே அரசனாகக் கர்நாடக இசை விளங்குகின்றது. மேலைத்தேய இசை, ஹந்துஸ்தானி இசை, பக்தி இசை , மெல்லிசை, நாட்டார் இசை, திரை இசை, கானா இசை, "றாப்" இசை அனைத்துமே கர்நாடக இசையின் அடிப்படை ஸ்வரங்களான ஸரிகமபதநி எனும் ஸப்தஸ்வரங்களிலிருந்தே தோற்றம் பெறுகின்றன. எவன் ஒருவன் கர்நாடக இசையை முறைப்படி பயில்கிறானோ அவனால் உலகிலுள்ள எந்த விதமான இசையையும் பாட முடியும் என்பது எனது நம்பிக்கை. அந்த வகையில் இசைஞானி இளையராஜா உலகிலுள்ள அனைத்து மக்களையும் தனது இசையால் கட்டிப் போட்டவராவார். தமிழ்த்திரையிசையானது இசையை இலகுவான முறையில் மக்கள் மத்தியில் இரண்டறக் கலக்கச் செய்யும் ஓர் களமாக அமைந்துள்ளது. இசைஞானி இளையராஜா திரையுலகில் புகுந்த காலம் இசைக்கே ஓர் பொற்காலம் என்று கூறுவது சாலப் பொருந்தும். " Ilaiyarajas music is therapy for soul." நரம்புக்கருவி, தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி என அனைத்து வகையான இசைக்கருவிகளையும் கையாளக் கூடிய வல்லமை பெற்றவர். அவர் ஹார்மோனியத்தில் கைவத்தால் போதும் இசையானது அடைமழையாகப் பொழியத் தொடங்கி விடும்.

திரையிசைப் பாடல்களில் பல்வேறு இசைக் கருவிகளைக் கையாண்டு இசையை வழங்கிய இவர் வயலின் வாத்தியத்தினை மிகச் சிறப்பாகத் தனித்துவமான பாங்கில் கையாண்டிருப்பதும் விசேட அம்சமாகும். அவரது இசைக்குழுவில் குறைந்தது 5 Cello Violin மற்றும் 30 Cello Violin ஒன்றாகப் பல்வேறு பரிமாணங்களில் ஒலிப்பதை அவதானிக்க முடிகிறது. அவரது வயலின் இசையமைப்புக்கள் மூலம் பலரது நோய்கள் குணமடைந்துள்ளதையும், மக்களது மன உளைச்சல் நீங்கி தெளிவான மனநிலையில் வாழ்வதையும் அனுபவ ரீதியாக எம்மால் உணர முடிகிறது. பல்வேறுபட்ட புதிய புதிய ஒலியிழைகளை அவர் வயலின் மூலம் கட்டமைத்துள்ளார்.

1969ம் ஆண்டு காலப் பகுதியில் இளையராஜாவுடன் இணைந்த பிரபல வயலின் வாத்தியக் கலைஞர் "வயலின் பிரபாகர்" இன்று இசைஞானியின் இசைக் குழுவில் Conductor ஆக பணியாற்றி பிரமாண்டமான இசையமைப்பை தனது கைகளின் கட்டுப்பாட்டிற்குள் வெளிப்படுத்துகிறார். அவர் வயலின் வாத்தியத்தை King of Instruments - violin எனக் குறிப்பிடுகிறார். வயலின் வாத்தியமானது close to human voiceஅதாவது மனிதனின் குரலோடு ஒத்து ஒலிக்கக் கூடிய ஓர் வாத்தியம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

1991ம் ஆண்டு தளபதி திரைப்படத்தில் "சுந்தரி கண்ணால் ஒரு சேதி" என்ற பாடலுக்கு இசைஞானியவர்கள் தனது Sympony format இல் குறுகிய நேரத்தில் இசையமைத்ததையும் பிரபாகர் சிலாகித்துக் கூறியுள்ளார். மேலும் தாம் அனைவருமே தம்மை அறியாமலே எழுந்து Standing avationவழங்கினோம் என்கிறார். குழுவில் உள்ளவர்கள் பாடலின் chords ஐ மறந்து விடுவார்கள். ஆனால் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அனைத்து பாடல்களின் chords உம் இசைஞானியின் மனதில் பதிந்திருக்கும் அத்தனை அசாத்தியத் திறமை மிக்கவர் இசைஞானி என்றும் கூறுகிறார்.

வயலின் பிரபாகர் அவர்களால் இசைஞானியின் இசையில் "புன்னகை மன்னன்" திரைப்படத்தில் வாசிக்கப்பட்ட திஸ்ரநடையில் அமைந்த இசைக் குறிப்பான

"ஸரி ஸரீகமாபா //,;;;;;;; பாம //
கா, மா, கரீ, காரி // ஸா;; // :::::" என்பது

பல்வேறு நுணுக்கங்களோடு அமைந்து மேலைத்தேய நுட்பங்களையும் இணைத்து மிக மிக விறுவிறுப்பாக வாசிக்கப்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்று இன்றும் எம்மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளது. மேலும் "காலகாலமாக வாழும் காதலுக்கு நாங்கள் அர்ப்பணம்" என்ற பாடலிலும் இதே யுத்தியை கையாண்டு அந்தப் பாடலின் காட்சியில் வயலினுடன்

ஆடிப்பாடுவதாகவும் அமைக்கப்பட்டு வயலின் வாத்தியத்திற்கே ஓர் தனித்துவத்தை ஏற்படுத்துவதாக அவ்விசையமைப்பு அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

"அந்திமழை பொழிகிறது" என்ற பாடலின் முகிழ்நிலை இசையில் (Introduction music) ஸ கா கா மா தா நி த ம க / ஸ கா கா மா தா நி த ம க // என்ற வயலின் இசையை அடுத்து அந்தி மழை பொழிகிறது எனத் தொடங்கும் போது வசந்த இராகத்தைப் பிழிந்து சாறெடுத்துப் பாடலைக் கேட்கத் தூண்டும் வகையில் காதிலே தேன் பாய்வது போல் அந்த இசையமைப்பு அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அகவுணர்ச்சிக்கு ஏற்பவும் அவரவர் அனுபவவெளிக்கு அமைவாகவும் முடிவிலிக் கதவுகளை அவ்விசை திறந்து விடுகிறது.

மாயாமாளவகௌளை இராகத்தில் அமைந்த "பூங்கதவே தாழ்திறவாய்" என்ற பாடலில் ஆரம்பக் காட்சியான கதவுகள் திறக்கப்படும் காட்சியில் கர்நாடக இசை இராகத்தை அழகாக, விறுவிறுப்பாக மேலைத் தேய ஹார்மனிக்கல், பாலிபோனி இசையைத் தழுவி ஸ்வரத் தொகுதிகளை ஒன்றன் பின் ஒன்றாகவும், ஒரே நேரத்திலும் வயலின் மூலம் இசைக்க விட்டு வியப் படையச் செய்துள்ளார். கதாநாயகி வெட்கப்படும் காட்சியைத் தத்ரூபமாக முதலில் ஸ்வரத்தட்டில் ஸமகமபஸ என அடுத்து வயலினில் ஸரிஸநிநீ மீண்டும் ஸ்வரத்தட்டில் ஸமகமபஸ ஒலிக்க அடுத்து மாகரீஸ என வயலினில் வாசித்து இசையிலே ஒளியூட்டுகிறார் இந்த அமைப்பானது கதாநாயகி வெட்கப்படும் காட்சிக்கு மிகமிகப் பொருந்தும் வகையில் தேய்வழக் கற்ற புதுமையோடு அமைந்துள்ளது. மேலும் கதா நாயகியும், கதாநாயகனும் குளத்தில் மூழ்கி எழும் காட்சிகளுக்கு

பா:: மா பா :: கா/ மபதநிதாமா / பா ::: //
மா. மா. மா மமபகரீஸா/ ரீ .ரீ . ரீ / ஸரிஸநீ :: //
நீ. நீ. நீ கா :::/ கா மா. க ரீ / ஸா :::://

எனும் ஸ்வரப் பிரயோகம் சாலப்பொருத்தமாகவும் மாயமாளவகௌளை இராகத்தின் ஸ்வரூபத்தைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. "பூங்கதவே தாழ்திறவாய்" என்ற பாடலில் வயலின் வாத்தியம் அனைத்துப் பகுதிகளிலும் பிரதானமாக வாசிக்கப் பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

மத்தியமாவதி இராகத்தில் அமைந்த "ஆகாய கங்கை பூந்தேன் மலர்சூடி" என்ற பாடலின் இடை யிசைப் பகுதியில் கதாநாயகன் தூரத்தில் நடந்து வந்து கொண்டிருக்கிறான். கதாநாயகி தனிமையில் இருந்து கதாநாயகனை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டி ருக்கும் காட்சியில் வயலினிசையில் கூட்டிசையாக

ஸஸஸஸஸா நீ/ஸஸஸஸஸா நீ/ஸஸஸஸ ஸா நீ ஸஸஸஸ ஸா;//

என வாசிக்கப்படும் சமநேரத்தில் வேறு வயலின் தொகுதியினர்

பநி / ஸா நிஸ:: நிபஸா//::: நிஸ:: //
ரீஸ::ரிஸ::நிநிஸ் // நிமமநிபமநிஸ //

ரிஸரிஸரிஸரிஸரிஸரிஸ என்று அதீத எடுப்பில் ஒரே தடவையில் வாசிக்கும் படியான இசையமைப்பு சிருங்காரரசத்தின் உச்ச நிலையை அப்படியே வெளிக் கொணரும் வகையில் அமைந்துள்ளது.

"பொன்மாலைப் பொழுது" என்ற பாடலில் இடையிசையாக அமைந்த வயலிசை பாடலை மேலும் மெருகூட்டுவதோடு வாழ்க்கை பற்றிய புதிர்களுக்கு பதிலாகவும் அமைகிறது.

இசைஞானியவர்கள் வயலினுக்கு பிரதானம் கொடுத்து இசையமைத்த படங்களில் சிந்துபைரவி படம் குறிப்பிடத்தக்கது. அதில் சாரமதி இராகத்தில் "பாடறியேன் படிப்பறியேன்" என்ற பாடலுக்கு கர்நாடக இசைப் பாணியில் அனைத்து ஸ்வரங்களுக்கும் போட்டி போடும் வகையில் வயலினின் இசையை வழங்கி யுள்ளார். மேலும் "நானொருசிந்து காவடிச் சிந்து" என்ற பாடலில் "சிந்துபைரவி" இராகத்தில் தாயும் மகளும் சந்திக்கும் தருணத்தை வயலினிலும், புல்லாங்குழலிலும் மாறி மாறி வழங்கி தாய்பிள்ளைப் பாசத்தை வெளிப் படுத்தியுள்ளார். மேலும் கலைவாணியே என அமைத்த கல்யாணி இராக அரோகண அமைப்பில் மட்டும் அமைந்த பாடலில் வீட்டில் மங்கள நிகழ்வைக் காட்டும் வகையில் மங்களகரமாகவும், தாயும் மகளும் மீண்டும் சந்திக்கும் கண்ணீர் சிந்த வைக்கும் பாசக்காட்சியை சோகமாகவும் கல்யாணி இராகத்தில் வயலின் மூலம் மாறிமாறிக் காட்டும் திறமை இசைஞானி ஒருவரையே சாரும்.

இது போலவே தாய்மூகாம்பிகை படத்தில் ஜனனி ஜனனீ பாடலில் யமன் கல்யாணியை வயலினில் சிறப்பாக காட்டியுள்ளார். முதன் முதலில் "சல்லாபம்" எனும் இராகத்தை இப்படத்தில் புகுத்தி இசையரசி எனும் பாடலினூடாகவும் வயனின் பங்களிப்பை கர்நாடக இசைப்பாணியில் வழங்கியுள்ளார்.

இவ்வாறாக ஏராளமான பாடல்களில் இசைஞானியவர்கள் வயலினிசையை உயிரோட்டமாகக் காட்டியுள்ளார். ஆயிரம் அர்த்தங்களை வயலினிசை யால் அடுக்கிச் செல்கின்ற எண்ணற்ற பாடல்களைத் தந்துள்ளார். அழியாத நினைவுகளை மீளுருவாக்கும் அவ்விசையின் அரவணைப்பிலே சிறு குழந்தையாகி விடுகின்றோம். பழைய போக்குகளைப் புரட்டிப் போடுகின்ற புதுமையினை பல பாடல்களில் வயலின் இசையால் நிகழ்த்தியுள்ளார். அத்தகைய பாடல்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

- அன்னக்கிளி உன்னைத்தேடுதே - அன்னக்கிளி
- பூவில் வண்டு கூடும் - காதல் ஓவியம்
- புத்தம்புதுக் காலை - அலைகள் ஓய்வதில்லை
- காற்றில் எந்தன் கீதம் - ஜானி
- மெட்டி ஒலி காற்றோடு - மெட்டி
- பொத்திவச்ச மல்லிகை மொட்டு - மண்வாசனை
- தென்றல் வந்து தீண்டும் போது - அவதாரம்
- பருவமே புதிய பாடல் - நெஞ்சத்தைக்கிள்ளாதே
- ராமனின் மோகனம் - நெற்றிக்கண்
- ஒரு ஜீவன் அழைத்தது - கீதாஞ்சலி
- ஓ.. வசந்தராஜா - நீங்கள் கேட்டவை
- வானமேகம் - புன்னகை மன்னன்
- வானுயர்ந்த சோலையிலே - இதயக் கோயில்
- நீ ஒரு காதல் சங்கீதம் - நாயகன்

இடைக்காலப்பாடல்களில் மட்டுமன்றி தற்காலப் பாடல் களுக்கும் வயலினிசையைச் சிறப்பாகக் கையாண்டு "இசைஞானி" என்பதை நிரூபித்துக் காட்டி வருகிறார். அவரின் இசை ஏழேழு ஜென்மத்திற்கும் தொடர்ந்து ஆன்மாக்களை ஆனந்தப்படுத்தட்டும். ●

■ பா.இரகுவரன்

# தொண்டைமானாறு முதல் கெருடாவில், பருத்தித்துறை தும்பளை வரை

அறிமுகம்

தொண்டைமானாறு என்ற ஊரின் பெயர் மிகுந்த பிரபல்யம் பெற்றதாகும். இதற்கு இவ்வூரில் அமைந்துள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் கீர்த்தி காரணமாக அமைந்திருக்கின்றது. இவ்வாலயத்துக்கு அப்பாலும் தொண்டைமானாற்றுக் கிராமம் பலவேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளின் மையமாக இருந்திருக்கிறது.

இந்தக் கட்டுரை அவை அனைத்தையும் வெளிக் கொணருவதாக எழுதப்படவில்லை. தொண்டைமானாற்றுடன் தொடர்புடைய ஒரு சில விடயங்கள் மாத்திரம் இதில் இடம்பெற்றிருக்கின்றன. இனிவரும் காலத்தில் அவற்றை எழுதும் நோக்கம் உள்ளது.

இக்கட்டுரையில் இடம்பெறும் முக்கியமான நபர்களின் பெயர்களை ஆரம்பத்திலேயே குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். முதலாம் குலோத்துங்க சோழன், கருணாகரத் தொண்டைமான், முதலாம் விஜயபாகு மன்னன், சங்கிலி குமாரன்*, சங்கிலி மன்னன்*, கரையாரன் இளவரசன், குவைறோஸ் - போர்த்துக்கேயப் பாதிரியர், பெர்னடி பெயரோஸ் - போர்த்துக்கேய பாதிரியார், ஆரியச்சக்கரவர்த்தி அழகேஸ்வரன், பரராஜ சேகரன், சினுமகாப்பிள்ளை, பராக்கிரமபாகுமன்னன்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் தொடர்பான புராணக்கதைகளூடாகவும், செவி வழிக் கதைகளூடாகவும் அறியப்பட்ட விடயங்களுள் முற்காலத்தில் இவ்வாலயத்தின் அருகே வல்லிஆறு என்ற பெயருடைய நன்னீர் ஓடை இருந்ததாகவும், தொண்டை மானாற்றுப்பகுதி முன்னாளில் மணலூர் என்று பெயர் பெற்றிருந்ததெனவும் இவ்வூரின் தென்பகுதியில் அமைந்திருக்கும் பெருவெளியானது வல்லிஆறு என்ற நன்னீரேரியின் அமைவுகாரணமாக "வல்லிவெளி" என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும் இப்பெயரே பின்னாளில் மருவி வல்லைவெளி என்றாகி இன்று நடைமுறைப் புழக்கத்தில் இருந்து வருகிறது என்று அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

சோழரின் ஆட்சிக்காலத்தில் முதலாம் குலோத்துங்கசோழனின் (கி.பி 1070 - 1120) படைத் தளபதியாக விளங்கிய கருணாகரத்தொண்டைமான் என்பவன், இலங்கை அரசனான முதலாம் விஜயபாகு வுடன் போர் செய்வதற்காக இலங்கை வந்தான். போரில் வென்று தொண்டைமானாற்றில் தனது படைத்தளம் ஒன்றை நிறுவினான். சோழர்தளபதியான கருணாகரத் தொண்டைமான் நன்னீர் ஓடையான வல்லி ஆற்றைப் பாக்கு நீரினை கடலுடன் கலக்கச்செய்தான். இதற்காக மணற்றிடல் பகுதியை வெட்டி அகற்றினான். மேலும் ஆற்றை ஆழ, அகலப்படுத்தினான். கடலுடன் சங்கமித்த தால் நன்னீர் ஆறு உப்பாறு ஆகியது. இதனை வெட்டுவித்த சோழத்தளபதியின் பெயரால் "தொண்டைமானாறு" என்ற பெயரும் பெற்றது.

2

கி.பி 16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துக்கேயர் (பறங்கியர்) யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசனைச் சந்தித்து தாம் வியாபாரம் செய்ய வந்ததாகக் கூறி அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார்கள். காலப்போக்கில் யாழ்ப்பாண அரசின் உள்நாட்டு விவகாரங் களிலும் தலையிடத்தொடங்கினார்கள். இதனால் யாழ்ப்பாண அரசருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் பகை உண்டாயிற்று. இரு பகுதியினருக்கும் இடையில் ஏறத்தாழ நூறு ஆண்டுகளாகப் பெரிய அளவிலும், சிறிய அளவிலுமான போர்கள் நடந்தன. இவ்வாறான போர் ஒன்றில் போர்த்துக்கேயர் மன்னாரைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டை கட்டி படைகளை வைத்திருந்து தமது நிலையை ஸ்திரப்படுத்திக்கொண்டார்கள்.

3

செ.நாகலிங்கம் என்பவர் "தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும் என்ற பல தகவல்களைக் கொண்ட தனது நூலில் பக்கம் 25 இல் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் சங்கிலி குமாரன் என்ற பெயருடைய அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் யாழ்ப்பாண அரசின் பாதுகாவலனாக இருந்தான். தேச பக்தனாக இவன் போர்த்துக்கேயரின் நாடு பிடிக்கும் முயற்சியையும் யாழ்ப்பாண மக்களிடையே கத்தோலிக்க மதத்தைப் புகுத்தும் முயற்சியையும் பலமாக எதிர்த்தான். என்றாலும் யாழ்ப்பாண மக்களின் ஒரு பகுதியினர் சங்கிலியை எதிர்த்துக் கலகம் செய்துகொண்டிருந்தார்கள்.

இக்காலத்தில் கரையாரன் என்ற சிற்றரசன் ஒருவன் தமிழ்நாட்டில் இருந்து படைகளுடன் சடுதியாய் யாழ்ப்பாணம் வந்து சங்கிலி மன்னனுக்கு எதிராகக் கலகம் செய்து கொண்டிருப்பவர்களை அடக்கி இங்கு சமாதானத்தை நிலை நாட்டினான்.

போர்த்துக்கேயர் கொழும்பு, மன்னார் போன்ற இடங்களில் இருந்து பெரும் படை திரட்டி நல்லூருக்கு வந்து கி.பி 1619 ஆம் ஆண்டில் சங்கிலி மன்னனுடன் பெரும்

போரை நடத்தினார்கள். இந்தப்போரில் கரையாரன் சிற்றரசன் 20,000 படையினருடன் யாழ்ப்பாண மன்னன் சங்கிலிக்கு உதவியாக நின்றான். ஆனாலும் இந்தப் போரில் சங்கிலி குமாரனும், கரையாரன் சிற்றரசனும் தோல்வி அடைந்து தப்பி ஓடினர். மேற்படி தகவல்களை போர்த்துக்கேயப்பாதிரியாரான குவைறோஸ் அவர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

தப்பி ஓடிய கரையாரன் இளவரசன் பற்றிய தகவல் அடுத்த 4 வது பகுதியிலும், சங்கிலிகுமாரன் பற்றியதகவல் இந்தக் கட்டுரையின் இறுதிப்பகுதியிலும் எழுதப் பட்டுள்ளது.

குறிப்பு

1. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னன் சங்கிலியன், மற்றும் சங்கிலிகுமாரன் ஆகிய பெயர்கள் இரண்டும் ஒரு நபரையே குறித்து நிற்கின்றன என வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன.

2. மேலும் யாழ்ப்பாணத்தை சங்கிலி என்ற பெயருள்ள இரண்டு மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் முறையே முதலாம் சங்கிலி, இரண்டாம் சங்கிலி என்ற பெயர்களால் வேறுபிரித்துக் காட்டப்படுகின்றனர்.

3. இரண்டாம் சங்கிலி, சங்கிலி பண்டாரம், ஒன்பதாம் பரராசசேகரம் ஆகிய பெயர்களும் யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனையே குறித்து நிற்கின்றன.

4.

கரையாரன் சிற்றரசன் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்று தஞ்சாவூர் நாயக்க அரசனிடம் பெரும் படையைப் பெற்று தொண்டைமானாற்றில் வந்திறங்கி, அங்குள் கோணேசர் குளத்துக்குத் தெற்கில் இருந்த வயல் வெளியில் படையுடன் வந்திறங்கினான். இந்தப்படையின் வருகையை அறிந்து பருத்தித்துறையில் தங்கியிருந்த போர்த்துக்கேயப்படையினர் இரவோடிரவாக நெல்லியடிப் பாதையால் தொண்டைமானாற்றுக்கு வந்து அங்கு தங்கியிருந்த தமிழர் படை மீது திடீர் தாக்குதல் நடாத்தினார்கள்.

இந்தப்போரில் தமிழர் படையின் தலைவன் கொல்லப்பட்டான். அவனது தலையை வெட்டி ஒரு தட்டத்தில் வைத்து வெள்ளைச்சேலையால் மூடி, யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்சென்று அங்கிருந்த போர்த்துக்கேயத் தேசாதிபதியின் முன் வைத்ததாக குவைறோஸ் பாதிரியாரின் நூல் கூறுகின்றது. இத்துடன் யாழ்ப்பாண அரசுசார்பான வீரவரலாறு தொண்டை மானாற்றில் முடிவுக்கு வந்தது.

மேற்படி தலைக்குரிய படைத்தலைவன் கரை யாரன் என்ற சிற்றரசன் எனவும், இவன் தொண்டை மானாற்றில் வாழ்ந்த கங்கபல்லவச் சிற்றரசர் குடும்பத்தின் தலைவன் என்றும் திரு.செ.நாகலிங்கம் அவர்கள் தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி விடயம் 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராட்சி மகாநாட்டில்செ.நாகலிங்கம்அவர்கள்தான் வாசித்த ஆய்வுக் கட்டுரையிலும் இடம்பெற்றிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு

மேற்படி பகுதி 3, 4 ஆகியவற்றில் இடம்பெறும் விடயங்கள் திரு.செ.நாகலிங்கம் அவர்கள் எழுதிய சிறுநூலில் இருந்து பெற்றப்பட்டவை ஆகும்.

5

தொண்டைமானாற்றுடன் தொடர்புடையதொரு கிராமமாக இதன் கிழக்காக கெருடாவில் என்ற கிராமம் அமைந்திருக்கின்றது. வல்வெட்டித்துறைக்கும், தொண்டைமானாற்றிற்கும் இடையில் இந்தக்கிராமம் உள்ளது. இந்தக்கிராமத்தின் மண்டபக்காடு என்ற குகைப் பகுதியும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது.

இதுபற்றி திரு.ந.ஆனந்தராஜ் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதிலிருந்து சில விடயங்களை இங்கு தருகின்றேன் : வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் மேற்காகச் செல்லும் தொண்டைமானாறு வீதியில் உள்ள கெருடா வில் வடக்குப் பிரதேசத்தில் காணப்படும் மண்டபக்கிடங்கு சரித்திரகால வரலாற்றைக் கொண்ட ஒரு முதுசமாக விளங்குகின்றது.

பராக்கிரமபாகுவின் இராட்சியத்தில் உள்ள புத்த சாசனத்தை ஆரியச்சக்கரவர்த்தி கவர்ந்து சென்றமையால் ஆத்திரமடைந்த பராக்கிரமபாகுவானவன் அழகேஸ்வரன் என்ற யாழ்ப்பாண அரசனான ஆரியச்சக்கரவர்த்தியை அழிப்பதற்காக சுமார் 20 வருடங்கள் முயற்சிசெய்து பெரும் படையைத் திரட்டி அவனைப்போருக்கு அழைத்தான்: அவனது அறைகூவலை ஏற்ற ஆரியச்சக்கர்வர்த்தியும் பெருந்தொகையான கடற்படையோடும், நிலப்படை யோடும் அவனை எதிர்ப்பதற்காக ஆயத்தங்களை மேற்கொண்டான். கொழும்பிலும், பாணந்துறையிலும் தனது பெரும்படைகளை இறக்கினான்.

நடந்த போரில் பராக்கிரமபாகுவிடம் தோல்வியுற்ற ஆரியச்சக்கரவர்த்தி தப்பிவந்து தொண்டைமானாற்றுக்கு அருகே உள்ள கெருடாவில் பிலத்துவார மண்டபத்தில் ஒழித்திருந்தான். பிலத்துவார மண்டபத்தில் ஒழித்திருந் தான். பிலத்துவார வாயிலில் ஒரு மண்டபமும் உள்ளே சிறு மாளிகையும் இருந்தது. நுழைவாயிலில் சுண்ணத் தினால் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. பெரும் படையுடன் வந்த பராக்கிரமபாகுவின் மகன் ஆரியச்சக்கர வர்த்தியைக் கொன்று அவனது மனைவிமார்களையும் கைது செய்து கொண்டு சென்றதாக யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது. இங்கு காணப்படும் குறையும், அதிலிருந்து சின்னமலைக் கடற்கரைவரை செல்லும் பாதாளவழியும் முன்னைய தமிழ் அரசர்களால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்ததென வரலாறு கூறுகின்றது.

ஆனால் இன்று அந்தப்பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை அறியாதவர்கள் அந்தப் பிரதேசங் களில் தொடர்ச்சியாகச் சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்து கொண்டிருப்பதால் காலப்போக்கில் அந்த இடம் அழிவடை யும் அபாயம் ஏற்படலாம். இவ்வாறான சமூகவிரோத, மற்றும் சூழலைப் பாதிக்ககூடிய நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவதில் அந்தப்பிரதேச சமூக அமைப்புக்கள் செயற் பட வேண்டும். அதனைத்தமிழ் பண்பாட்டின் மரபுரிமைச் சொத்தாகப் பேணுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சரின் கீழுள்ள சுற்றுலாத்துறை அமைச்சு மேற்கொள்ளவேண்டும்.

6

வரலாறு, தொல்லியற் துறைப்பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா அவர்களும் தனது நூலில் "தொண்டைமாணாற்று வடிநிலமும் வடமராட்சியின் நகரப்பண்பாட்டுருவாக்கமும்" என்ற கட்டுரையில் மேற்படி விடயங்களை விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் பல விடயங்களையும் வெளிக்கொண்டுவந்துள்ளார்.

1540 ஆம் ஆண்டில் பரராஜசேகரன் சங்கிலி (மன்னன்)யுடன் ஏற்பட்ட பிணக்கில் தன்னிடத்தில் உள்ள திரவியங்களையும், முடி முதலிய அரிய ஆபரணங்களையும் சங்கிலிக்குத் தெரியாமல் அகற்றிக்கொண்டு போய் பிலத்துவாரத்தில் சேமித்துவைத்துவிட்டு ஒரு தொகை திரவியத்தோடு திருக்கேதீஸ்வரம் சென்று பின்னர். இராமேஸ்வரம் சென்றான் எனக்குறிப்பிட்டுள்ளார். (மண்டபக்காடு என்ற இடம் முன்பிருந்த பிலத்துவாரம் என்று அழைக்கப்படுகின்றது) இவை பற்றி ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை அவர்கள் 1915 ஆம் ஆண்டு பதிப்பித்த யாழ்ப்பாணச்சரித்திரம் என்றநூலில் பக்கம் 42 இல் குறிப்புக்கள் உள்ளன என பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1620 ஆம் ஆண்டு சினுமகாப்பிள்ளை என்னும் அதிகாரி தஞ்சை நாயக்க மன்னனின் உதவியுடன் 12 கப்பல்களில் 1000ற்கும் மேற்பட்ட வீரர்களுடன் தொண்டைமானாற்றில் இறங்கினான். பெரும் படையொன்று வருகின்றது என அறிந்த போர்த்துக்கேயர் மன்னாரில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வழியாக வரும்போது பயத்தினாலும், ஆத்திரத்தினாலும் பெண்களைத் துன்புறுத்தியும், குழந்தைகளை வெட்டியும் பல கொடுமைகளைச் செய்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சி பற்றி 1617 ஆம் ஆண்டு ஒட்டுக்கலில் (போர்த்துக்கல்) பிறந்து 1635 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வசித்தவருமான பெர்னடிபெயரோஸ் என்ற பாதிரியார். The Temporal and Spritual Conquest of Ceylon என்னும் நூலில் பாகம் - 02 இல் பக்கம் 636 இல் குறிப்பிட்டுள்ளார்.

7

இந்தக்கட்டுரையின் பகுதி 03 இல் குறிப்பிட்டபடி நல்லூரில் போர்த்துக்கேயருக்கும் மன்னன் சங்கிலிக்கும் இடையில் நடந்த போரில் சங்கிலி மன்னனுக்கு உதவியாகக் கரையாரன் என்ற சிற்றரசனும், யாழ்ப்பாண அரசகுடும்பத்தைச் சேர்ந்த சங்கிலிகுமாரன் என்ற வீரனும் கலந்து கொண்டனர். போரில் தோற்றுப்போய்த்தப்பி ஓடிய கரையாரன் சிற்றரசன் பற்றிய தகவல்களை இக்கட்டுரையின் பகுதி 03 இல் தந்திருந்தேன். இனி சங்கிலிகுமாரன் பற்றிய விடயங்களைப் பார்ப்போம்.

சங்கிலிகுமாரன் தப்பி ஓடிவந்து பருத்தித் துறையில் உள்ள தும்பளை மேற்கு கலட்டிக்கிராமத்தில் சிலகாலம் தலைமறைவாக இருந்துள்ளான். தும்பளை மேற்குப் பகுதியில் ஏராளமான சோதிடர்களும், சித்த வைத்தியர்களும் பல நூற்றாண்டுகளாகப் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். யாழ்ப்பாணத்து அரசபரம்பரையினரும் சோதிட வைத்தியத்துறையில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்கள் என்பது பலரும் அறிந்த வரலாறு ஆகும். இதனால் யாழ்ப்பாண அரச பரம்பரையினருடன் தும்பளை மேற்கு வைத்தியசோதிடர்களுக்கு தொடர்பு ஏற்பட்டதாகப் பரம்பரை பரம்பரையாக செவிவழிக்கதைகள் பதிவாகியுள்ளன. சங்கிலி குமாரன் சந்திரபானு என்ற பெயரில் தும்பளையில் ஒழிந்திருந்ததாக வும் அறிய முடிகிறது. சங்கிலிகுமாரன் தும்பளைமேற்குப் பகுதியில் ஒழிந்திருந்த காலத்தில் இரவுவேளைகளில் எமது வைத்திய சோதிடர்கள் அவனுடன் கலந்துரையாடியும், தர்க்கித்தும் தமது சோதிட வைத்திய அறிவை மெரு கேற்றினர். சங்கிலி குமாரன் என்ற சந்திரபானு ஒழிந்திருந்த இடம் இன்றும் படிக்கிறவளவு என்ற பெயருடன் காணப்படுகின்றது.

தும்பளை மேற்கு வைத்திய சோதிடரான கந்தப்பர் என்பவரும் சங்கிலிகுமாரனை தும்பளையில் போஷித்தவர்களில் முக்கியமானவர்.

பருத்தித்துறை கிழக்கில் வங்கக் கடலோரம் அமைந்துள்ள கற்கோவளம் கடற்கரைக் கிராமத்தில் வாழ்ந்த ஆழ்வான் என்ற கடலோடியின் உதவியுடன் சங்கிலி குமாரனை இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல கடற்கலத்தில் அனுப்பிவைத்தனர். துர்அதிஷ்டவமாக பருத்தித்துறைக் கடலில் போர்த்துக்கேயரால் சங்கிலி குமாரன் கைது செய்யப்பட்டான். இந்தியாவுக்கு அவனைக் கொண்டு சென்று கோவா என்ற இடத்தில் தூக்கிலிட்டனர்.

மேற்படி செய்திகள் எனது ஊரான தும்பளை மேற்கில் செவிவழிச்செய்தியாக இருந்து வந்தது. 2001 ஆம் ஆண்டு "ஊரும் வாழ்வும்" என்ற தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம் என்ற நூலில் பதிவு செய்துள்ளேன். இந்தத் தகவலை பலமுதியவர்களிடம்இருந்து கேட்டுத்தெரிந்து கொண்டேன். அவர்களுள் கலாநிதி பண்டிதர் சச்சிதானந்தன் மிகவும் பிரபல்யமானவர். இவரின் தந்தை வழி முன்னோர்கள் 1642 ஆம் ஆண்டு தொடக்கம் தும்பளையில் இருந்து ஏட்டுச் சுவடிப்பஞ்சாங்கத்தை வெளியிட்டு வந்தவர்கள். சங்கிலிகுமாரனை ஆதரித்தவர்களுமாவர்.

**பிற்குறிப்பு**

இக்கட்டுரையை எழுதும் போது எனக்குள் பல சந்தேகங்கள் எழுந்தன. அவை குழப்பம் தந்தன. ஆயினும் நான் அறிந்த சில விடயங்களைத் தொகுத்து பதிவு செய்துள்ளேன். முக்கியமாக இக்கட்டுரையில் இடம்பெறும் சங்கிலிகுமாரன் சங்கிலிமன்னன் இருவரும் ஒரே நபர் என்றே பலரும் குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட சம்பவங்கள் வரலாற்றில் நடந்திருக்கின்றன என அறியமுடிகின்றது. இக்கட்டுரையில் சந்தேகம் தரும் விடயங்களை வரலாற்று அறிவு கொண்ட வாசகர்கள் தீர்த்து வைக்க வேண்டுகிறேன்.

**கட்டுரைக்கான உதவிகள்**

1. கலாநிதி சு.குணேஸ்வரன் - வரலாற்றின் சுவடுகளில் இருந்து தொண்டைமாணாறு (இணையக்கட்டுரை) மேலும் இவர் தொண்டைமாணாறு, கெருடாவில் கிராமங்களுக்கு என்னை அழைத்துச்சென்று பல்வேறு இடங்களையும் காட்டி அவை பற்றிய வரலாற்று விளக்கங்களையும் நூல்களையும் தந்தவர் ஆவார்.

2. செ.நாகலிங்கம் - தொண்டைமானாறும் செல்வச் சந்நிதியும் தொண்டைமானறு மக்களின் வரலாறு, கலாசாரம், பண்பாடு சிறுநூல் இரண்டாம் பதிப்பு 2009.04.19 இந்த நூலே இந்தக்கட்டுரையை எழுதத்தூண்டி நின்றது.

3. பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும். (2015)

4. ந.ஆனந்தராஜ் - மயிலியதனையில் அமைந்துள்ள பழைய தமிழ் அரசர்களின் மண்டபக்கிடங்கு முகநூல் கட்டுரை 2017

5. கலாநிதி தி.நாகலிங்கம் சிவயோகன் - சுப்பிரவம்சம் - தும்பளை மேற்கின்ற வரலாற்றுப்பொக்கிசம் நூலின் முகவுரை 2014(நூல் தொகுப்பு விமலா ஆறுமுகம்)

6. பா.இரகுவரன் - ஊரும் வாழ்வும் - தும்பளைக்கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம் (2001)

**உடப்பூர் வீரசொக்கன்**

# வித்தியாலயம் ஓர் கண்ணோட்டம்



**நூல்:**
வித்தியாலயம்
**ஆசிரியர் :**
இஸட். ஏ. சன்ஹிர்
**வெளியீடு :**
தமிழ் பிரிவு, வலய கல்விப் பணிமனை, புத்தளம்
பக்கம் :- 567

கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அறிந்திராத ஒரு சமூகத்துக்கு எதிர்காலமில்லை என்பதற்கிணங்க, புத்தளம் வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட தமிழ் மொழி மூலப்பாடசாலைகளின் வரலாற்று அதன் செல்நெறிகளை தாங்கிய நூலாக மலர்ந்து மணம் பரப்பி காத்திரமான சிருஷ்டி ஆக்கங்களுடன் வெளி வந்துள்ளது "வித்தியாலயம்" என்னும் பொக்கிஷம். தனித்துவமான, பண்பாடு, பாரம்பரிய பரிமாணத்தையும் வரலாற்று பின்புலத்தையும் கொண்ட இடம் தான் புத்தளம் மாவட்டமாகும். இதன் ஒரு கூறாக புத்தளம் வலய பணிமனைக்கு உள்வாங்கப்பட்ட தமிழ் பிரிவாகும். இப்பிரிவிலுள்ள பாடசாலைகளின் சிறப்பான்மை, ஆளணி வளம், பௌதீக வடிவங்களை சாங்கோபாவத்துடன் ஆய்வு ரீதியில் வடித்துள்ளார் இப்பிரிவின் முன்னால் ஓய்வு நிலை பிரதி கல்வி பணிப்பாளர் இஸட். ஏ. சன்கிர் அவர்கள்.

ஒரு சமுதாயத்தின் இருப்பையும் தொல்லியல் தடங்களையும், அதன் எச்சங்களையும் கோடிட்டுக் காட்டுவதுதான் சார்ந்த ஆன்மீக தாபனங்களும், அதனோடு சார்வு கொண்ட அறிவுக்கண்ணை திறக்க வித்திடும் கல்விக் கூட்டங்கள் என்பதையும் கல்வி சமுகத்தினால் விதந்துரைக்கப்படுகின்றதென்பது வெள்ளிடைமலை. இதை உள்ளீடாகக் கொண்டு புத்தளம் மாவட்டத்தில் தமிழ் மொழி மூலப்பாடசாலைகளின் வரலாற்று பின்புலம் தொல்லியல் அம்சங்கள் தடங்களின் தரவுகள், அதனோடு அமைந்த எச்சங்கள் என்பவற்றை துல்லியமாக காய்தல் உவர்ப்பின்றி முன்வைத்துள்ளார் இந்நூலாசிரியர் சன்கின் அவர்கள். உண்மைத் தன்மைகளை யதார்த்த நோக்குடன் துல்லியமாக எடுத்தியம்பியுள்ளார்.

அது பக்கசார்பின்றி ஆய்வுச் செல்நெறிகளுடன் முன்வைக்கும் போது தான் அது கல்வி புலத்தாலரின் விதந்துரைக்கு உட்படுத்தப்படும். இதை உள்ளீர்க்கும் முகமாக இவ்வாசிரியரின் ஆய்வு நெறி தொல்லியல் தரவுகள், பன்மைத்தன்மை என்பன நீண்ட கால ஆய்வின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.

புத்தளம் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புக்களின் தடயங்கள் மேலோங்கி நிற்கின்றது. இங்கு சிறப்பு பெற்ற ஆன்மீக தலங்கள் பல அமைந்திருக்கின்றன. ஏன் இதன் தொல்லியல் எச்சங்கள் கூட அடையாளப்படுத்துகின்றன. இவையெல்லாம் இதன் பண்டைய முதுசங்களை கோடிட்டுக் காட்டுகின்றன. இம்மாவட்ட அறிவு வளர்ச்சி என்பது அந்நியர்களின் வருகையுடன் தோன்றி மிசனரி பாடசாலை, திண்ணை பாடசாலை, மதரசக்களின் என்பன கல்வி வளர்ச்சிக்கு கால் கோளிடப்பட்டன என்பது கட்டியம் கூறுவதாக இருக்கின்றது. இங்கு காலத்துக்குக் காலம் பெரும்பான்மை மக்களின் புறச் செயல்கள் என்பன முனைப்பு பெற்று துளிர்விடும் இக்காலச் சூழலில் இப்பிரதேசத்தில் வாழும், வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம், இனக் குழமங்கள் வாழ்வியல் பண்புகள், தனித்துவ வரலாறுகள் கலை கலாசார பண்பாட்டின் நெறி முறைகள் சமய சார்பான பண்புகள், சடங்கு சம்பிரதாயங்களிடன் முறைமைகள் என்பனவற்றை ஒவ்வொரு இனம் சார்ந்த ஆய்வாளர்களின் வெளியுலகம் காண வைப்பது கடப்பாடாகும்.

அந்த வகையில் துல்லியமாக தமிழ் மொழி பாடசாலைகளின் தரவுகளையும், கல்விப்புல தொன்மைகளையும் இவ்வாசிரியர் பதிவுகள் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளமை காலத்தின் கட்டாய கடமையாகும். இவ் ஆசிரியரின் பணி பாராட்டக் கூடியது. குறிப்பாக இவ்விதழில் காணப்படும் கட்டுரைகள் ஓர் இனக்குறிப்பின் தொனிப் பொருள் கோடிட்டுக் காட்டப்படுவ தாக தென்படுகின்றது. சகோதர இனமாக தமிழரின் தனியான கல்வி வளர்ச்சிப் போக்கைப் பற்றி ஆய்வு நோக்குடன் எடுத்தேம்பாதது ஏன் என தமிழ் கல்வியாளர் கேள்வி எழுப்புகின்றதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

புத்தளம் முஸ்லிங்கள் வரலாறும் வாழ்வியலும், புத்தளம் வரலாறு மரபுகளும், உடப்பூர் வரலாற்று மரபுகளும், தமிழ் பேரறிஞர் சைமன் காசிக் செட்டி வரலாறு, H.S இஸ்மாயில் ஒரு சமூக அரசியல் ஆய்வு, கதை சொல்லும் உடப்பு, அலை கடலோரத்தில் இன்னோரன்ன பல நூல்கள், இனக் குறிப்புகளை அடையாளப் படுத்தி வெளி வந்தன. ஆனால் இந்நூலானது தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் வரலாற்று தொன்மங்கள் கல்வி புல செந்நெறிகள், கல்வி என்னும் அறிவு கண்ணுக்கு வெளிச்சம் பாச்சிய வித்தியாலயங்களின் சிறப்புக்களை வளங்களின் தன்மைகளை பூடகமாக அறிந்து தெரிந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இப்புத்தகம் இனக்காணப்பட்டுள்ளது.

சமகாலத்தில் ஆய்வு கண்ணோட்டங்கள் பெரும்பாலும் இலக்கிய சார்பான குறியீட்டுக்களை முன்னுதாரணமாகக் கொண்டுதான் ஆய்வு முயற்சிகள் முன்னடுக்கப்படுகின்றன. ஆனால் இந்நூலாசிரியர் கல்வி புல தொழில் சார்புடையவர். ஓய்வு நிலை பிரிதி கல்வி பணிப்பாளர். இவ்வலயத்தில் தமிழ் மொழிப்பிரிவில் 70 பாடசாலைகள் அமைந்திருக்கின்றன. இதனால் கல்வி புலத் தகவல்களை நேரடியாகவும், தொடர்பாடல் மூலமாகவும் கேள்விக் கொத்துக்கள் மூலமாகவும் விபரங்களை மதிப்பீடு செய்து ஒப்பியல் ஆய்வு ரிதீயில் திரட்டியுள்ளார். இந்த ஆய்வு முயற்சியானது நுனிப்புல் மேச்சலின்றி அறிவு முனைப்பில் ஆத்மார்த்த எண்ண பாங்குடன் வடித்து நுகரத் தந்துள்ளார் என்பதை கூறத்தான் வேண்டும். புத்தள வலய தமிழ் மொழி பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியின் தனித்துவம், அதன் வகிபாகம், ஆளணி பௌதீக வளங்களின் பாங்கு கள் பாடசாலைகளின் அமைப்பாங்குகள் அதனோடு இணைந்த தடயங்கள் தரவுகள் என்பவை காய்தல் உவப்பின்றி படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன்

பாடசாலைகளின் தெளிவு சுழிவுகளை இனம் காட்டும் தன்மையானது கல்வி சார்வு அறிவு ஜீவிகள் கூட விதந் துரைக்கக் கூடிய தன்மையை கொண்டிருக்கின்றது. இந் நூலின் வெற்றிக்கு நூலாசிரியரின் உழைப்பின் பின்புலமும் தீராத தேடலும், தொடர் வாசிப்பும் என்று கூட கூறலாம்.

இவ்வலயத்தில் முதல்முதலாக செய்திமடலாக கன்னி முயற்சி 2012.12.24 மலர்ந்து, முகிழ்ந்து வித்தியாலய மாக பூத்து குலுங்கியது. அதனோடு நகர்ந்த ஈராண்டு கால முயற்சியின் வெளிப்பாட்டால் ஆர்வ மிகுதியால் பூரண மிக்க காத்திரமான நூலாக கனதியான தரவுகளுடன் இன்று வெளிவந்துள்ளது. வியக்கத்தக்க வித்தியாசமான பார்வையில் இவ்வித்தியாலயம் என்ற நூல் கல்வி உலகில் ஒரு பொக்கிஷம். இது தமிழ், முஸ்லிம் கல்வி புலத்தில் சார்புடையவர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் பயன் தரும். கல்வி புல வளர்ச்சியின் முதுசமாக திகழும் என்பது யதார்த்த உண்மையாகும். இந்நூலாசிரியர் தனது உள்ளக்கிடைக்கையின் வெளிப்பாட்டு எண்ணங்களை இவ்வாறு விதந்துரைக்கின்றார். தனது நீண்ட கால கனவின் எண்ணத்தை 31 உப தலைப்புக்களில் கருத்துரையை வெளிப்படுத்தியுள்ளார். மிசனரின் வருகையும் வித்தியாலயங்களின் தோற்றம் என்று தொடங்கி முஸ்லிம்களின் கல்வி, பெண்களின் கல்வி, இந்துக்களின் கல்வி, புத்தளத்தின் நூற்றாண்டை கண்ட வித்தியாலயங்கள், சாஹிரா கல்லூரி, புத்தளம் இந்துவித்தியாலயங்கள், புத்தளம் கல்வி கோட்டம், தமிழ் பிலவு இன்னோரன்ன பல விடய பரப்பில் அறிந்து கொள் ளக் கூடிய முனைப்பில் பதிவேட்டியுள்ளார் ஆக்கியவர்.

ஆதார மற்ற வரலாற்றினை புனைவு இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்தி வரும் இக்காலத்தில் 1505 ஆண்டு போர்த்துகேயரின் வருகையுடன் புத்தளம் பிராந்திய கல்வி துறையின் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடும் ஆங்கிலேயர் புத்தளம் நகரில் அமைந்துள்ள காஸிமிய்யா அரபுக் கல்லூரி 1884.01.10 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தமிழ் கல்வி பணிகளில் முன்னோடி பிதாமகனான இம்மாவட்ட பிரதேச மூத்த கல்விமான் சைமன் காசிச் செட்டி 1812 தமிழ் பாடசாலையின் ஆரம்ப கல்வி ஆரம்பித்துள்ளார். கல்விக்கு ஒளியாச்சிய வித்தகர். 1902 ஆண்டு அறிக்கை யின் படி 10 றோமன் கத்தோலிக்க மிசனரிப் பாடசாலை களும் முகம்மதியன் பாடசாலைகளும் ஒரு புரட்டஸ்தா ந்து தனியார் பாடசாலையும் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது என பதிவு செய்யப்பட்டுள்ளது. புத்தளம் நகரில் ஆரம்ப பாடசாலையாக கணிக்கப்படுவது சென் அன்றூஸ் கல்லூரியாகும். இது 1818 இல் ஆரம்பிக்கப் பட்டது. புத்தளம் சாஹிரா கல்லூரி 1945.2.12 கல்வி அமைச்சரி C.W.W.கன்னங்கராவினால் திறந்து வைக்கப் பட்டது. ஆவணக்குறிப்பேட்டிலிருந்து இதை ஆசிரியர் தந்துள்ளார். இவ்வித்தியாலயம் பூத்துக் குழுங்கும் புதுமைகளை மனப் பூரிப்புடன் மலர்ந்து மணம் விரித்துள்ளது. இதில் 18 ஆளுமைகளின் வாழ்த்துச் செய்திகள் 567 பக்க வடிவமைப்புடன் ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ளது. 2000 ஆசிரியர்களின் வர்ணப்படங்கள் தாங்கி எழில் கோலம் பூண்டுள்ளது. இந்த வித்தியாலயம் தரும் விதந்துரையில் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸின் சமுகவியல் நோக்கில் புத்தளம் மாவட்டத்தில் நவீன கல்வியின் அறிமுகம், ஓய்வு நிலை கல்வி பணிப்பாளர் ஜவாத் மரைக்காயரின் புத்தாயிரம் ஆண்டும் புத்தளம் பிரதேசத்தின் கல்வி நிலையும், ஏ.எம்.நஹியாவின் யுத்தத்தால் இடம் பெயர்ந்து புத்தளம் பிரதேசத்தில் வாழும் வட புல மாணவர் கல்வி ஓர் அனுபவப் பகிர்வு, எம்.எச்.எம். நவாஸ் தந்த புத்தளம் ஆசிரியர் கல்வி பாட இணைப் பாடம்,வெ.அருணாகரன் வடித்த ஆரம்பக்கல்வியின் வாசிப்பு, எழுத்து திறன், இடை நிலை அடைவு மட்டத்தில் செலுத்தும் செல்வாக்கு என்ற கட்டுரைகள் மலர்ந்துள்ளன.

வித்தியாலயங்களின் முழு விபரங்கள் ஆதியோடு அந்தமாக இத்தகவல் களை பெற வேண்டி 9 உப பிரிவின் கீழ் விடயங்களை பெற்றுள்ளார். இந்த வலயத்திலுள்ள நான்கு கோட்டத்தில் உள்ள 70 பாடசாலைகளின் விபரங்கள் உள்ளீர்க்கப் பட்டுள்ளது. இதில் முஸ்லிம் பாடசாலைகள் 51 இந்து கத்தோலிக்க பாடசாலைகள் 19 இவ்வலயத்தில் இயங்கி வருகின்றது. புத்தளம் வலய தமிழ் பிரிவின் தனி வழி பயணத்தின் சில பணிகளையும் செம்மைப் படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இவ்வலயத்தில் கோட்ட மட்டத்தில் வெளியிடப்பட்ட 19 கையேடுகளும், சஞ்சிகைகளின் விபரங்களும் செம்மைப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வலயத்தில் இது வரையும் வலய பணிப்பாளராக 15 ஆளுமைகள் பணிப்பாளர் நிலையில் பணியாற்றியுள்ளார். புத்தளம் வலய தமிழ் பிரிவு பிரதி பணிப்பாளர்களாக இது வரையும் 52 தமிழ் பேசும் பிரதி பணிப்பாளர்கள் தமது கடமையை நேர்த்தியான முறையில் முன்னெடுத்துள்ளார்கள். இவ்வலயத்தில் முதல் தமிழ் பிரதி பணிப்பாளர்களாக 1996 இலிருந்து டி.எஸ்.சீவரத்தினம் தொடக்கம் தற்போது உள்ள ஆ.கமலேந்திரன் வரை இதுவரை 16 பேர் கடமையாற்றியுள்ளனர். மற்றும் 36 பிரதி கல்விப்பணிப்பாளர்கள் சீரான முறையில் தமது கடமையை மேற்கொண்டுள்ளனர்.

சுவடி காப்பகம் என்ற தொனியில் கடந்த கால நினைவு நிகழ் காலத்தில் இரை மீட்டுவதாக அமைந் துள்ளது. 1913.02.17 திகதி புளிச்சாக்குளம் வித்தியாலயத் தின் முதல் பதிவை ஆவணப்படுத்தியுள்ளனர், அதே போல கல்வி அமைச்சராக இருந்த C.W.W கன்னங்கரவினால் கற்பிட்டி அல்- அக்ஸ பாடசாலையின் முதலாவது சம்பளத்திரட்டு புத்தகப் பதிவை 1946.11.22 எழுதியுள்ளமை கடந்த கால நினைவு சுடரை எம் கண் முன் நிறுத்தி யுள்ளார். காலச்சுவடுகளாக காலத்தின் நினைவின் பொக்கிசமாக என்றும் நினைவு கொள்ளும் ஆவணமாக 60 சுவடிகள் தரப்பட்டுள்ளது. இது ஆசிரியரின் தேடலில் கிடைத்த வெற்றி முகத்தோற்றத்தின் ஏறு நிலையாகும்.

புத்தள வலயமானது புத்தள வடக்கு, புத்தளம், தெற்கு, கற்பிட்டி கோட்டம், பள்ளம கோட்டம், ஆனமடு கோட்டம் என்ற பிரிவுகளுக்குட்பட்டது. இது பரந்து விரிந்த நிலத் தொடர்பை கொண்டிருக்கின்றது. இந்த நான்கிலும் 205 பாடசாலைகள் இப்பிராந்திய மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கு கலங்கரை விளக்காக பிரகாசித்து நிற்கின்றது. மற்றும் இவ்வலயத்தில் இந்த வித்தியால யங்கள் அமைந்துள்ள இடம், தூரம் பாடசாலை நிலை எவ்வகை பாடசாலைகள் பால் நிலை மாணவர் விபரங்கள் என்பன விபரமாக தரப்பட்டுள்ளன. இந்த புத்தக மலரில் கண்ணைக் கவரும் வண்ணப்படங்கள் பார்வைக்கு இதமாக இருப்பது ஆசிரியர் குழாத்தின் குழு நிலைப்படங்கள் மணம் விரித்துள்ளது.

எம்.கே.முருகானந்தன்

டாக்குத்தரின் தொணதொணப்பு - 4

# நோயாளியை திட்டாதீர்கள் காரணியை விரட்டுங்கள்



ஆனை வரும் முன்னே மணி ஓசை வரும் பின்னே என்பார்கள்.

ஆனால் அன்றோ எட்டுத் திக்கும் கிடுகிடுக்க வைக்கும் அப்பனின் திட்டுக் குரல் வந்தது முன்னே, நோயாளியின் முட்டு கீதம் வந்தது பின்னே!

மூச்சை வேகமாக உள்ளெடுத்துக் கொண்டிருந்தான். உள்ளெடுப்பது விரைவாக நடந்து கொண்டிருந்தது. ஆனால் மூச்சை வெளிவிடுவது தான் சிரமமாகவும், ஓசையுடன் கூடியதாயும் இருந்தது. அவனுக்கு வயது 10–12 அளவில்தான் இருக்கும். முகத்தில் அப்பிக் கிடந்த சோர்வு வியர்வையுடன் சேர்ந்து சிதம்பிக் கொண்டிருந்தது. மூக்கு மடல்கள் வேகமாக விரிந்து சுருங்கின. நெஞ்சறை பொருமிப் பொருமி வதங்கிக்கொண்டிருந்தது.

ஆம் கடுமையான ஆஸ்த்மா இழுப்பின் இயலாமை. தொய்ந்து, நொந்து அடியெடுக்க முடியாமல் மெதுநடையில் வந்துகொண்டிருந்தான்.

"சும்மா கிடக்கிறானே. ஆடாத ஆட்டம் ஆடுறது. இப்ப முட்டு வந்தால் நாங்கள் வேலையை விட்டுட்டு இவரோடை ஆஸ்பத்திரிக்கு திரிய வேண்டிக் கிடக்கு." ஆதரவு கொடுக்க வேண்டிய கை, அணைக்கா விட்டாலும் பரவாயில்லை எடுத்தெறிந்து பேசுவதைக் கேட்க எரிச்சல்தான் வந்தது. அதை அடக்கிக் கொண்டு,

"இப்படி முட்டு அடிக்கடி வாறதோ" திசை திருப்ப முயன்றேன்.

"இல்லை. எப்பெண்டாலும்தான் வாறது. அது எங்கை வாறது?. இதுகள் தாங்களாதானே தேடுறது. இன்ரவெலுக்கை சும்மா கிடக்க ஏலாது. வியர்க்க களைக்க விளையாடுறது...

.. ஏனடா இண்டைக்கும் விளையாடினனியோ. ஏன் வாயைத் திறந்து சொல்லன். வாற கோபத்துக்கு ஒரு அடி விட்டால்தான் சரி"

திசை மாற மறுத்து மந்தை மாடு அதே வழியில் தொடர்ந்தது.

பாவம் பிள்ளை! அதின்ரை வேதனை புரியாமல் கத்துகிற தகப்பன். மிருகங்களை விட கேவலமான சீவன்.

தகப்பனின் அலட்டலைக் கேட்டு நேரத்தைத் தொலைப்பதில் பிரயோசனமில்லை என்பது புரிந்தது. மூச்சைத் தணிப்பதற்கு Nebulize பண்ணுவதற்கு ஆயத்தம் செய்தேன்.

இன்று இவனுக்கு மட்டுமல்ல வேறு பலருக்கும் கூட இன்று ஆஸ்த்மா கடுமையாக இழுத்தது. அதில் பலருக்கு இவனுக்கு செய்தது போலவே காஸ் மூலம் மருந்து (Nebulize) பிடிக்க வேண்டியிருந்தது.

ஆனால் அவர்கள் யாரும் விளையாடியிருக்க வில்லை! இதை அந்த அப்பனுக்கு சொல்லி என்ன பிரயோசனம்!

ஆஸ்த்மாவிற்கு விளையாட்டு கூடாதென்றில்லை. உண்மையில் ஆஸ்த்மா நோய் உள்ளவர்கள் தினமும் உடற் பயிற்சி செய்வது நல்லது என்றே கூறப்படுகிறது. உடற் பயிற்சி எல்லோருக்கும் அவசியமானது, ஆஸ்த்மா உள்ளவர்கள் உட்பட. ஏனெனில் சுவாசத் தொகுதி உட்பட முழு உடலையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு அது உதவுகிறது.

"ஆஸ்த்மா இருக்கும் போது ஓடினால், விளையாடினால், உடற் பயிற்சி செய்தால் மூச்செடுக்கக் கஸ்டமாக இருக்குதே" என நீங்கள் சொல்வது கேட்கிறது.

உண்மைதான். ஆஸ்த்மா இழுக்கும் போது உடலுக்கு வேலை கொடுத்தால் அத் தருணத்தில் அதிகரிக்கவே செய்யும். அதற்காக அவற்றைக் கை விடக் கூடாது. ஆஸ்த்மாவைத் தணிப்பதற்கான இன்ஹேலரை உபயோகித்துவிட்டு அவற்றைச் செய்தால் பிரச்சனை எதுவும் இருக்காது.

"இண்டைக்கு முழுகிப் போட்டு தயிரும் வாழைப் பழமும் சாப்பிட்டவ" ஆஸ்த்மா இழுக்கும் மனைவியைக் கூட்டிக்கொண்டு வந்தவர் குரலை அடக்கிக் கொண்டு என் காதில் போட்டார். வாயை வயிற்றைக் கட்டி கவனமாக இருக்காமல் விட்டுட்டு இப்ப தொல்லைப் படுகிறா என்று சொல்லாமல் சொல்லி மனைவியில் குற்றம் சாட்டும் தொனி முனைத்து நின்றது.

"அவ சீவியத்திலை ஒரு நாளும் முழுகினதும் இல்லை, தயிரும் வாழைப்பழமும் சாப்பிட்டதும் இல்லை. இண்டைக்கு மட்டும்தான் செய்தவவோ?" என்று கேட்க வேணும் போலிருந்தது. பெரிய மாங்காய் பூட்டு உயிர்தெழுந்து வந்து என் வாயை அடக்கியது.

முழுகி தலையைச் சுத்தமாக வைத்திருப்பது சளி பிடிப்பதைக் குறைக்குமே ஒழிய கூட்டாது. பால் தயிர் வாழைப்பழம் உட்பட எந்த உணவுமே ஆஸ்த்மாவைத் தூண்டுவதில்லை. வாழைப்பழம், தயிர், வெண்டிக்காய் போல பல ஆரோக்கியமான உணவுகளை குளிர் சாப்பாடு என்று சொல்லித் தவிர்க்கும் "பரம்பரை நோய்" எங்கள் சமூகத்தின் முதிசம்.

சில உணவுகள் ஆஸ்த்மாவைத் தூண்டும் என்பதும் எமது பாரம்பரிய நம்பிக்கை

உணவுகளால் ஒவ்வாமை ஏற்படுமே ஒழிய ஆஸ்த்மா தூண்டப்படுவது இல்லை என்றே

சொல்லலாம்.

“இவன் எந்த நேரமும் பிரிட்சைத் திறந்து கூல் தண்ணி குடிக்கிறவன். குடிக்க வேண்டாம் என்று சொல்லுங்கோ. குளிர்ச் சாப்பாடுகளுக்கு சளிபிடிக்கும் எண்டு எத்தினை முறை சொன்னாலும் கேக்கிறானே? நீங்கள் சொன்னால்தான் கேப்பான்” ஆஸ்த்மா இழுப்புப் பையனைக் கூட்டி வந்த அம்மாவின் முறைப்பாடு இது.

“தம்பி நீ கூல் தண்ணி குடிக்கிறதெண்டால் குடி. இரவிலை வெக்கையெண்டாலும் குடி. பரவாயில்லை. ஒண்டும் செய்யாது” எண்டு நான் சொன்னதும் அம்மா கொதித்து எழும்பினா.

அம்மாவுக்கும் கொஞ்சம் கூல் தண்ணி குடுத்தால்தான் கொதி அடங்கும்!

ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் போன்றவற்றை உட்கொண்டால் தொண்டை அரிப்பது போன்ற உணர்வு சிலருக்கு ஏற்படுவதுண்டு. அதற்கும் ஆஸ்த் மாவிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. திடீரென குளிர்பட்டதால் தொண்டையில் ஏற்படும் சாதாரண பிரதிபலிப்பு அது.

“இவ்வளவு காலமும் இல்லாத இந்த கோதாரி விழுந்த வருத்தம் இப்பத்தான் எனக்கு வந்திருக்கு” என்றார் மூட்டு இழுப்போடு வந்த ஒரு 65 வயது தாத்தா.

ஆஸ்த்மா என்பது பொதுவாக சிறுவயது வியாதி என்றொரு எண்ணம் பெரும்பாலானவர்களுக்கு இருக்கிறது. இளவயதில் ஏற்படும் சளித்தொல்லை வயது கூடக் கூட மறைந்துவிடும் என்பார்கள். குழந்தைப் பருவத்திலிருந்து பெரியவனாகும் போது சுவாசத் தொகுதி விரிவடைவதாலும், நோயெதிர்புச் சக்தி பெருகு வதாலும் அவ்வாறு நேரலாம். ஆனால் இது எப்போதும் உண்மையல்ல. முதல் முதலாக முதுமையில் ஆஸ்த்மா வருபவர்கள் பலர் இருக் கிறார்கள். அதே போல சிறுவயதில் வந்த ஆஸ்த்மா முதுமையிலும் விட்டுப்பிரியாதவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

“ஏ.சி யுக்குள்ளை வேலை செய்ததாலைதான் பிரச்சனை“ என்றான் ஒரு இளைஞன். ஆனால் அவன் பல வருடங்களாகவே ஏ.சி போட்ட அலுவலகத்தில் தான் வேலை செய்கிறான் என்பதை நான் அறிவேன். எனவே அது காரணமல்ல.

“ஏ.சி கிடந்திட்டுப் போகட்டும் முதலில் சிகரட் புகைப்பதை நிறுத்தும்” கராராகச் சொன்னேன்.

அவனைப் பரிசோதிக்க கிட்ட சென்ற போது பக்கெண்டு அடித்த சிகரட் வாடைதான் அவ்வாறு சொல்ல வைத்தது. சிகரட் புகை மட்டுமல்ல, நுளம்புத் திரி புகை, விறகு எரிக்கும் புகை போன்றவை ஆஸ்த் மாவைத் தூண்டும் என்பது நன்கு அறியப்பட்ட விடயம்.


அதே போல தலையணை, படுக்கை விரிப்பு, குசன் கதிரைகள், மென்மையான பொம்மைகள் போன்ற வற்றில் மறைந்திருக்கும் தூசிப் பூச்சி ஆஸ்த்மாவைத் தூண்டும் முக்கிய காரணிகளாகும். அவற்றை அடிக்கடி தோய்த்து வெயிலில் காயவிட்டு ஒழிக்கலாம்.


சிகரட் புகை போலவே கற்பூரம் சாம்பிராணி புகைகள், பெயின்ட் மணங்கள், பொடி ஸ்ப்ரே தூசி தட்டுதல் போன்றவையும் ஆஸ்த்மாவைத் தூண்டு பவையாகும். நாய், பூனை போன்ற செல்லப் பிராணி களின் ரோமம் போன்றவையும் முக்கிய காரணங்கள் என்பதால் ஆஸ்த்மா தொல்லை உள்ளவர்கள் அவற்றைத் தவிர்க்க வேண்டும். அல்லது அதற்கேற்ற சுற்றுச் சூழலை உருவாக்க வேண்டும்.

அன்று சளி இருமல் என்று வந்தவர்கள் பலர். அதிலும் பலருக்கு மூச்சு விடுவதிலும் சிரமம் இருந்தது. அன்றைய சீதோஸ்ண நிலை காரணமாயிருக்கலாம். வெப்ப நிலை குறைவாக இருந்தது. காற்று வீச்சு அதிகமில்லை. ஈரப்பதம் அதிகமாயிருந்தது. கடுமையான கால நிலைகளும் திடீரென மாறும் காலவெப்ப நிலைகளும் ஆஸ்த்மாவை தூண்டும் காரணிகளில் முக்கியமானது.

எனவே பாவம் நோயில் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களை “நீ செய்தது தான் காரணம் எனத் திட்டி அவர்கள் வேதனையை அதிகரிக்காதீர்கள்.

நோயாளியை திட்டாதீர்கள் நோய்க் காரணியை விரட்டுங்கள். ●






இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.